**PHOTONTECH**




*175, Main Street*
*Trincomalee*
075 6602486



அறைவு 02 இயம் 45 July 05 - 11, 2014

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு

MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பக்கங்கள் : 16 விலை : 30.00 பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்





பக்கம் 03

# திருப்பியனுப்பப்படும் அகதிகள் தொடர்பில்

# இந்தியா அமைதி

## திருகோணமலைக்குக் கொண்டுவரப்படுவதாக அச்சம்

### 37 குழந்தைகளில் 03மாதக் குழந்தையொன்றும் உள்ளது

### "நாங்கள் நியூசிலாந்துக்குச் செல்வதாகவே நினைத்தோம்"

--பயணிகள்--

நடுக்கடலில் தடுக்கப்பட்டு இலங்கைக்குத் திருப்பியனுப்பப்படவுள்ள அகதிகளின் முதலாவது கப்பல் தொடர்பாக இந்தியா மௌனம் சாதித்துவருகின்றது.

இம்முதலாவது கப்பலில் 153 அகதிகள் இருப்பதாகவும் அவர்கள் இந்தியாவிலிருந்தே தமது பயணத்தை ஆரம்பித்ததாகவும் முதற்கட்ட தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில் அவர்களை இந்தியாவிற்கு நாடு கடத்துவதற்குப் பதிலாக ஏன்? இலங்கைக்கு நாடுகடத்தப்படுகின்றார்கள் என்பது தொடர்பில் கருத்துக்கள் எதனையும் வெளிப்படுத்தாது இந்தியா மௌனமாக இருக்கின்றது.

இதேவேளை இவ்வகதிகளைக் கையேற்க இலங்கைக் கடற்படையின் கப்பலொன்று பயணித்திருப்பதை உறுதிப்படுத்துவதாக இலங்கைக் கடற்படையின் இரண்டாவது சிரேட்ட அதிகாரி தமக்குத் தெரிவித்திருப்பதாக திஒஸ்ரேலியன் செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

கடந்த ஜூன்மாத நடுப்பகுதியில் தென்னிந்தியக் கடற்பரப்பிலிருந்து

13

# வீட்டுக் கூரையில் ஏறியவர் கைது



மட்டக்களப்பில் வைத்தியசாலை வீதியில் ஆண் தாதியர் ஒருவரின் வீட்டுக்கூரையில் மதியம் 10மணியளவில் காணப்பட்ட ஒருவரை அயலவர் மடக்கிப் பிடித்து காவல்துறையிடம் கடந்த 2ம் திகதி ஒப்படைத்திருந்தனர்.

காவல்துறைக் குற்றப்புலனாய்வு விசாரணைகளின் போது அவர் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்தவர் எனத் தெரியவந்ததுடன் அவர் பாதுக்கையைச் சேர்ந்த

13

# சொகுசு வாகன மோசடி

## 400 வாகனங்கள் சிக்கின



(சண்டே டைம்ஸ்)


புதிய, அதிசொகுசு வாகனங்களை இறக்குமதி செய்யும் போது இறக்குமதிப் பத்திரங்களில் மேற்கொள்ளப்பட்ட திருகுதாளங்கள் ஊடாக பெருமளவு வரி மோசடி செய்யப்பட்டுள்ளமை வெளியாகியுள்ளது.

இம்மோசடியின் தொடர்ச்சியாக தற்போது இறக்குமதி செய்யப்பட்டுள்ள 400 அதிசொகுசு வாகனங்கள் சுங்கத்திணைக்களத்தினால் கையகப் படுத்தப்பட்டுள்ளன.

இறக்குமதிப் பத்திரங்களில் பெறுமதியைக் குறைத்தும், பயன்படுத்தப்பட்டது என்று குறிப்பிட்டும் இவ்வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. அதன் காரணமாக தற்போது வரை ஏறக்குறைய 1.5

13

# தீர்த்தத் திடலில் 05 மாடி வீடமைப்புத் திட்டம்



குரு நகர் வீட்டுத்திட்டம்

திருகோணமலையில் மொத்த மீன் சந்தைக்கு அருகிலுள்ள கடற்கரைப் பிரதேசத்தில் "ஜனசெவன" என்ற அரச வீட்டுத்திட்டத்திற்காக ஐந்து மாடிகளைக் கொண்ட தொடர் வீட்டுத்திட்டத் தொகுதியொன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



**அனர்த்தப் பாதிப்புக்குள்ளாகும் பகுதியில் கட்டடம் அமைக்க அனுமதி எவ்வாறு வழங்கப்பட்டது ? நந்தன் மாஸ்டர் கேள்வி**


இதற்கான அனுமதியை கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத் திணைக்களம் வழங்கியுள்ளது.

சமுத்திரகம என்ற பெயரைக் கொண்டுள்ள இப்பிரதேசத்திலேயே 86,592 சதுர அடிகளை நுகர்ந்து இவ் விடமைப்புத் திட்டம் உருவாகவுள்ளது.

எனினும் இக்கட்டம் அமைக்கத் தீர்மானிக்கப்பட்ட

13

# மூலோபாய நகர அபிவிருத்திக்கு உட்படும் திருகோணமலை




பாதுகாப்பு அமைச்சின் கீழுள்ள நகர அபிவிருத்தித் திட்டத்தின் அங்கமான மூலோபாய நகர அபிவிருத்தி நடவடிக்கையின் ஒரு கட்டமாக திருகோணமலை மாவட்டத்தை அபிவிருத்தி செய்யும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஆசிய நிதி அபிவிருத்திப் பங்களிப்பில் இத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

13


**AFTER ADVANCED LEVEL....**

Join Full time Courses

@

**VEAL BUSINESS COLLEGE**

aat SRI LANKA

No.159A, Sea View Road, Trincomalee 026 222 76 22 / 0777 555 738

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
malaimurasu@hotmail.com 075-4252042

# கடலில் தொடரும் அவலம் !!!

ஈழத்தமிழர்கள் அல்லலுறத் தொடங்கிய காலம் தொட்டு தமிழர்களின் அவச்சாவுகளை அரங்கேற்றும் இடங்களாக நிலமும் கடலும் இன்றுவரை தொடர்ந்துகொண்டே இருக்கின்றன.

வான்தாக்குதல்களால் 2009 மே மாதம் வரையும் நிகழ்த்தப்பட்ட கொலைக் குண்டுத் தாக்குதல்கள் தற்போது நிறுத்தப்பட்டுள்ளதால் அவ்வழியில் எம்சாவு மட்டுப்படுத்தப்பட்டு விட்டது. ஆனால் கடல்வழி அவலம் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றது.

போராளிகள் இந்தியாவுடனான தொடர்பை இரகசியக் கடற்பயணங்களூடாகக் கொண்டிருந்ததால் முதன்முதலில் மீனவர்கள் மீதான தாக்குதல்கள் கடலில் ஆரம்பிக்கப்பட்டது. அத்தாக்குதல்கள் தொடர்ந்து கொண்டிருந்தபோதே படகுப்பயணிகளின் உயிர்கள் பறிக்கப்பட்டன. (குமதினி)

பின்னர் யாழ்ப்பாயத்திற்கான பயணம் பூனகரிக்கடல் நீரேரியின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட போது நூற்றுக்கணக்கான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர்

இத்தனை காலப் படுகொலைகளும் எவ்விதமான விசாரணைக்கும் உட்படுத்தப்படாமலே தொடர்ந்ததும் பின்னர் மறக்கடிக்கப்பட்டதும் வரலாறாயிற்று..

ஆனால் இறுதியாக முல்லைத்தீவின் முள்ளிவாய்க்கால் கடற்படுக்கையில் கொல்லப்பட்ட மக்களின் அழுகுரல்கள் மட்டுமே இனப்படுகொலைகளாகவன்றி யுத்த மீறல்களாக உலக அரங்கில் இன்று பேசப்பட்டு வருகின்றது.

ஆனாலும் அதன்பின்னராவது கடலில் எமது அவலம் இன்றுவரைக்கும் தீர்ந்தபாடில்லை. சொந்த மண்ணில் வாழமுடியாமல் அன்னிய மண்ணுக்கு மறைந்தோடும் வாழ்க்கை 2009 ன் பின்னர் ஆரம்பமாகியது. அந்த வாழ்வின் மிகப்பெரும் திருப்புமுனையாக எம்.வி சண்சீ கப்பல் கனடாவைச் சென்றடைந்தது. அதன் தொடர்ச்சியாக நூற்றுக்கணக்கான படகுகள் அவுஸ்திரேலியா நோக்கிப் பயணித்தன.

இங்கு அவலம் என்னவென்றால் இன்றுவரை பயணித்த பல படகுகள் நூற்றுக்கணக்கான இளைஞர்களுடன் காணாமல் போயிருப்பதே....

அவர்களுக்கு என்ன நடந்தது என்பதைக் கூடத் தெரிந்துகொள்ள முடியாமல் வாழும் இனமொன்றாக நாம் மாறியிருப்பதே 2009ம் பின் எம் வாழ்வின் மிகப்பெரும் அவலம் எனக் கொள்ளலாம்.

போரோய்ந்த பின்னர் இவ்வாறானதொரு அவலம் ஆரம்பமானபோதே நாம் விழித்திருக்க வேண்டும். எமது தலைமைகள் அதற்கான அமைப்பொன்றை உருவாக்கி தகவல்களையாவது திரட்டி வைத்திருக்க வேண்டும்.... எத்தனைபேர் காணாமற் போனார்கள் என்பது இப்போதுவரை எமக்குத் தெரியாதுள்ளது... சோமாலியாவில், இந்தோனேசியாவில் என்று பலர் பலவாறு பேசிக்கொண்டாலும் அவற்றைப் பயன்படுத்திச் சிலர் உழைத்துக்கொண்டும் இருக்கின்றார்கள்.

இன்று அவுஸ்திரேலியக் கடலில் தத்தளிக்கும் 153 இலங்கையரும் யார் என்பது எவருக்குமே தெரியாமலுள்ளது. அவர்களில் 37 குழந்தைகள் என்பதை மட்டுமே தெரிந்துகொண்டுள்ளோம்.... இவர்கள் யாருடைய கைகளில் இருந்து எமக்குத் திரும்பிக் கிடைப்பார்களா என்பதே கேள்விக்குறியாகியுள்ளது.

யாரென்று தெரிந்தால் மட்டுமே தேடி மீட்கலாம்.... யாரென்று தெரியாது விட்டால் நீண்டவருடங்களில் பின்னர் புதைகுழிகளில் கண்டுபிடிக்கப்படும் அவர்களின் எச்சங்கள் கூட எமக்குத் தெரியாமல் போய்விடும் என்பது தான் உண்மை.....

# எமது கலாசாரத்தைப் பாதுகாப்பவை ஆலயங்களே – பொன். செல்வராசா



முன்பு ஒதுக்குப்புறமாக இருந்த இந்தப் பகுதி இன்று ஒளி வீசும் பகுதியாக மாற்றமடைந்துள்ளது. இவ் ஆலயத்தின் படிப்படியான வளர்ச்சி இந்த நிலையைத் தோற்றுவித்துள்ளது. இதற்கு பின்னணியில் இருந்து செயற்பட்ட ஆலய நிருவாகத்தின் இளைய தலைமுறையினர் பாராட்டுக்குரியவர்கள். இதன் மூலம் இளைஞர் சக்தியை வெளிப்படுத்தி உள்ளனர்.

பக்தி மார்க்கத்திலும் தங்கள் பலத்தை பதிவு செய்துள்ளனர் என பொன் செல்வராசா எம்.பி. தெரிவித்தார்.

மண்டபத்தடி ஸ்ரீ பிள்ளையார் ஆலய சங்காபிஷேக நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் பேசுகையில்

அழகான, அமைதியான, பொருத்தமான இயற்கைச் சூழலில் இவ்வாலயம் அமைக்கப்பட்டுள்ளதால், பக்தர்கள் பிள்ளையாரை மனதை ஒரு நிலைப்படுத்தி வணங்குவதற்கு இலகுவாக இருக்கும். அவ்வாறு வணங்கும்போதுதான் பிள்ளையார் அருள்பாலிப்பார். எனவே, இப்பகுதி மக்கள் அதிர்'டசாலிகள்.

பண்டைய மன்னர்களெல்லாம் ஆலயங்கள் அமைப்பதில் தனிக்கவனம் செலுத்தியதை நாம் அறிவோம். செங்கோல் ஆட்சியின் செழுமையாக ஆலயங்கள் அற்புதமாக அமையப்பெற்றிருந்தன. ஆனால் இன்று எமது நாட்டில் ஆலயங்கள் எப்போதும் தகர்க்கப்படும் என்ற அச்சம் நிலவி வருகின்றது. ஆலயங்களின் வரலாற்றை மாற்றி இடத்தையும் மாற்றுகின்ற சம்பவங்களும் நடக்கத்தான் செய்கின்றன.

ஆலயங்களும் எமது கலாசார பாரம்பரியங்களும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்தவை. எனவே ஆலயங்கள் அழிந்தால் அல்லது அழிக்கப்பட்டால், எமக்குரிய கலாசார முகவரியும் இல்லாது போய்விடும். எனவே, நாம் ஆலயம் அமைத்தால் மட்டும் போதாது. அதை அழிவடையாமல் பாதுகாப்பதிலும் போதிய கவனம் எடுக்க வேண்டும். அதற்கான வரலாற்று ஆவணங்களும் எம் கைவசம் இருக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

## இழுத்தடிக்கப்படும் இந்திய வீட்டுத் திட்டம் சாகாமம் மக்கள் அவலம்

இந்திய அரசாங்கத்தினால் சாகாமம் பிரதேசத்துக்கு நிரந்தர வீடுகள் அமைத்துத்தருவதாக அளிக்கப்பட்ட வாக்குறுதி இதுவரை நிறைவேற்றப்படவில்லை. இது யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை மேலும் கவலையடையச் செய்துள்ளது என சர்வதேச இந்து மத பீடம் கவலை தெரிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக சர்வதேச இந்து மத பீடம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில், மேலும் கூறப்பட்டுள்ளதாவது: திருக்கோவில் சாகாமம் பிரதேசத்துக்கு இந்திய அரசாங்கம் நிரந்தர வீடுகள் அமைத்துத்தருவதாக வாக்குறுதி அளிக்கப்பட்ட போதும் இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை என பிரதேச கிராம அபிவிருத்தி சங்க தலைவர் விநாயகமூர்த்தி ராஜு தெரிவித்துள்ள கருத்தானது யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை கவலையடையச் செய்துள்ளது என்றும் அவ்வறிக்கை தொடர்கின்றது.

## மட்டு ஊடகவியலாளருடன் மலைமுரசின் சந்திப்பு நாளை 06ம் திகதி கால 10 மணிக்கு

மட்டக்களப்பு ஊடகவியலாளர்களுடன் மலைமுரசு பத்திரிகையினரின் சந்திப்பு நாளை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளதாக சந்திப்பு ஏற்பாட்டாளர் திரு. அதிரன் தெரிவித்தார்.

இச்சந்திப்பு இல.02, 7வது வீதி, கல்லடி வேலூர் என்ற முகவரியில் நடைபெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் மலைமுரசின் ஆசிரியர் உட்பட மலைமுரசின் அலுவலகச் செய்தியாளர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் அனைத்து ஊடகவியலாளர்களையும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகொள் விடுக்கப்பட்டுள்ளது.

## திருமலை அல்பதாத் உயர்தர கலைப்பிரிவில் கிழக்கு மாகாணத்தில் முதலிடம்

கிழக்கு மாகாணத்தில் உயர்தர கலைப்பிரிவு மாணவர்களை பல்கலைக்கழகத்திற்குச் செல்லும் தகுதிக்கு உரித்தாக்குவதில் 100வீத அடைவு மட்டத்தைப் பெற்று நிலாவெளி அல்பதாத் வித்தியாலயம் முதலாம் இடத்தைத் தக்கவைத்துள்ளது.

மாகாண மட்டத்தில் இவ்வடைவானது சாதனையானதே என இப்பாடசாலையின் அதிபர் தெரிவித்தார். 2013ம் ஆண்டில் கலைத்துறைப் பாடத்தில் பரீட்சைக்குத் தோற்றிய 14 பேரும் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகும் தகுதியைப் பெற்றுக்கொண்டதால் இவ்வடைவு சாத்தியமாயுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை ஆசிரியர்களுக்கு எதிராக அங்கு நடைபெற்றதாக மலைமுரசில் வெளியான செய்திக்கும் தனது கடுமையான ஆட்சேபத்தைத் தெரிவித்த அவர் மாணவர்களின் ஒழுக்கக்கேடுகள் தொடர்பாக நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொண்டதாகவும் அந்நடவடிக்கை ஊடாக தவறு செய்தவர்களாகக் காணப்பட்டவர்கள் மீது அனைவராலும் ஏற்றுக்கொள்ளத்தக்க தண்டனை நடவடிக்கைகளை மேற்கொண்டதாகவும் அவர் தெரிவித்தார்.

# அமலமரித்தியாகிகள் சபையின் உயர்ஸ்தானிகர் திருமலைக்கு வருகை

அமலமரித் தியாகிகள் சபையின் உயர்ஸ்தானிகர் அருட்தந்தை லூயிஸ் யோகன் (அமதி) அவர்கள் கடந்தமாதம் திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரிக்க வருகை தந்திருந்தார்.

இளைஞர்களிடையே கல்வியின் உருவாக்கம் தொடர்பான கலந்துரையாடல்களில் அவர் ஈடுபட்டதுடன் பாடசாலையின் அபிவிருத்திச்சபை, மாணவமுதல்வர்கள் மற்றும் ஆசிரியர்களுடனான சந்திப்புக்களையும் அவர் நிகழ்த்தினார்.

(படங்கள் -அருணண்)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களுக்கான உளவாளி - யூலியன் அசாஞ்சே

## வாராந்த அலசல்

செய்திகள் பார்வைகள் எண்ணங்கள்

நாமெல்லோரும் சுதந்திரமானவர்கள் இல்லை என்பதை அம்பலப்படுத்தியதால், தன் சுதந்திரத்தை அசாஞ்சே இழந்து இரண்டு ஆண்டுகள் ஆகின்றன!

நம் யுகத்தின் முக்கியமான தினங்களை நாம் நினைவில் வைத்திருக்கிறோம்: செப்டெம்பர் 11 (2001-ல் இரட்டைக் கோபுரத் தாக்குதல் நடந்தது மட்டுமல்ல, சிலேயில் 1973-ல் இராணுவப் புரட்சியால் சல்வதோர் அயெந்தேவின் ஆட்சி கவிழ்க் கப்பட்டதும் இதே தினத்தில்தான்), டி-தினம் (ஜூன் 6, 1944) என்று பல தினங்கள் நம் நினைவுக்கு வரும். இந்தப் பட்டியலில் இன்னுமொரு தினத்தையும் நாம் சேர்க்க வேண்டியிருக்கலாம்: ஜூன் 19.

நம்மில் பெரும்பாலானோர் பகல் பொழுதில் காற்று வாங்குவதற்காக நடப்பதை விரும்புவார்கள். சிலரால் அப்படிச் செய்ய முடியாமல் இருப்பதற்குச் சில காரணங்களும் இருக்கலாம். அதாவது, அவர்கள் பார்க்கும் வேலையின் காரணமாக அப்படிச் செய்ய முடியாமல் போகலாம் (சுரங்கத் தொழிலாளிகள், நீர்மூழ்கிக் கப்பலில் இருப்பவர்கள்). அல்லது சூரிய ஒளி மேலே பட்டால் உயிருக்கே ஆபத்து என்ற விசித்திரமான நோயைக் கொண்டவர்களாலும் அப்படிச் செய்ய முடியாதுதான். காற்றுவாங்குவதற்காக நடப்பதற்குச் சிறைவாசிகளுக்குக் கூடத் தினமும் அனுமதி உண்டு.

அசாஞ்சே செய்தது என்ன?

கடந்த 19-ம் திகதியுடன் ஜூலியன் அசாஞ்சேவுக்கு இந்த உரிமை பறிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன: லண்டனில் ஈக்வடார் நாட்டின் தூதரகம் இருக்கும் அடுக்ககத்தில் அவர் நிரந்தரமாகத் தன் வாழ்நாளைக் கழிப்பதற்கு விதிக்கப்பட்டிருக்கிறார். அந்த அடுக்ககத்துக்கு வெளியே அவர் கால் வைத்தால் அடுத்த நொடியே கைதுசெய்யப்படுவார். அப்படி அசாஞ்சே செய்த குற்றம்தான் என்ன? வேறொன்று மில்லை, அசாஞ்சேவும் அவரது விசிலூதி சகாக்களும் தேசத் துரோகிகளாக அடிக்கடிக் குற்றம்சாட்டப்படுகின்றனர். உண்மையில், அவர்கள் அதைவிட மோசமானவர்கள் (அதாவது, அதிகாரத் தரப்பின் பார்வையில்).

'மக்களுக்கான உளவாளி' என்று அசாஞ்சே தன்னை அழைத்துக்கொண்டார். 'மக்களுக்காக உளவுபார்ப்பது' என்பது சாதாரணமான துரோகம் அல்ல (இப்படிச் செய்வது என்பது டபுள் ஏஜென்ட் வேலை பார்ப்பது. அதாவது, நம் நாட்டின் ரகசியங்களை எதிரிகளிடம் விற்பது என்று அர்த்தம்) அது மிகவும் புரட்சிகரமானது. இப்படிச் செய்வதன் நோக்கமே ரகசியங்கள் மக்களுக்குத் தெரிய வேண்டும் என்பதுதான். எனவே, உளவுபார்த்தல், ரகசியம் என்ற கருத்தாக்கம் ஆகியவற்றின் அடிப்படை அர்த்தத்தையே இது கேள்விக்குள்ளாக்குகிறது.

வங்கிகள், புகையிலை, எண்ணெய் நிறுவனங்கள் போன்ற தனியார் நிறுவனங்களின் சட்டவிரோத நடவடிக்கைகளை அரசுத் தரப்புகளுக்கு அம்பலப்படுத்தியவர்கள் என்று விக்கிலீக்ஸுக்கு உதவியவர்களையெல்லாம் இனிமேல் கருத முடியாது உண்மையில் அரசுத் தரப்புகளைத்தான் மக்களிடம் அவர்கள் அம்பலப்படுத்தியிருக்கிறார்கள்.

நாம் கற்பனை செய்திராத எதையுமே விக்கிலீக்ஸிலிருந்து நாம் தெரிந்துகொள்ளவில்லை. ஒன்றைப் பற்றிப் பொதுப்படையாக அறிந்திருப்பது என்பது வேறு அதைப் பற்றிய நிதர்சனமான தகவல்களை அறிந்திருப்பது என்பது முற்றிலும் வேறு. ஒருவருடைய இணை, வேறு பலருடன் உறவு வைத்திருப்பது குறித்து ஒருவருக்கு முன்னமே தெரிந்திருந்தாலும், புகைப்படங்கள் போன்ற சில ஆதாரங்கள் கிடைக்கும்போதுதான் அவருடைய வேதனை அதிகமாகும் அதைப் போன்றதொரு உணர்வுதான் விக்கிலீக்ஸ் அம்பலத்தில் நமக்கும் கிடைத்தது.

அமெரிக்கர்கள் எப்படி எதிர்கொண்டார்கள்?

இந்த உண்மைகளையெல்லாம் எதிர்கொண்டபோது கண்ணியமான அமெரிக்கக் குடிமக்கள் அனைவரும் மிகவும் கூனிக்குறுகிப் போனார்களா? இப்போது வரை, சராசரி குடிமக்களின் அணுகுமுறை கபடமும் பொறுப்பின்மையும் கூடியதாக இருந்தது. உளவு நிறுவனங்கள் செய்த அசிங்கமான காரியங்களை மறந்துபோவதையே நாம் விரும்பினோம். இனியும் நமக்கு எதுவும் தெரியாது என்று நாம் பாவனை செய்ய முடியாது.

அமெரிக்காவுக்கு எதிரான நிகழ்வாக மட்டுமே விக்கிலீக்ஸைப் பார்த்தால் போதாது. சீனா, ரஷ்யா போன்ற நாடுகள் அமெரிக்காவைவிட அடக்குமுறையான நாடுகளாக இருக்கின்றன. ஈராக் போரில் அமெரிக்கா செய்ததையெல்லாம் அம்பலப்படுத்திய செல்சியா மேனிங் போன்ற ஒருவருக்கு சீனத்தின் நீதிமன்றங்களில் என்ன நடந்திருக்கும் என்று கற்பனை செய்துபாருங்கள்! அநேகமாக, வெளிப்படையான விசாரணையே இருந்திருக்காது அந்தப் பெண் திடீரென்று காணாமல் போயிருப்பார், அவ்வளவுதான்.

பெரும் அச்சுறுத்தல்

அமெரிக்கா அதுபோலவெல்லாம் கைதிகளைக் கொடூரமாக நடத்துவதில்லை. ஏனென்றால், அதற்குத் தொழில்நுட்பம்தான் முன்னுரிமை. எனவே, வெளிப்படையாகக் கொடூரமாக நடந்துகொள்ள வேண்டிய அவசியமே அதற்கு இல்லை. நமது சுதந்திரத்துக்கு சீனாவை விட அமெரிக்காதான் பெரும் அச்சுறுத்தல் என்பதற்கு இதுதான் காரணமே: அமெரிக்காவின் கட்டுப்பாட்டு வழிமுறைகள் வெளிப்படையாகத் தெரியாது. ஆனால், சீனத்தின் கொடூரமான அணுகுமுறை வெளிப் படையாகவே தெரியக்கூடியது.

சீனாவைப் போன்ற ஒரு நாட்டில் சுதந்திரத்துக்கு இருக்கும் எல்லைகள் குறித்து அனைவருக்குமே தெளிவாகத் தெரியும். யாருக்கும் அதைப் பற்றிய பிரமைகள் இல்லை. அமெரிக்காவிலோ, முறைப்படியான சுதந்திரத்துக்கு அனைவருக்கும் உத்தரவாதம் அளிக்கப்படுகிறது. அதன்மூலம் பெரும்பாலான மக்கள் தாங்கள் சுதந்திரமாக வாழ்கிறோம் என்று உணர வைக்கப்படுகிறார்கள்.

கூடவே, எந்த அளவுக்கு அரசாங்கத்தின் கரங்களால் அவர்கள் கட்டுப்படுத்தப்படுகிறார்கள் என்பது தெரியாத நிலையிலும் அவர்கள் இருக்கிறார்கள். வெளிப்படையாகவே அடக்குமுறை செலுத்தும் அரசுகளை அம்பலப்படுத்துவதைவிடவும் முக்கியமான காரியத்தை விசிலூதிகள் செய்கிறார்கள்: நாம் உணரும் சுதந்திரத்துக்கு அடியில் சுதந்திரமின்மை ஒளிந்திருப்பதைப் பொதுமக்களுக்கு அவர்கள் உணர்த்துவதுதான் மேலும் முக்கியமானது.

நாமெல்லாம் எலிகள்தானா?

2002-ம் ஆண்டு மே மாதத்தில், நியூயார்க் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த அறிவியலாளர்கள் ஒரு சாதனையை நிகழ்த்தினார்கள். எலியின் மூளையில் ஒரு கணினிச் சில்லை இணைத்ததன் மூலம் சில அடிப்படையான சமிக்ஞைகளை எலியின் மூளைக்குக் கடத்தி, எலியின் இயக்கங்களைத் தங்கள் தொழில்நுட்பத்தின் மூலம் கட்டுப்படுத்தினார்கள். தொலைஇயக்கியை (ரிமோட் கண்ட்ரோல்) கொண்டு பொம்மைக் காரை செலுத்துவது போன்ற செயல்முறைதான் அது. ஒரு பிராணியின் தன்னிச்சையான வாழ்க்கையை முதன்முறையாக ஒரு கருவி ஆக்கிரமித்துக்கொண்டது.

வெளியிலிருந்து கட்டுப்படுத்தப்படும் தனது செயல்பாடுகளை எப்படி உணர்ந்திருக்கும் பாவப்பட்ட அந்த எலி? தனது இயக்கங்கள் வேறொருவரால் தீர்மானிக்கப்பட்டதை அது முழுவதும் உணராமலேயே இருந்திருக்குமா? சீனக் குடிமக்களுக்கும் மேற்குலகின் சுதந்திர நாடுகளின் சுதந்திரக் குடிமக்களுக்கும் இருக்கும் வேறுபாடு இதுதான். சீன எலிகளுக்குத் தாங்கள் கட்டுப்படுத்தப்படுவது தெரியும், முட்டாள் எலிகளான நாமோ நமது அசைவுகள் எப்படிக் கண்காணிக்கப்படுகின்றன என்பதையெல்லாம் உணராமலேயே காலாற நடந்து கொண்டிருக்கிறோம்.

சாத்தியமே இல்லாத ஒரு கனவை விக்கிலீக்ஸ் பின்தொடர் கிறதா? நிச்சயமாக இல்லை. அதன் அம்பலங்களால் உலகம் ஏற்கெனவே மாறுதலுக்கு உள்ளாகியிருப்பது கண்கூடு.

அமெரிக்கா உள்ளிட்ட வல்லரசுகளின் சட்டவிரோத நடவடிக்கைகளை நாம் தெரிந்து கொண்டது மட்டுமல்ல. உளவு நிறுவனங்களின் செயல்பாடுகளை மட்டுப்படுத்தியதோ அவற்றைக் கட்டுப்படுத்தும் விதத்திலான சட்டங்களை இயற்றக் காரணமாக இருந்ததோ மட்டுமல்ல. விக்கிலீக்ஸ் அவற்றையெல்லாம் விட அதிகமாகச் சாதித்திருக்கிறது: கோடிக் கணக்கான மக்கள் தாங்கள் வாழும் சமூகத்தைப் பற்றிய விழிப்புணர்வைப் பெற்றிருக்கிறார்கள். சமீப காலம்வரை பிரச்சினை ஏற்படுத்தாதது என்று நாம் நினைத்து வந்த சமூகம், உண்மையில் பிரச்சினைக்குரியதுதான் என்பதை நாம் உணர்ந்திருக்கிறோம். அதுதான் விக்கிலீக்ஸின் பெரிய சாதனை.

இதனால்தான் பெரும் தீங்கு செய்தவராகக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார் அசாஞ்சே. உண்மையில், விக்கிலீக்ஸ் எந்த வன்முறைப் பாதையையும் மேற்கொள்ளவில்லை. கார்ட்டூன் படங்களில் தொன்றுதொட்டு வரும் ஒரு காட்சி நமக்கெல்லாம் நன்கு பரிச்சயமானது. கார்ட்டூன் கதாபாத்திரமொன்று ஒரு இடத்தின் உச்சிப் பகுதியில் ஓடிக்கொண்டே இருக்கும் தரைப்பகுதியைத் தாண்டியும் அந்தரத்தில் ஓடிக்கொண்டே இருக்கும், கீழே தரையே இல்லை என்பதை உணராமலேயே. கீழே குனிந்து பார்த்தபின்னரே தான் ஓடிக்கொண்டிருப்பது அந்தரத்தில் என்பது தெரிந்து, அதன் பிறகுதான் அந்தப் பாத்திரம் கீழே விழத் தொடங்கும். கீழே குனிந்துபாருங்கள் என்று அதிகாரத்தில் இருப்பவர்களுக்குச் சொன்னதுதான் விக்கிலீக்ஸ் செய்த காரியம்.

விக்கிலீக்ஸின் அம்பலங்களுக்குப் பெரும்பாலான மக்கள் ஆற்றிய எதிர்வினையானது ஊடகங்கள் செய்த மூளைச்சலவையால் உருவானது. மக்களின் எதிர்வினையை நாஷ்வில் என்ற திரைப்படத்தின் இறுதிப் பாடலின் வரிகளோடு பொருத்திப் பார்க்கலாம்: 'நான் சுதந்திர ஜீவி இல்லையென்று நீ சொல்லலாம், அதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை.' விக்கிலீக்ஸ் நம்மைக் கவலைகொள்ள வைக்கிறது. துரதிர்ஷ்டவசமாக, நம்மில் பெரும்பாலானோர், அப்படிக் கவலைகொள்வதை விரும்புவதில்லை.

தி கார்டியன், தமிழில்: ஆசை. -நன்றி தி.இந்து

# இலங்கையின் பொருளாதாரம் புனைவுகளும்..... உண்மைகளும்.....

இலங்கையின் சென்மதி நிலுவையில் ஏற்பட்டுள்ள மிகையானது ஆரோக்கிய மானதல்ல என இலங்கையின் சிரேட்ட பொருளாதார வல்லுனர் பேராசிரியர் ஸ்ரீமல் அபேயரத்ன தெரிவித்துள்ளார்.

இம்மிகையானது வெளிநாட்டுப்பண அனுப்புதல்களாலும் கடன்களாலும் ஏற்பட்டுள்ளதே தவிர பொருளாதார அபிவிருத்தியால் அல்ல என்பதை அவர் வெளிக்காட்டியுள்ளார்.

வளர்ச்சியடைந்துவரும் பொருளாதார- மொன்றின் இரண்டு முக்கிய குறிகாட்டிகளாக நான் கருதுவது எவற்றையெனில் பொருட்கள் சேவைகளின் ஏற்றுமதியையும் வெளிநாட்டின் நேரடி முதலீடுகளையுமே.

ஆனால் இலங்கையின் நடைமுறைக்கணக்கானது வெளிநாட்டில் உள்ள இலங்கையர் இலங்கைக்கு அனுப்பும் பணப்பரிமாற்றத்தால்தான் நிரம்பியுள்ளது. இப்பணப்பரிமாற்றமானது ஏற்றுமதியை விஞ்சிய வளர்ச்சி வீதத்தையும் கொண்டுள்ளது. இவ்விடயமானது இலங்கை பொருளாதார அபிவிருத்தியில் செழிப்பற்றிருப்பதையே காட்டுகின்றது. மேலும் வெளிநாட்டுப்பண அனுப்புதல்களில் ஏற்படும் அதிகரிப்பானது எதைக்காட்டி நிற்கின்றது? இலங்கையின் மனித வளத்திற்குத் தேவையான வாய்ப்புக்கள் இலங்கையில் குறைவாக இருக்கின்றது என்பதையல்லவா? இந்நிலையில் இலங்கையின் பொருளாதாரம் செழிப்புற்றுள்ளது எனக் கொள்ள முடியுமா?" என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

இலங்கையின் மூலதனக்கணக்குத் தொடர்பாகக் கருத்தறிவித்த அவர் வளர்ச்சியடைந்து வரும் நாடொன்றின் சென்மதி நிலுவையின் மூலதனக் கணக்கில் முக்கிய புள்ளியாக இருப்பது வெளிநாட்டு நேரடி முதலீடுகள் ஆகும். ஆனால் இலங்கையின் மூலதனக் கணக்கில் பிரதான பாத்திரம் வகிப்பது அதுவல்ல. இலங்கை பெற்றுக்கொள்ளும் கடன்களே" எனத் தெரிவித்த அவர் "இலங்கை கடன்களைப் பெற்றுக்கொள்ளக் கூடாது என்பது எனது கூற்றின்

## இலங்கையின் கடன்களுக்கு வட்டி நாங்களும் தான் செலுத்த வேண்டும்

அர்த்தமல்ல. ஆனால் வளர்ச்சியடைந்துவரும் நாடொன்றின் மூலதனக் கணக்கில் வெளிநாட்டு முதலீடுகளுக்குப் பதிலாக வெளிநாட்டுக் கடன்கள் பேராதிக்கம் பெற்றிருப்பின் அவை அடிப்படையில் ஒரு சிக்கலை ஏற்படுத்திவிடும்" என்றும் தெரிவித்தார்.

நாங்கள் எமது சென்மதி நிலுவையில் அதிகரிப்பைக் காட்டுவதற்குக் கடன்களை அடிப்படையாகக் கொள்வது எமது நாட்டின் நிலைமையை உலகிற்கு வெளிப்படையாகத் தெரிவித்து விடும் என்றார் அவர்.

கடன்களால் மேலதிகமாகக் காட்டப்படும் சென்மதிநிலுவைக் கணக்கைக் கொண்டு எமது பொருளாதாரம் வலுவடைவதாக எண்ணுவதும் எண்ணத் தூண்டுவதும் தவறானதே.... இன்றைய நிலையில் இலங்கை அரசானது தனது நாளாந்த நடவடிக்கையை மேற்கொள்ளத் தேவையான நிதியைக் கடன் மூலம் பெற்றுக்கொள் முயன்றுகொண்டிருக்கும் இவ்வேளையில் இப் பொறியில் இருந்து இலங்கை மீள வேண்டுமாயின் அடிப்படைக்கட்டுமானங்களில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதை இப்பிரச்சனைக்கான தீர்வாகப் பேராசிரியர் முன்வைத்தார்.

மேலும் ஏற்றுமதிகள் அதிகரிக்க வேண்டுமாயின் ஏற்றுமதித் துறையில் முதலீடுகளை அதிகரிக்க வேண்டும். முதலீடுகள் அதிகரிக்கத் தொடங்கும் போது ஏற்றுமதித் தொழிற்றுறையில் நம்பிக்கை அதிகரிக்கும். அவ்வாறே அத்துறையில் நேரடி வெளிநாட்டு முதலீடுகளை அதிகரிக்கவும் முடியும். அந்நிலையிலேயே இலங்கையின் தொழிற்றுறை மீது நம்பிக்கை ஏற்பட்டு தொழிற்றுறை விருத்தி நிகழும் வாய்ப்புள்ளது. போர் முடிவுற்று ஐந்தாண்டுகள் ஆகிய போதிலும் இலங்கையின் தொழிற்றுறை மீதான நம்பிக்கை இன்னும் பரிணாமிக்கவில்லை என்பது வியப்பாகவே உள்ளதாக அவர் தெரிவித்தார்.

இலங்கை ஏற்றுமதிகளை அதிகரிக்காது விட்டாலும், நேரடி முதலீடுகளைக் கூட்டாமல் விட்டாலும் கடன் பொறிக்குள் விழும் அபாயத்தை கடுமையாக எதிர்கொள்வதாக கடந்த காலங்களில் இலங்கைப் பொருளாதார வல்லுனர் குழு எச்சரிக்கை விடுத்துக்கொண்டே இருக்கின்றது. ஆனால் இலங்கையின் மத்திய வங்கியோ 2014 ம் ஆண்டின் முதற் காலாண்டில் சென்மதி நிலுவைக்கணக்கில் 828.3 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அதிகரிப்பைப் பதிவு செய்திருப்பதாகவும் இத்தொகை கடந்த ஆண்டைவிட நான்கு விழுக்காடு அதிகமானது என்றும் தெரிவித்துள்ளது.

மேலும் மத்திய வங்கியானது இலங்கையின் மொத்த வெளிநாட்டு ஒதுக்குகள் 8.1 பில்லியன் அமெரிக்க டொலர்களாக. இவ்வாண்டின் முதற்காலாண்டில் இருப்பதாகத் தெரிவித்துள்ளது. அதேவேளை சர்வதேச நாணய நிதியமானது இலங்கையின் தேறிய வெளிநாட்டு ஒதுக்கின் பெறுமதி இலங்கையின் தேறிய வெளிநாட்டுக் கடனுக்கு சமமாகவே உள்ளது என்று தெரிவித்துள்ளது.

**அந்த 200 மில்லியன் யாருடைய தலையில் பொறிந்துள்ளது ?.... — மாயன் —**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெற்கின் பாசிசம், பாசிச எதிர்ப்பு அரசியலுக்கான வரம்புகள்



தயான் ஜயதிலக

Dayan.Jayatilake

அழுத்கமவில் முஸ்லிம்கள் மீது மேற்கொண்ட தாக்குதல் பல சம்பவங்களின் தொடர்ச்சியாக ஏற்பட்டது, அதன் சரியான தன்மை, காரணங்கள் மற்றும் அதை நடத்தியவர்கள் போன்ற விபரங்கள் இன்னமும் உறுதிப்படுத்தப்படவேண்டும். மாவனல்லயில் காவல்துறையினர் மீது நடத்தப்பட்ட அசிட்வீச்சு, பொது பல சேனாவின் நீண்ட நாள் இலக்கான வண.வட்டரக்க விஜித தேரர் கடத்தப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டது, மற்றும் பாணந்துறையில் உள்ள "நோ லிமிட்" களஞ்சியம் தீ வைத்து அழிக்கப்பட்டது போன்றவையும் அதில் அடங்கும். நடப்பவைகளை பார்க்கும்போது எனக்கு என்ன தோன்றுகிறது என்றால், யாரோ அல்லது எதுவோ சமாதானத்தை குலைக்க முடுக்கி விடப்பட்டுள்ளது அல்லது அது தனது கட்டுப்பாட்டை இழந்து விட்டது என்று.

மிகவும் குழப்பம் ஏற்படுத்துவது என்னவென்றால், சிங்கள பௌத்த பயங்கரவாத குழுக்களின் சாத்தியமான இருப்பு மற்றும் அரச இயந்திரங்களுக்குள்ளேயே அவர்களின் இடைமுக அதிர்வுகள் ஊடுருவி இருப்பதற்கான சாத்தியங்கள் இணைந்துள்ளன என்பதுதான். சரியான நேரம் மற்றும் சூழ்நிலையில் உணரப்படும் வெளிப்புற அச்சுறுத்தல் மற்றும் உள்ளக வாய்ப்புகள் காரணமாக ஒரு திருப்புமுனை ஏற்படலாம்.

இத்தகைய பரம்பரையின் வரலாற்றை குறைந்தது ஜனாதிபதி டிபி.விஜேதுங்காவின் இடைக்கால ஆட்சிக் காலத்துக்கு பின்னோக்கிப் பார்த்தால், ஐதேக வினுள் நீண்டகாலமாக இயங்கி வந்த நடைமுறையான சிங்கள பௌத்த பழமைவாதத்துக்கு புத்துயிர் வழங்கும் கட்டாய நடவடிக்கை அந்த காலகட்டத்தில் பிரேமதாசாவின் செயல்களுக்கு விரோதமானவர்களால் மேற்கொள்ளப்பட்டது. ஜனாதிபதி விஜேதுங்க, பெரும்பான்மையினர் மற்றும் சிறுபான்மையினரை முறையே மரத்துக்கும் மற்றும் அதை பற்றிப் பிடிக்கும் கொடிகளுக்கும் உதாரணம் காட்டிப் பேசிய புல்லரிக்கும் வரிகள் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு.

ரணில் விக்கிரமசிங்காவின் யுத்த நிறுத்த உடன்படிக்கையின்போது சிங்கள எதிர்விளைவு மிகவும் விரைவாக வளர்ந்தது. ஆதரவற்ற நிலையிலிருந்த ஆயுதப் படையினரின் நியாயமற்ற கைதுகளுக்கு பின்னர் விக்கிரமசிங்காவின் நிருவாகத்தை இலக்கு வைத்தனர். இது இரு வழி போக்குவரத்துக்கு வழியேற்படுத்தியது. ஜேவிபியில் அப்போது மிகவும் முக்கியமான உறுப்பினராக இருந்த விமல் வீரவன்ச மற்றும் ஜாதிக ஹெல உருமயவின் பாட்லி சம்பிக்க ரணவக்க போன்றவர்கள் நிலமையை சரியாக புரிந்துகொண்டு இராணுவத்துக்காக வாதாடினார்கள். இராணுவத்தில் உள்ள சில சக்திகள் தங்கள் மனக்குறைவுக்கு நிவர்த்தி காண வழிகளை தேட ஆரம்பித்தார்கள், திரும்பவும் அவர்கள் நிலையை புரிந்துகொண்ட இந்த இரு கட்சிகளையும் மற்றும் ஊடகங்களையும் அவர்கள் தங்கள் செல்வாக்குக்கு உட்படுத்தினார்கள் அல்லது கட்டுப் படுத்தினார்கள்.

ஜனாதிபதி குமாரதுங்காவிற்கும் மற்றும் எல்.ரீ.ரீ.ஈக்கு இடையே உருவான சுனாமிக்கு பின்னரான நிருவாக செயல்முறை கட்டமைப்பு, ரணில் விக்கிரமசிங்காவை புறந்தள்ளி குமாரதுங்கவை தேர்தலில் வெற்றிபெற்று பதவியில் அமர ஆதரவாக அணிதிரண்ட தேசப்பற்றுள்ள சிங்கள தேசியவாத சக்திகளிடமிருந்து அதற்கு எதிராக ஒரு எதிர்விளைவை தோற்றுவித்தது.

2005ல் ஜனாதிபதி வேட்பாளர்களான ரணில் விக்கிரசிங்க மற்றும் ஆட்சியில் இருந்தாலும் வெளியேற வேண்டியவரான ஜனாதிபதி குமாரதுங்க, மகிந்த ராஜபக்ஸவை பண்டாரநாயக்காவில் தீவிர விசுவாசமுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வாய்ப்புடன் மட்டுமே போட்டிக்கு விட்டிருந்தார். ஜேவிபி மற்றும் ஜேஎச்யு ஆகியவற்றுடன் அறிவுஜீவிகளின் ஆதரவையும் பெற்று ஆட்சியை கைப்பற்றினார்.

உருவாக்குவதற்கு கடினமான தவிர்க்க முடியாத யுத்தகால கூட்டணியினால் கட்டப்பட்டுள்ள பாலத்தின் வழியாகத்தான் இனி போக்குவரத்துகள் தொடரப்பட வேண்டும் என்பதை மகிந்த ராஜபக்ஸ உணர்ந்திருந்தார். இறுதி யுத்தம் ஆரம்பமானதும் தீவிர தேசியவாதிகளான பௌத்த பிக்குகள், அதி தீவிர அரசியல் அமைப்புகள், மற்றும் அவற்றின் முன்னணி நிறுவனங்களான பயங்கரவாதத்துக்கு எதிரான தேசிய இயக்கம் போன்றவை மற்றும் பாதுகாப்பு அமைப்புக்குள்ளிருக்கும் சக்திகள் என்பனவற்றுக்கு இடையே உறவுகள் ஏற்பட்டன, தீவிர தேசியவாத அரசியல் கட்சி ஒன்றின் அங்கத்தவரும் மற்றும் பாதுகாப்பு அதிகாரத்துவ ஆலோசகருமான ஒருவர் வழங்கிய கட்டளைகள் அல்லது சமிக்ஞையின் விளைவாக திருகோணமலையில் 5 மாணவர்கள் கொல்லப்பட்டதாக அப்போது பத்திரிகைகள் மூலமாக அறியக்கூடியதாக இருந்தது.

யுத்தம் வெற்றி கொள்ளப்பட்டபோது, புதிய சித்தாந்த கூட்டின் பிரதிநிதி மகிந்த ராஜபக்ஸவாக இருக்கவில்லை, ஆனால் சரத் பொன்சேகாவாக இருந்தார், இதனால்தான் பின்னவர், முன்னவருடன் ஒரு தீவிர சவாலை மேற்கொள்வதற்கு அதிக மன உறுதியுடன் இருந்தார். ஒரு திறமையான நகர்வை மேற்கொண்டு ராஜபக்ஸ அவரை, வலுவூட்டப்பட்ட நிர்வாக அரங்கிலிருந்து மிகப் பெரிய தேசிய அரசியல் அரங்குக்கு தள்ளிவிட்டார், அங்கு இராணுவத்தை விட குறைவான சிங்கள தேசியவாதம் அவரை வீழ்த்தியது. சரியான சமயத்தில் பக்கவாட்டில் பாதுகாப்பான நகர்வை கோத்தபாய ராஜபக்ஸ நடத்தினார், அதனால் பொன்சேகாவின் கருத்தியல் வெற்றியாளர் பதவி இவருக்கு கிடைத்தது அதேவேளை பொன்சேகாவின் நிலை மாற்றமடைந்தது.

தமிழ்நாட்டில் இருந்து வெளிப்படும் மூர்க்கத்தனமான கோஷங்கள்

ரி.என்.ஏ மற்றும் வட மாகாணசபை தீவிரவாதிகளினால் எழுப்பப்படும் ஆத்திரமூட்டும் பொருத்தமற்ற கோஷங்கள் மற்றும் நடவடிக்கைகள்

பின்வருவனவற்றில் மகிந்த ராஜபக்ஸ மற்றும் அவரது சகோதரர்கள் அடைந்திருக்கும் இரட்டைத் தோல்விகள்

(அ) மே 2009ல் ஸ்ரீலங்கா ஜெனிவாவில் செய்ததைபோல கூட்டணியை மீண்டும் கட்டியெழுப்பி அந்த மூலோபாயத்துக்கு திரும்பவும் வந்து, ஐநா சர்வதேச விசாரணைகளில் ஆயுதப் படைகளை வெற்றிகரமாக பாதுகாப்பது,

(ஆ) ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மிதவாத மையக் கருத்துக்கு புத்துயிர் அளிப்பது மற்றும் மத்திய தளத்தில் உள்ளவர்களிடம் முறையிடுவது போன்றவற்றை செய்து சிங்கள தீவிரவாதத்தை எதிர்ப்பது,

விமல் வீரவன்ச மற்றும் சம்பிக்க ரணவக்க போன்றவர்கள் சஜித்தின் பின்துணையுடன் ரணில் விக்கிரமசிங்கா அல்லது சந்திரிகா வேட்பாளராகும் பட்சத்தில் தேர்தல் பிரசாரத்தில் ஐதேகவுக்கு தர்க்க ரீதியான பேரழிவை ஏற்படுத்தி தண்டிக்க முடியும், ஆனால் சஜித் அல்லது கரு வேட்பாளராகும் பட்சத்தில் அவர்களால் அப்படிச் செய்ய முடியாது.

சிங்கள தீவிரவாதிகளின் தாக்கத்தின் வேகத்தை, அதிருப்தியை திசை திருப்புவதன் மூலம் மட்டுமே தணிக்க முடியும், அந்த திசை திருப்பலுக்கு தனித்து ஜேவிபி மட்டும் மிகச் சிறியதாக உள்ளது. இதன்படி ஜனாதிபதி ராஜபக்ஸ தனது தேர்தலில் வெற்றி பெற்று விடுவார் ஆனால் அதனால் மட்டும் உண்மையான் நெருக்கடி மற்றும் ஆழமான இயக்கவியல் என்பனவற்றை தடுத்து நிறுத்த முடியாது என கண்டறிந்தார். மகிந்த ராஜபக்ஸ தனது அமைச்சரவையில் சிங்கள தீவிரவாதிகளுக்கு புகலிடம் கொடுத்திருப்பதைப் போலவே, மிகவும் தாமதமான முடிவாகும்வரை ஜேஆர்.ஜெயவர்தனவும் சிறில் மத்தியுவுக்கு புகலிடம் கொடுத்திருந்தார்.

தேசப்பற்றுள்ள சிங்கள தீவிரவாதம் ஆயினும்கூட அதி தீவிரவாத கருத்தியல் அவதாரமாக உருவெடுத்து 1980 களில் வன்செயல்களில் ஈடுபட்டபோது, சகல பிரமைகளும் சிதறடிக்கப்பட்டு முன்னைய முனைவாக்கங்கள் யாவும் உயிர் வாழ்வதற்கு ஏற்ற புதிய கூட்டணிக்கு வேண்டி கலைக்கப் பட்டன. பழம்பெரும் சிங்கள மற்றும் அரசியல் பத்திரிகையாளரான சுரத் அம்பலாங்கொட ஸ்ரீலங்கா மகாஜனக் கட்சியின் அரசியல் பணியகத்தில் உரையாற்றும்போது, ஜனாதிபதி ஜெயவர்தனாவின் முரண்பாட்டை தான் எப்படி அனுபவித்து மகிழ்ந்தார் என்று சிரித்தபடி ஜேஆரினால் சிறையில் அடைக்கப்பட்டு ஆபத்தில் சிக்கி வெளியே வரவேண்டியிருந்த விஜய குமாரதுங்கவிடம் சொன்ன கதையை திரும்பவும் சொன்னதை நான் நினைவு கூர்ந்தேன். அப்போது சுரத் சிரிப்பொலியுடன் சொன்னது "இப்போது அந்த பரத்தையின் மகனுக்கு நாங்கள் மட்டுமே உள்ளோம்" என்று, அதற்கு விஜயவின் நிதானமான ஒழுங்கான பதில் "நல்லது, இப்போது எங்களுக்கும் அந்த பரத்தையின் மகன் மட்டுமே உள்ளான்" என்பதாக இருந்தது.

பாசிசத்தின் அச்சுறுத்தலுக்கு முகம் கொடுப்பதிலும் மற்றும் போராடுவதிலும் மனித நேயம் மிகப் பெரிய விலையை கொடுத்து அநேக பாடங்களைக் கற்றுள்ளது. 1920 மற்றும் 1930 களில் நல்ல பத்து வருடங்கள் அல்லது அதற்கு அதிகமான காலத்தில் சிறந்த மார்க்சிய மூளைகள், தீவிர இடதுசாரிகள் (பெரும்பாலும் போலி அறிவாளிகள்) பாசிச வரையறுப்பை புரிந்து கொள்ள தவறியதாக பாசாங்கு செய்யும் குட்டி முதலாளிகள் ஆகியோருக்கு எதிராகவும், மற்றும் ஒன்றில் ஆட்சியிலுள்ள உயரடுக்கினரின் வெற்று முகமூடிகளை கிழித்து அல்லது தந்திரங்களை குறைத்து, மிகவும் கடுமையான வடிவத்தில் நடப்பிலுள்ள தேசியவாதம் மற்றும் இனவாதம் அல்லது நலிந்த முதலாளித்துவம் மற்றும் ஏகாதிபத்தியத்தியம் என்பனவற்றுக்கு எதிராகப் போராட வேண்டியுள்ளது.

பாசிசத்துக்கு எதிரான போராட்டத்தின் நோக்கம், பாதுகாப்பு, அடிப்படை ஜனநாயகத்தை பாதுகாப்பது அல்லது மீளமைப்பது என்பனவற்றை புரிந்து கொள்வதாக இருப்பது அவசியம், முதலாளித்துவம் அல்லது அரசாங்கத்தை கவிழ்ப்பதாக இருக்கக்கூடாது. ஸ்ரீலங்காவில் ராஜபக்ஸக்களை நேரடியாக எதிர்க்கும் ஒரு திட்டம் உள்ளது, அரசாங்கம் முழுவதும் மற்றும் சிங்கள பௌத்த தேசியவாதம் போன்றவை வெறுமனே பாசிசம் அல்லாது பார்வைக்கு வெளிப்படையாக மிக அதிகம் தோன்றும் விதத்தில் எதிர்த்து நிற்கின்றன. அத்தோடு விகிதாரசப்படி சர்வதேச விசாரணைக்கு எதிர்ப்பு இல்லை, மற்றும் மாறாக தேசியத்தையும் சுயநிர்ணய உரிமையையும் உட்படுத்தி கோரிக்கை விடுக்கும் தமிழ் தேசியவாதத்துடன் ஒற்றுமை இருக்கவேண்டும் என்பதையும் நீங்கள் சேர்த்துக் கொண்டால், பரந்த அளவில் அதனுடன் ஒருமித்த கருத்துள்ளவர்களாக இருப்பவர்கள் நாட்டின் பிரஜைகளில் சிறிய ஒரு சத விகித்தினர் மட்டுமே. இது பிரதான எதிரியை தனிமைப் படுத்தி சாத்தியமானளவு பரந்த ஐக்கிய முன்னணியை உருவாக்கும் அதேவேளை வெற்றிகொள்ளக் கூடிய அனைவரையும். வெற்றி கொள்வதோடு, வெற்றி கொள்ள முடியாதவர்களை நடுநிலைப் படுத்தவேண்டும் என்கிற மாவோவின் அடையாளம் காண்பதற்கான தடையுத்தரவுடன் உடன்படுவது அரிதாகிறது. எல்லவற்றையும் கவிழ்ப்பதற்கு வழிதேடுபவன் எதையுமே கவிழ்த்துவிட முடியாது என்று மாவோ பரிகாசமாகச் சொல்லியிருக்கிறார். மாறாக அவர் கொள்கை முரண்பாடுகளை அடையாளம் காண்பதை பரிந்துரை செய்கிறார்.

இன்று ஸ்ரீலங்காவில் பிரதான எதிரி யார்? சமகால ஸ்ரீலங்காவின் அரசியல் மூலோபாயம் நடுநிலைப் படுத்தவேண்டியதை இன்றிமையாதாக்குகிறது, அல்லது மிகவும் ஆபத்தான எதிரியான தீவிரவாதப் பிசாசுடன் போராடுவதற்காக சிறிய பிசாசுகளுடன் கூட்டு வைக்கலாம் என்கிறது.

இன்று ஸ்ரீலங்காவில் உள்ள கொள்கை முரண்பாடு என்ன? ஒரு புறம் மிகவும் முக்கியமாக சிங்கள பௌத்தர்களை உள்ளடக்கிய அளவுக்கு அதிகமான பெரும்பான்மை பிரஜைகளின் நலன்கள், (கருத்தியல் முக்கியமாகவேண்டிய அவசியம் இல்லை) மற்றும் ஸ்ரீலங்கா ஆயுதப்படைகள். மறுபுறத்தில் தேசிய இறையாண்மை, உறுதிப்பாடு, பாதுகாப்பு, சமாதானம், ஐக்கியம் மற்றும் ஜனநாயகம் என்பனவற்றுக்கு அச்சுறுத்தல் விடுப்பவர்கள், பிரதானமாக சர்வதேச விசாரணையை தூண்டும் தமிழ் பிரிவினைவாதிகள் உட்பட்ட வெளி சக்திகள் மற்றும் சிங்கள பௌத்த தீவிரவாதிகளின் பிரிவினைவாத போராளிகள் ஆகியோரே.

நவீன பாசிசத்தின் தனித்துவத்தை புரிந்து கொள்ளத் தவறிய தீவிர இடதுசாரிகளுக்கு லத்தீன் அமெரிக்கா (சிலியை தவிர்த்து) ஒரு இடுகாடாக மாறியது , அதனை அப்போதுள்ள ஆட்சியமைப்பின் ஒரு தொடர்ச்சியாக கருதியதால் அவர்கள் அதற்கான விலையை செலுத்த வேண்டியவர்களானார்கள். இன்று தேர்தல் மூலம் வெற்றிபெற்ற இடதுசாரிகள் உள்ள லத்தீன் அமெரிக்காவில் அவர்கள் அந்த தவறுகளை திருத்தி, நேரடி தாக்குதல் முறையை கைவிட்டு நவீன கிராம்சியின் மூலோபாயத்தை பின்பற்றியதால், ஒரு பரந்த முன்னணியை கட்டியெழுப்பி மற்றும் வியாபார வர்க்கம் மற்றும் ஆயுதப் படையினர் உட்பட்ட சமூக அமைப்புக்களால் அவர்கள் மிகச் சிறந்த முழு நாட்டினதும் மற்றும் தேசிய நலன்களினதும் முதிர்ச்சியடைந்த பிரதிநிதியாக அங்கீகாரம் பெறும்வரை அதனை மையத்துக்கு மாற்றினார்கள்.

1985ல் மாஸ்கோவில் நடைபெற்ற இளைஞர்கள் மற்றும் மாணவர்களின் உலகத் திருவிழாவின் போது, இரண்டு பழைய கால புரட்சி வீராகள் உரையாற்றினார்கள். ஒருவர் 1933ல்எல் சல்வடோரில் பிரசித்தமான பராபவுண்டோ மார்ட்டி தலைமையில் இடம்பெற்ற கம்யுனிச கிளர்ச்சியில் பங்கேற்ற தலைவர்களில் ஒருவரான மிக்குவல் மார்மோ, மற்றவர் கெர்ட் ஜூலியஸ் கோல்ட்ஸ்ரீன் என்கிற ஜேர்மனியின் யூத கம்யுனிஸ்ட், இவர் ஸ்பெயின் உள்நாட்டு யுத்த அனுபவம் உள்ளவரும், ஒஸ்ச்விட்ஸ் மற்றும் புச்சன்வால்ட் செறிவு முகாம்களில் அடைபட்டு உயிர் பிழைத்தவரும் மற்றும் நாஜிக்களுடன் போராடிய பாசிச எதிர்ப்பு போராளிகளின் உலக ஒன்றியத்தின் தலைவருமாவார். அவரை நான் சந்தித்தது ஜூலை 83 கலவரங்கள் நடந்து முடிந்த இரண்டு வருடங்களின் பின்னர்,

மற்றும் அவரது அனுபவத்திலிருந்தும் வெற்றி வீரர்களான அவரது தோழர்களிடமிருந்தும் அவர் கற்றுக்கொண்ட பிரதான பாடம் என்ன என்று அவரிடம் நான் கேட்டேன். அவரது பதிலை அப்போது இருந்த லங்கா கார்டியனில் நான் பதிவு செய்திருந்தேன். இடது செய்த மிகப் பெருந் தவறு, தேசியவாதம், பேரினவாதம், மற்றும் பாசிசம் என்பவைகளை போட்டுக் குழப்பியதுதான் என்று அவர் சொன்னார். "பாசிசத்துக்கு எதிராகப் போராட நாங்கள் தேசியவாதத்துடன் பேரினவாதத்தைக் கூட இணைக்க வேண்டும், மாறாக அவை அனைத்தையும் நாங்கள் ஒன்றாகவே பரிஸ்கரித்தோம்".

1920 மற்றும் 1930 களில் உள்ள ஐரோப்பிய தேசியவாதத்தை போன்றதே சிங்கள மற்றும் சிங்கள பௌத்த தேசியவாதமும். சிங்கள பௌத்தம் மிகவும் பழமையானதால், ஆழ வேரூன்றி, பரந்ததும் கரிமத் தன்மையானதுமாக உள்ளதால் நேரடியாக மோதலை ஏற்படுத்தி உடைந்து போகிறது. மாறாக அது வெளிப்புறமாக எதிரீடு செய்ய உதவுவதாகவும் மற்றும் அதன் நெகிழ்வுத் தன்மை அங்கீகரிக்கப் படத் தக்கதாகவும் இருப்பதோடு, உட்புறமாக, நியாயமாகவும் மற்றும் உடனடியாகவும் பல்லினம், பல்சமயம், பன்மொழி, மற்றும் பல்கலாச்சார தன்மைகளை, அதாவது பன்மைத் தன்மையை ஏற்றுக்கொள்ள தக்க வகையில் மறுவேலை, மறு திருத்தம், மறு அமைப்பு மற்றும் மறு பொருத்தல் என்பவைகளை செய்துகொள்ள வேண்டும்.

சிங்கள பாசிசத்துக்கு எதிரான போராட்டம், தேசிய அரசியல் பிரதான நீரோட்டத்திலிருந்து அதனால் நடத்தப்பட வேண்டும், மற்றும் அதன் அதிர்வலைகள் அதற்கு உள்ளிருந்தே வரவேண்டும். சிங்கள பௌத்தம் மற்றும் சிங்கள தேசியவாதம் போன்றவைகளுடன் நேரடியாக மோதுவதால் சிங்கள பாசிசத்தை தோற்கடிக்க முடியாது.

**மொழி பெயர்ப்பு - எஸ்.குமார்** **நன்றி - தேனீ**

www.thenee.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எறிந்த பந்து எம்மிடமே திரும்பும் !!

...நாட்டு நடப்பு...

ஒரு மனிதனின் ஆசைகள் ஒன்றா, இரண்டா சொல்லி முடிப்பதற்கு ஆசைகள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒரு விதம். அதிலும் சிலர் பொது நலனை மனதில் ஏந்தி ஆசைப்படுவார்கள். பலர் சுயநலனை நோக்காகக் கொண்டு ஆசைப்படுவார்கள். பொது நலன் தொடர்பில் ஆசைப்பட்டு அந்த இலக்கை அடைந்தவர்களை உலகம் என்றுமே மறந்ததில்லை. நாம் கூட இன்று நம் மத்தியில் இல்லாத அவ்வாறான எத்தனையோ பெரியோர் களையும், கல்வி மான்களையும் அரசியல் வாதிகளையும் அடிக்கடி நினைவுகூர தவறுவதில்லை.

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியான காலம் சென்ற ஆபிரகாம் லிங்கன் ஓர் ஏழைக்குடும்பத்தை சார்ந்தவர். அவரின் தந்தை ஒரு தச்சு தொழிலாளி. லிங்கனிடமும் அன்று பல ஆசைகள் இருந்தன. ஆசைக்கு ஏழை, செல்வந்தர் போன்ற பேதமில்லை. அது எப்பொழுதும் எவரிடமும் தோன்றலாம்.



மேலும் சுயநலத்தினை காரணமாகக் கொண்ட பலரின் ஆசைகள் கனவாகி நனவாகுவது போன்று பொது நலனை நோக்காகக் கொண்ட பலரின் ஆசைகளும் நிறைவேறியுள்ளதை குறிப்பிட்டாக வேண்டும்.

அதனால் தான் என்னவோ 'இளைஞர்களே கனவு காணுங்கள்' என அப்துல் கலாம் அடிக்கடி இளைஞர்களைப் பார்த்து கூறிவருவார். ஆபிரகாம் லிங்கன் கிறிஸ்தவ சமயத்தை சார்ந்தவரென்பதால் அடிக்கடி அன்று அண்மையிலுள்ள கிறிஸ்தவ ஆலயத்திற்கு சென்று வருவார்.

அவரின் கிறிஸ்தவ பாதிரியார் அன்றைய போதனையின் போது சகலரையும் பார்த்து 'இங்கு யார்? யாருக்கு? மோட்சத்திற்கு செல்ல விருப்பம்' எனக் கேட்டார். பலர் முண்டியடித்துக்கொண்டு தங்கள் இருகரங்களையும் உயர்த்தி ஆசையை வெளிப்படுத்தினர். ஆனால் ஒருவர் மட்டும் கரங்களை உயர்த்தாமல் அமைதியாக இருப்பதை அவதானித்த பாதிரியார், ஏன்? உனக்கு மோட்சத்திற்கு போக ஆசை இல்லையா? நரகத்திற்கா போகப் போகிறாய் எனக் கேட்டார்.

எனக்கு இரண்டுக்கும் செல்ல ஆசை இல்லை. நான் அமெரிக்காவின் வெள்ளை மாளிகையின் ஜனாதிபதியாக செல்ல ஆசைப்படுகின்றேன்' என்றார் அன்று கரங்களை உயர்த்தாதிருந்தவர். மீண்டும் பாதிரியார் அவரைப் பார்த்து ஏன் உனக்கு அப்படியொரு ஆசை? என வினவினார்.

'எனது உடன்பிறவாத கறுப்பு இன சகோதரர்கள் இன்று அமெரிக்காவில் அடிமைகளாக வாழ்வதை என்னால் சகிக்க முடியவில்லை. சாதாரண பிரஜையாக இருந்து கொண்டு அவர்களின் அடிமை சங்கிலியை உடைத்தெறிய முடியாது. ஜனாதிபதியாக வந்தால் மட்டுமே அதை செய்ய முடியும்! என்றார் அவர்.

அன்று 16 வயதில் ஏற்பட்ட அந்த ஆசையை 48 வயதில் பூர்த்தி செய்து கொண்டவர் தான் ஆபிரகாம் லிங்கன். மேலும் ஜனாதிபதியாக அமெரிக்க மக்களால் தெரிவு செய்யப்பட்ட அவர் முதன் முதலில் கையொப்பமிட்ட ஆவணமானது கறுப்பு இன மக்களின் அடிமை நிலையை இல்லாதொழிக்கச் செய்தது.

சிறு வயதில் ஏற்பட்ட அந்த தன்னலமற்ற அவரின் ஆசை அன்றைய கறுப்பு இன மக்களின் அடிமைச் சங்கிலியை தகர்த்தெறிய காரணமாக இருந்ததையிட்டு முழு உலகமும் அவரைப் பாராட்டத் தவறவில்லை. நம் நாட்டிலும் ஆசைகள் பல கொண்ட மூதாட்டியொருவர் அந்தப் பிரதேசத்தில் பலருக்கு தொல்லையாக இருந்து வந்தார். அவருடைய ஆசைகள் முற்று முழுதாக சுயநலத்தை அடிப்படையாக கொண்டிருந்தன.


தமது குடும்பத்தாருக்காக பொருள் பண்டம், சொத்து ஆகியவைகளை சேர்ப்பதே அவருக்குள் இருந்த முக்கிய ஆசைகளாகும். அவற்றை அடைவதற்காக அவர் எதையும் செய்ய துணிந்துவிடுவார். அதனால் அப்பகுதியில் பலரை பகைத்துக்கொள்ள நேரிட்டது.

அயலவர்கள் அவரைக் கண்டு பயந்தனர். பில்லி, சூனியம் போன்ற மாந்திரீக நடவடிக்கைகளைக் கொண்டு அயலவர்களை அச்சுறுத்தி வந்தார். அதனால் அயலவர்கள் அவருடனும், அவரின் குடும்பத்தினருடனும் எந்த உறவையும் வைத்துக் கொள்ள விரும்பவில்லை.

அவரின் குடும்பத்தில் திருமணமான பிள்ளைகளில் பலர் பிரிந்து வாழ்வதற்கு காரணம் அந்த மூதாட்டியின் தரம் கெட்ட நடவடிக்கைகளே. அவரின் அற்ப ஆசைக்கு தனது சொந்த பிள்ளைகள் தானும் தடையாக இருந்தால் அவர்களைக் கூட விட்டு வைக்காது தனது மாந்திரீகம் மூலம் தக்க தண்டனையை பெற்றுக் கொடுத்துவிடுவார். மேலும் அந்த மாந்திரீக வேலைகளை அவருக்கு செய்து கொடுப்பது அந்த மூதாட்டியின் மிக நெருங்கிய உறவினர்களில் ஒருவரே.

ஒரு தடைவ மூதாட்டிக்கும் முன் வீட்டாருக்கும் இடையில் ஒரு சிறிய வாக்குவாதம் சாலையில் இடம்பெற்று அது அன்றே தணிந்து விட்டது. இருந்தாலும் அந்த மூதாட்டியின் கோபம் தணியவில்லை. எப்படியும் முன் வீட்டாரை பழிதீர்க்க கங்கணம் கட்டினார்.

அன்று மாலை முன் வீட்டு குடும்பத்தலைவன் வேலை முடிந்து வீடு திரும்பியதும் தனது படலையை திறந்து வீட்டுக்குள் சென்ற வேளை அந்த மூதாட்டி ஒருவருக்கும் தெரியாமல் அவனின் வளவுக்குள் சென்று குடும்பத் தலைவனின் கால் அடித்தடம் பதிந்த இடத்தின் மண்ணை ஒரு பொட்டலத்திற்குள் எடுத்து மடியில் வைத்துக் கொண்டார்.



திடீரென வீட்டிற்குள் இருந்து வெளியே வந்த அந்த குடும்பத் தலைவன் மூதாட்டியை கண்டுவிட்டான். மூதாட்டியால் ஒன்றும் பேச முடியவில்லை. அதற்குள் சத்தம் கேட்டு அயலவர்கள் அங்கு ஒன்று கூடிவிட்டனர்.

மூதாட்டியின் மடியில் மண் பொட்டலம் இருந்ததைக் கண்ட அயலவர்களுக்கு மூதாட்டியின் நோக்கம் தெரியவரவே மண் பொட்டலத்தை அவ்விடத்திலே போட்டு விட்டு மூதாட்டி அசடுவழிய அங்கிருந்து வெளியேறினார். அவ்விதமான சம்பவங்கள் பல அப்பகுதியில் ஏற்கனவே இடம்பெற்றுள்ளன.

இருப்பினும் மூதாட்டியின் நடவடிக்கைகளில் எவ்வித மாற்றமும் இதுவரை இடம்பெற்றதாக தெரியவில்லை. அவ்வாறே பக்கத்து வீட்டுக்காரருடனும் ஒரு தடவை எல்லை பிரச்சினை ஏற்பட்டது. அவர்கள் எப்படியோ தங்கள் காணியில் ஏதோ தடங்கள் இருப்பதை அறிந்து கொண்டு பிரபல மாந்திரீகர் ஒருவரை அழைத்து ஆராய்ந்து பார்த்த பொழுது குறித்த வளவின் மூன்று இடங்களில் சிறியளவு மூன்று கண்ணாடிப் போத்தல்கள் புதைக்கப்பட்டதை அறிந்து அவற்றை கண்டெடுத்தார்கள்.

அந்த மூன்று சிறிய போத்தல்களுக்குள்ளும் பில்லி சூனியத்திற்கான மாந்திரீக தடயப் பொருட்கள் இருந்தன. அவை அனைத்தும் அந்த பிரபல மாந்திரீகரால் அகற்றப்பட்டு அக் குடும்பத்தாரை மேலும் தீய சக்திகளிடமிருந்து பாதுகாக்க சமயக் கிரியைகள் விசேடமாக மேற்கொள்ளப்பட்டன.

மூதாட்டியின் ஏவப்பட்ட அந்த தீய பில்லி சூனியங்களை அகற்ற அந்த வீட்டு உரிமையாளரால் பாரியளவு பணத்தை செலவு செய்ய நேரிட்டது.

சுவரிலே நாம் எறியும் பந்து மீண்டும் எமது கரங்களுக்கே வந்து சேருவது போன்று அந்த மூதாட்டியின் தீய செயல்களுக்கு மனிதர்கள் தண்டனை வழங்காவிட்டாலும் இறைவன் தக்க தண்டனையை வழங்கி இருந்தான்.

ஆம்.. .. சுமார் ஒரு வருட காலமாக அந்த மூதாட்டி நடமாட முடியாத நிலையில் படுத்த படுக்கையாக இருந்தார். பாரிச வாதம் காரணமாக அவரது கைகால்கள் செயல் இழந்து அவர் மிகவும் கஷ்டமாக தன் வாழ்நாளைக் கழித்தார். அவரின் சில பிள்ளைகள் அவர் சுகயீனமாக இருந்த போது அவரைப் பார்க்கவே செல்லவில்லை. மேலும் ஊண், உறக்கம் இன்மையால் கடந்த வாரம் காலமானார். அயலவர்களில் பலர் மரண வீட்டுக்கே செல்லவில்லை. ஒரு சிலரே இறுதிச் சடங்கில் கலந்து கொண்டனர். அவர் இறந்ததையிட்டு பலர் அப்பகுதியில் சந்தோசப்பட்டனர். அவரை நல் அடக்கம் செய்யப்பட்ட அன்றே அந்த வீட்டில் அமளிதுமளியாக இருந்தது. தாயின் சொத்துக்காக அவரின் பிள்ளைகள் ஆளுக்கால் முட்டி மோதிக் கொண்டனர். 'தாயைப் போல் பிள்ளை நூலைப் போல் சேலை' என்று பெரியவர்கள் தெரியாமலா கூறி வைத்திருக்கிறார்கள்.?



மகா வீரன் அலெக்ஸ் சாண்டர் தான் இறந்தபின் நல்லடக்கத்திற்காக தன்னை மயானத்திற்கு கொண்டு செல்லும் போது சவப்பெட்டிக்கு வெளியே தனது கரங்கள் மக்களுக்கு தெரிகின்ற மாதிரி கொண்டு செல்லப்பட வேண்டுமென கட்டளை இட்டிருந்தாராம். காரணம், உலகின் பல நாடுகளை போரிட்டு தம் வசப்படுத்தினாலும் இறக்கும் பொழுது எதையும் எடுத்துச் செல்லாமல் வெறும் கரத்துடன் தாம் செல்வதை சகலரும் அறிந்து கொள்வதற்காகவே.

- பாலையூற்றான் -

## புகைபிடித்தல் உடலுக்குக் கேடு

சீனாவில் லியு என்பவர் மியா (2) என்ற நாயை வளர்த்து வருகிறார். வியாபாரியான லியு, அதிகமாக புகைபிடிக்கும் பழக்கம் உள்ளவர். இவர் சிகரெட் பிடிக்கும் போதெல்லாம் அருகில் இருந்து பழகி விட்ட மியாவுக்கு சிகரெட் வாசனையில் ஈர்ப்பு ஏற்பட்டது.

அதனால், லியு சிகரெட்டை பற்ற வைத்ததும் மியா எங்கிருந்தாலும் ஓடி வந்து விடும். இதை கவனித்த லியு, ஒரு சிகரெட்டை மியா வாயில் வைத்து பற்றவைத்தார்.



நாளடைவில் மியாவும் தனது எஜமானரை போலவே சிகரெட் பிடிக்க பழகி விட்டது. இப்போது மியா தூங்க செல்வதற்கு முன் கண்டிப்பாக ஒரு சிகரெட் கொடுத்தாக வேண்டும்,

## கடலுக்கடியில் சாதனை

அமெரிக்காவை சேர்ந்த பிரபல கடல் ஆராய்ச்சியாளரான ஜேக்கஸ் கவுஸ்ட்டேவின் பேரன் பேபியன் கவுஸ்ட்டே (46) கடலுக்கடியில் 31 நாட்கள் வசித்து சாதனை படைத்துள்ளார்.



இவர் 63 அடி ஆழத்தில் உள்ள ஆய்வகத்தில், தனது குழுவினருடன் கடந்த யூன் 1ம் திகதி சாகச ஆய்வுப்பயணத்தை தொடங்கியிருந்தார்.

அவருக்கு விஞ்ஞானிகள் தினமும் சீதோஷ்ண நிலை குறித்த விவரங்களையும், கடல் அமிலமாதல் குறித்த தகவலையும் தந்து கொண்டிருந்தனர். இந்நிலையில் கடலுக்கடியில் 31 நாட்கள் தங்கியிருந்து ஆய்வு நடத்திய இவர், தனது தாத்தாவின் 30 நாட்கள் சாதனை முறியடித்துள்ளதாக கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காற்றில் பறந்து மீண்டும் திரும்பிய வீடு

அமெரிக்காவில் வீசிய புயல் காற்றினால் வீடு ஒன்று பறந்து சென்றதில் அதிலிருந்த குடும்ப உறுப்பினர்கள் அதிர்ஷ்டவசமாக உயிர் பிழைத்துள்ளனர்.

கடந்த 16ம் திகதி அமெரிக்காவின் நெப்ரெஸ்கா நகரில் வீசிய பலத்த புயல் காற்றினால் 2 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.சுமார் 350 பேரின் வீடுகளை அடித்துச் சென்ற இந்த புயல் காற்றில், ஒரே ஒரு வீடு மட்டும் காற்றில் பறந்து சென்று மீண்டும் அதே இடத்தில் 180 டிகிரி கோணத்தில் அமர்ந்துள்ளது.

இந்த புயல் காற்று வீட்டை அடித்து செல்லும் காட்சி காணொளி ஒன்றில் படமாகியுள்ளது. இங்கிருந்த சாவேஜ் (25) என்ற நபர் மற்றும் அவரின் இரண்டு குழந்தைகள் போர்வையுடன் இருந்துள்ளனர். காற்றில் போர்வை பறந்து சென்றாலும் இவர்கள் படுகாயம் ஒன்றும் அடையாமல் அதிர்ஷ்டவசமாக உயிர் பிழைத்துள்ளனர்.



# ரயில் பயணம்!!

சிறுகதை

நெருக்கடி மிகுந்த அந்த இடத்திலும் நான் தனிமையில் நின்று கொண்டிருந்தேன். நான் விடும் பெரு மூச்சுகள் எவர் கவனத்தையும் பெறுவதோ திருப்புவதோ இல்லை என்பதை விட வருத்தப்படுவதைக் கண்டு கொள்ளாதவர்கள் சூழ இருப்பதுதான் பெரிய வருத்தமாய் இருக்கிறது.

எனக்குள் ஏறியிருந்த மனிதர் கூட்டம் என்னை முற்றிலுமாய் மறந்து விட்டிருந்தது. நான் அவர்களாகவே அவர்களுக்கு மாறிப் போயிருந்தேன்.
ஒரு திசை பார்த்து ஓடிக் கொண்டிருந்தேன். இல்லை ஓட்டப்பட்டுக் கொண்டிருந்தேன். எனக்கான மனதாய் அவள் சிந்தித்துக் கொண்டிருந்தாள். அவளது சிந்தனைகள் நினைவுகள் எனக்குள் கேட்கிறது.

அவளும் அவளது குழந்தையும் அமர்ந்திருந்தார்கள். ஊருக்குப் போகும் சந்தோசம் அவள் குழந்தைக்குள் கொப்பளித்துக் கொண்டிருந்தது. அவளது கவனமும் சிந்தனையும் குழந்தை மேல் படிந்திருந்தது. பெட்டிகளை இருக்கைக்கடியில் அழுத்தித் தள்ளியாச்சு, கைப்பை பக்கத்திலேயே இருக்கட்டும் அப்பதான் கவனமா இருக்கும். தண்ணி பாட்டில் எடுத்து கைக்கருகே வைக்க ஓடி வந்து தண்ணீரை வாங்கிக் குடித்து சட்டையை ஈரமாக்கிப் போனான். இருக்கைக் கடியில் தள்ளிய பையை மீண்டும் எடுத்து சட்டை ஒன்றை வெளியில் எடுத்து மாற்றி விட்டாள்.

டிக்கெட் பரிசோதகர் வந்தமர்கிறார் இருக்கையில்.

கையில் அட்டை அதில் கொஞ்சம் தாள்கள். பெயர் பட்டியலோடு கையில் நான் தயாராக எடுத்து நீட்டிய பயணச் சீட்டு வாங்காமலேயே முகம் நிமிர்ந்து எனை ஆழ ஊடுருவும் பார்வை, அவர் பார்க்கப் பெயரையும் குழந்தை பெயரையும் உச்சரிக்கிறேன்.

அவர் வாய்க்குள் நுழைய மறுத்த என் பெயர் திரும்ப அவர் உச்சரிக்க முயல நான் மீண்டும் திருத்தி உச்சரிக்கிறேன். பெயர்ப் பட்டியலில் தேடிக் குறித்துக் கொண்டு பயணச் சீட்டிலும், கிறுக்கி முடித்துத் திரும்ப நீட்ட வாங்கி கைப்பைக்குள் பத்திரப் படுத்துகின்றேன். அவரை நோக்கி இரு இளம் பெண்கள் வருகின்றனர். தாயும் மகளும். அவர்கள் மொழி எனக்கு அந்நியமாய் இருந்த போதும் பல நேரங்களில் புரிதலுக்கு மொழி ஒரு தடையல்ல என்று உணர்த்திப் போகின்றன இது போன்ற தருணங்கள்.

அவர்கள் குரலில் ஒரு கெஞ்சல். படுக்கைக்கான இடம் உறுதியாகவில்லை மாற்று ஏற்பாடு செய்து தரச் சொல்லிக் கெஞ்சுகிறாள் மகள். அலட்சியப்பார்வை கண்களில் தொக்கமற்ற எல்லா சீட்டுகளையும் சரிபார்த்து விட்டு அந்த பெரியம்மாவை அங்கேயே அமரச் சொல்லி விட்டு
"வா பார்த்து ஏற்பாடு செய்கிறேன்."
சொல்லி கறாராய் முன்னால் நடக்க எனக்கு ஏதோ உறுத்திற்று. அவள் செருப்பை மாட்டி அவர் பின்னால் போக முற்பட அவள் பின்னிருந்து கைகளை மெல்லத் தொட்டேன். திரும்பினாள். நான் தலையை இடம் வலமாக ஆட்டி கண்களைச் சுருக்கி யோசனையோடு வேண்டாமென்று தலையாட்ட ஏன்? என்பதாய்



குழப்பமாய் அவள் பார்க்க உள்ளுணர்வு நான் சொல்வதை கேட்கச் சொல்லியிருக்க வேண்டும்.
எனையே பார்த்துக் கொண்டிருக்க,
"அவர் மீண்டும் இந்தப் பக்கம் தான் வருவார்."
என் சைகைமொழி அவளுக்குப் புரிய அமர்ந்தாள். பரிசோதகர் பெட்டி கடைசி வரை போய்த் திரும்பி பார்த்தார். நான் அவரையே பார்த்துக் கொண்டிருப்பது உறுத்த ஏதோ யோசிப்பதாய் பாவனை காட்டி விட்டு நடக்கத் துவங்கினார்.

இதற்கிடையில் நானும் குழந்தையும் கொண்டு போயிருந்த சாப்பாட்டைச் சாப்பிட்டு கை கழுவப் போகும் போது பரிசோதகர் அமரும் இருக்கையில் நடுத்தர வயது பெண் அமர்ந்திருந்தாள்.

முன்பதிவு செய்யாது மாறி ஏறியிருப்பது அவள் உட்கார்ந்திருந்த தயக்கத்தில் தெளிவாகத் தெரிந்தது. எங்களோடு இருந்தவர் ஒருவர் அடுத்த பெட்டிக்கு போகுமாறு மிரட்ட, அவள் பார்வையைத் தழைத்துக் கொண்டாள். முடியை அள்ளிக் கொண்டை இறுக போட்டிருந்தாள். முகத்தில் கிராமத்துக்களை தெளிவாகத் தெரிந்தது. பவுடர் அவளுக்கின்னும் அறிமுகமா யிருக்கவில்லை. கையில் ஒரு சின்ன துணிப்பைக் கட்டும், பெரிய போராட்டத்துக்கிடையில் அவள் மனம் இருந்ததை அவளது முக இறுக்கமும், நெஞ்சோடு அணைத்திருந்த மூட்டையும் காண்பித்தது.

திடீரென ஏறிய அவள் எதுவும் திருடிப் போய் விடுவாளோ? எல்லாருக்குள்ளும் கூடுதல் எச்சரிக்கை ஓடிக் கொண்டிருந்தது. இன்னும் கொஞ்சம் பெண்கள் தங்கள் கணவன் மேல் கண் வைத்திருந்தனர்.

குழந்தைக்கு விரித்துப் போட்டு அவனைப் படுக்க வைத்தாயிற்று. அம்மாவும் மகளும் இன்னும், பதட்டத்தோடு பேசியபடி இருந்தனர். மீண்டும் பாதை வழி பரிசோதகர் வந்த படி இருக்க, அவர் பார்வையில் திருட்டுத்தனம் அப்பட்டமாய் தெரிந்தது. பார்வை தவிர்க்க நினைத்ததாலோ என்னவோ தலை கவிழ்ந்தபடி உள்ளங்கையில் தன் தலையைப் பதித்திருந்தாள். நின்றபடி குனிந்து அவளை உற்று நோக்கியபடி இருந்தவர், தோளில் கையிட்டுத் தொட்டு எழுப்ப, பதறி எழுந்தவள் தனையே உதறுவாள் என்று நான் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை.

ஏதோ அவர் கேட்க, அவள் கலவரமாய் பதில் சொல்ல இரயில் சத்தத்தில், பெருமூச்சில் அவள் குரல் வெறும் வாயசைப்பாய் மாறிப் போயிருந்தது. அவளை இறக்கி விட்டு விடுவார். அல்லது வேறு இடத்திற்கு, முன் பதிவு செய்யாத இடத்திற்கு போகச் சொல்வார் என்று நாங்கள் கணித்திருந்தது பொய்யாகிப் போக அவர் அவளைத் தாண்டி எங்களை நோக்கி வந்து விட அவள் தயக்கம் இன்னும் தீராமலேயே இருக்கையின் நுனியில் அமர்ந்தாள்.

தாயும் மகளும் தாங்களே சிலரோடு பேசி தங்களுக்கான இடத்தைத் தீர்மானித்திருந்தனர். ஒவ்வொருவராய் தூங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினார்கள். பரிசோதகர் எல்லாரையும் தாண்டி மறைந்துபோனார். ஒவ்வொரு விளக்காய் அணைக்கத் துவங்கியிருந்தனர். மெல்லப் பெட்டி நிலவு போர்த்திய வெளிச்சத்திற்குள் தூங்கப் போனது. இரயில் இரைச்சலை விட ஓடும் மின் விசிறிகளின் இரைச்சல் அதிகமாயிருக்கப் பூட்டுகளோடு இணைக்கப்பட்ட பெட்டிகளும், பைகளும் புரண்டு படுக்கும் பெண்ணின் கொலுசுச்சத்தமாய் சிணுங்கிக் கொண்டிருந்தது.

இரண்டு மூன்று நிறுத்தங்கள் வந்து போன போதும், காப்பி, டீ விற்கும் பையன்களின் சத்தம் கேட்டபோதும் அதற்குப் பழகிப் போய் எல்லாரும் உறங்கியிருந்தார்கள். இரயில் வேகமாய் கதவுக்கருகில் இருந்த வெளிச்சம் கீற்றாக என்மேல் விழுந்து கண்கள் வரை எனை வெட்டிக் கொண்டிருந்தது. சன்னலுக்கு நேராக இருந்திருந்த நிலவு இப்போது வானத்து உச்சிக்கு வந்திருக்க, என் பார்வையில் படாது போயிருந்தது.

மீண்டும் பரிசோதகர் வருகிறார். கையில் அட்டை இல்லை. போட்டிருந்த கருப்பு கோட் இல்லை. மெல்ல இருட்டை துழாவித் துழாவி வந்து கொண்டிருந்தார். மகள் படுத்துத் தூங்கிக் கொண்டிருக்க, நின்று தூங்கும் அவளை உற்றுப் பார்க்கிறார். எல்லாரும் தூங்கிவிட்டதாக நினைத்திருக்கக்கூடும்.

ஒத்தை சீட்டில் அமர்ந்திருந்த அந்த பெண் உட்கார்ந்த படியே இருக்க, அவள் தலை தடாலென விழுந்தது. தூங்கியிருக்க வேண்டும். எனைக் கடந்து சென்ற அந்த உருவம் அவள் அருகில் போய் நிற்க அவள் திடுக்கிட்டு எழ முயற்சிக்க தோளில் கை போட்டு அழுத்தி உட்கார வைக்கிறது. அந்த இருள் உருவம் வெளிச்சம் விழுந்த முக பக்கம் எனக்கு முதுகு காட்டியபடி இருக்க, இருள் முதுகே எனக்கு முகம் காட்டிய படி இருந்தது.
இதுவரை, இரைச்சலோடு ஓடிக் கொண்டிருந்த மின்சார விசிறிகளை விட என் இதய இரைச்சல் வேகமாய் அடிக்க அந்த சப்தத்தில் எல்லாரும் விழித்து விடப் போகிறார்கள் எனும் பயம் எனக்குள் அனிச்சைச்செயலாய் நிகழ்ந்து கொண்டிருக்க, சப்தம் தவிர்க்கவென்று மூச்சு விடுவதை நிறுத்திக் கொள்ள முயல்கிறேன்.

ஒரே இருக்கையில் அவளைத் தள்ளச் சொல்லி அந்த உருவமும் நெருக்கி அமர எதிர்பார்த்திடாத ஒரு கணத்தில் இதழோடு இதழாய் அவளை அழுத்தியிருந்தது.

என் கைகள் வேகமாய்த் தூங்கும் என் குழந்தையின் கண்களை மூடுகிறது அவன் தூங்கி வெகு நேரமாகிறது என்று தெரிந்திருந்தும். என் அசைவு சந்தேகம் தந்திருக்க வேண்டும். இருவரும் காணாமல் போகின்றனர். கழிவறை திறந்து மூடும் சப்தம்.

நிமிடங்கள் இடிஇடியாய் எனக்குள் இறங்க என்ன செய்வது? செய்யலாமா? கூடாதா? நானெப்படி தலையிட அடுத்தவர் அந்தரங்கம் பார்க்க நேர்ந்தது கூசிப் போக, மூடிய விழிகளோடு காதுகள் விழித்திருக்கின்றன. ஒரு சோடிக் காலடி ஓசை எனைக் கடந்து செல்கின்றது. விழிகள் மெல்லத் திறக்க இரண்டு நிமிட இடைவெளியில் நடுத்தர வயதுப் பெண் தலையெல்லாம் ஈரம் சொட்டச் சொட்ட வந்தமர்கிறாள்.

இருக்கையில் பையை இன்னமும் அழுத்தமாய் மடியில் வைத்தழுத்தியபடி. தலையிலிருந்து வழிந்த நீரா, இல்லை அவளது விழி நீரோ? யோசிக்க முடியாது திகைத்துப்போய் படுத்திருக்கின்றேன். நான் கையாலாகாது படுத்திருந்தது உறுத்த விழிகள் மூடிக் கொள்கின்றன. திறந்து நிஜம் பார்க்க பயம். எப்பொழுது தூங்கிப்போனேன் தெரியாது. விழிக்கும் போது அந்த இருக்கையில் ஆளில்லை.

காலை நேரச் சூரியன் விழிக்க, வீசிய இளந்தென்றல் இயந்திர வாசனையோடு முகத்தில் அடிக்கத் தயாரானேன் அடுத்த நிறுத்தத்தில் இறங்க, பையனை எழுப்பிப் பெட்டி எடுத்து, அவள் இறங்க அவளைப் போல உறங்காது விழித்திருந்த அயர்ச்சியில் எனது பெருமூச்சும் சேர்ந்தெழும்புகிறது.
அவளோடு நானும் இடம் பெயருகின்றேன்.

அடுத்த தொடர் வண்டி பார்த்து, குளிர் சாதன வசதி நிறைந்த அந்த பெட்டியிலவள் ஏற நானும் அவளோடு பயணிக்க முடிந்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் மனப் பேச்சு எனக்குள் கேட்டு எனை அவளோடு இழுத்து வந்திருந்தது. ஏறி வசதியாய் அமர்ந்த பின்னும் மனது நேற்று நடந்ததை அசை போட்டது, மூடும் வசதியுடன் இருந்த அந்த பெட்டி பார்த்து ஆறுதல், நெஞ்சுக்குள் முன் பதிவின்றி யாரும் எறி விட முடியாதென்று. கொஞ்ச நேரத்தில் என்னருகில் இன்னுமொரு குடும்பம் குழந்தையோடு. அந்தக் குழந்தைக்கு இரயில் வண்டி கப்பலாகியிருந்தது. அதன் கற்பனைக்குள் என்னையும் திணித்துக் கொள்ளப் பிரயத்தனங்கள் எடுத்துத் தோற்றுப் போயிருந்தேன். குழந்தையின் கற்பனா மனோ வேகம் நான் பயணிக்க முடியா வேகத்தில் இருக்க ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தேன் அவள் அறியாதபடி, அவளின் அதே கற்பனை எனக்கும் சுகம் தர ஆரம்பித்த நொடியில் ஒரு மெல்லிய அதிர்ச்சியுடன் எனது இரயிலும் அவளது கப்பலும் கிளம்பியிருந்தது.

அப்போ, கதவைத் திறந்து வந்தமர்ந்த பெண்மணி பார்க்க சுவாரசியம் தந்தாள். வயது நாற்பது இருக்குமா?



இருக்கும். மறைக்க நிறைய முயற்சிகள் எடுத்திருந்தாள் பலித்திருந்தது. ஆழ்ந்து கவனிப்பவர் கண்களை மட்டுமே ஏய்க்க முடியாத படி, தன் சாமான்கள் எல்லாவற்றையும் உரிய இடத்தில் வைத்து விட்டு கையில் புத்தகத்துடன் அமர்ந்தாள். தன் இருக்கையில் கண்கள் நோட்டம் விட்டன. கூட இருந்தவர்களை நோக்கி அவள் சிரித்தாள் எனைப் பார்த்து, எனைப் பார்த்து சிரித்தாளா இல்லையா என்கின்ற யோசனையில் அவள் பார்வை என்னிடமிருந்து மீண்டு போய் விட்டது என் சிரிப்பை எதிப்பார்க்காது. போயின பொழுதுகள்....

மெல்லச் சூரியன் தன் கடையைச் சுற்றித் தூக்கிக் கொண்டு போக இப்பொழுது புதிதாய் ஆட்கள் வந்திருந்தார்கள். குழந்தையுடன் இருந்த குடும்பம் இறங்கிப் போயிருந்தது. கல்லூரி மாணவன் தோற்றத்தில் ஏறியிருந்தான். நான் பையனைத் தூங்க வைக்கத் தயாராகியிருந்தேன். தனியே அமர்ந்திருந்த அந்த பெண்மணியை நெருங்கிச் சென்று நின்றான் அவன். அவர்கள் பேசுகிற உரையாடல் பையனை தூங்க வைக்கத் தூங்குகின்ற பாவனையில் இருந்த என்னால் உணர முடிந்திருந்தது. மெல்ல ஒரு அறிமுகம் அவர்களுக்குள் ஆரம்பமாகத் துவங்கியிருந்தது.

ஒவ்வொரு பெட்டியின் விளக்கும் ஒவ்வொன்றாய் அணையத் துவங்க நேற்றைய இரவு வந்து போகுது, நினைவில் உரையாடலைத் தொடர்ந்து சிரிப்புச் சத்தம் கேட்க நான் கண் விழித்துப் பார்க்கிறேன். அந்த பெண்மணியின் அருகில் அவன் இப்போது அமர்ந்திருந்தான்.

தன்னை ஒரு தொழிலதிபரின் மனைவியாக அறிமுகம் செய்து கொண்டிருந்தாள் அவள். அவளது பேச்சில் தனது தனிமை பற்றிய சுய பச்சாதாபம் இருக்க, அவளது சிரிப்பையும் தாண்டி கவலை, வருத்தம் பேச்சில் தொக்கி இருந்தது. அவன் அதை அடையாளம் கண்டு கொண்டிருக்க வேண்டும். அவனது கணிவான, மகிழ்வான பேச்சுக்கு அவள் அடிமையாகிக் கொண்டிருந்தாள்.
பள்ளம் நோக்கி நதி பாயத் துவங்கியிருந்தது.

அவர்கள் கைகள் கோர்த்தபடி பேசிக் கொண்டிருந்தது அதிர்ச்சி தர இன்னும் அழுத்தமாய் மூடிக் கொள்கிறேன் விழிகளை. பேச்சிலும் நடவடிக்கையிலும் அவர்கள் நெருக்கம் கூடிக் கொண்டிருக்க இன்று எனக்குள் நேற்று இருந்த கூச்சம் போயிருந்தது. அடுத்தவர் அந்தரங்களைப் பார்க்க நேற்றுக் கூசிய மனது இன்று பழகிப் போயிருந்ததா?

காசு மட்டும் மனிதனுக்கு, மனிதன் மனத்திற்கு போதாமல் போயிருப்பது உறைக்க ஆரம்பித்திருந்தது, அவளின் தனிமை இந்த கொஞ்ச நேரத் துணையில் தீர்ந்து போகுமா? இல்லை அந்த கொஞ்ச நேரத்தை இழக்க தயாராயில்லாத நிலையில் இருக்கிறாளா? வார்த்தைக்கு வார்த்தை கணவரின் பெருமை பற்றி பேசிக் கொண்டிருந்தாள். கூடவே எல்லாம் இருந்தும் தனக்குள் இருந்த வெறுமை பற்றியும்.
"இரயிலில் இருந்து இறங்கிப் போனவுடன் மறந்து விடுவீங்க?"

கேள்வி சிரிப்போடு கேலியாய்ப் பேசுவதாய் இருந்திருந்தது. தனிமையுணர்வை தொலைக்க ஓர் ஆணைச் சார்ந்திருக்க வேண்டிய நிர்பந்தம் அவளுக்குள் ஏற்பட்டிருப்பது தெளிவாயிருந்தது. இந்த நிர்பந்தத்தை கடந்துவிட அவள் முயலவில்லையா? இல்லை முடியலையா?

இருள் பிரியாத விடியற்காலையில் விழித்துப் பார்க்க எல்லாரும் தூங்கிப் போயிருந்தனர் அவரவர் இடத்தில். நான் இறங்க வேண்டிய இடம் வந்திருக்க என் பையனைத் தோளில் தூக்கியபடி இரயில் விட்டு இறங்கினேன். அவள் இறங்க, நானும் அவளுள்ளிருந்து விடைபெற்று,

இயற்கையின் எல்லா நிர்பந்தங்களையும் கிழித்துக் கொண்டு பேரிரைச்சல் செய்தபடி எனக்கான பாதையில், தடம் மாறும்போது எனக்கான இலக்குகளை நோக்கியபடி ஓடத் துவங்கினேன்.

நன்றி - நனைந்த நதி

# கவி முரசு

## நல்லதும் தீதும் !!

கற்றுக் கொண்ட பாடங்கள்
முற்றுப் பெறவில்லை
காணாமற் போனோரின்னும்
கண்டறியப்படவில்லை!

மத நல்லிணக்கங்கள்
வளர்வதாக இல்லை
மலர்வதாக இல்லை
மனித நேய முன்னெடுப்பு!

அபிவிருத்திப் பணிகளில்
அதிக முன்னேற்றம்
ஆமை வேகத்தில்
பிரச்சினைக்குத் தீர்வு!

வேலை வாய்ப்பை வழங்கிய
மிகச்சிறந்த திட்டம்
பாலை வார்த்து பட்டதாரிகளை
பணிக்கெடுத்த கட்டம்!

ஆச்சரியம் மிக்கதொரு
அழகிய தேசமாக
அமைவதற்கு அதிவிரைவில்
அமைதிதரும் அரசியல்
தீர்வு கிட்டவேண்டும்!

## மீள் வாசிப்பு

மாயன்



எனது மண்ணிற
மேசையின் மீது
நான்காய் மடிந்து
மின்விசைக் காற்றில்
படபடத்துக் கிடக்கிறது
உன் கடிதம்...

என் மனம் போல்
படபடத்துக் கிடக்கிறது.

வாசித்த பின் கிழித்தெறிய வேண்டியது
அது..

எனினும் மீண்டும் ஒரு முறை
படிக்கும் பேரவாவால்

நீள்வதும் மீண்டும் மடிவதுமாய்க் கை...

முதலாவது வாசிப்பின் பின்
நாவில் எதுவுமின்றியே தித்திக்கும்
உணர்வுகளும்
இறக்கைகளின்றியே பறக்கும்
எண்ணங்களும்
இன்னும் வார்த்தைகளுக்கு
அப்பாற்பட்டதாய்
நினைவும்.. ..

வாசித்தபின் கிழித்தெறிய வேண்டிய
அது.

நீள்வதும் மீண்டும் மடிவதுமாய்க் கை. .

அப்படி எதைத்தான் எழுதிவிட்டாய் நீ ?

என் மீதுள்ள காதலை
வெறும் வார்த்தைகளுக்குள்
அடைக்க முனைந்த உனது
முயற்சியைத் தவிர
வேறு எதுவுமில்லை அது.. ..

எனினும் மீண்டும் வாசிக்கும்
பேரவாவால்

என் மேசையின் முன்னே கிடக்கிறது
அக்கடிதம்.

பெண்ணே... முதல் முறை வாசித்த
உணர்வுகள் அழிந்த பின்னே
மறுமுறை வாசிக்கும் பெருவிருப்புக்
கொண்டே

முன் கிடக்கிறது கடிதம்.

என் மானுட வாழ்வின் கடைசி
நிமிடத்தின் போதும்
முதல் முறை வாசித்த உணர்வுகளை
மீட்டும்
மனம். . . எண்ணம் . . எல்லாமுமே

மீண்டும். .மீண்டும் முதல் முறை
வாசித்த
உணர்வுகளையே மீட்டும்

மீள் வாசிப்பென்பது
உன் கடிதத்திற்கும்
என் காதலுக்கும்
எப்போதுமேயில்லை.

என் முன்னே கிடக்கிறது
நான்காய் மடித்த
உன் கடிதம்.. .. ..

இரண்டாவது வாசிப்பிற்காய்

## ஊழிக்கால அவதாரங்கள்

அகன்ற வெளியில்
சூரியனை இழந்தவர்களின்
விடியலுக்கான பொழுதுகள்
நீளுகின்றன

ஜாதக கதை போல்
நிலவையும் விழுங்கி
உமிழ்கிறது சர்ப்பம்

ஒளியிலா
அப். பொழுதுகளில்
யோனிக்குழி புதைகின்ற
குறிகள்
ஊழிக்கால் அவதாரங்களாக
சிலமணி நேரம்
சூரியனையும் நிலவையும்
ஒத்திகைக்கின்றன.

மிகச் சுலபமாயிற்று
தூரத்தில்
ஆயிரம் எரிகற்கள்
விடிவெள்ளி
அதுபோன்றதொரு நிலவு
கிரணங்கள் தெறிக்கும்
கோடிச் சூரியன்கள்

# இருமரபுந்துய்ய எதிர்வீரசிங்க நல்லூபால வன்னிபத்தின் உயில்:

பாகம் 01



திருகோணமலையின் கொட்டியாரப்பற்றில் அடங்கியிருக்கும் இயற்கை வனப்பு நிறைந்த ஒரு ஊர் மேன்காமம். அங்கு சுமார் 120 வருடங்களுக்கு முன்னர் எழுதப்பட்ட ஒரு உறுதி அண்மையில் எமக்குக் கிடைக்கப்பெற்றது. 05.06.1893 ஆந் திகதியிடப்பட்ட அவ்வுயில் கொட்டியாரப்பற்று மேன்காமத்தில் வசித்த இருமரபுந்துய்ய எதிர்வீரசிங்க நல்ல பூபால வன்னிபத்தினால் தம்பலகாமம் ஆதிகோணநாயகர் கோயில் தொழும்புகள் பற்றி ஒரு நியமன உறுதி முடித்துக் கொடுக்கப்பட்டதைச் சொல்கிறது. திருகோணமலைப் பிராந்திய தமிழர்களின் வரலாற்றாதாரங்களில் இது ஒரு முக்கிய ஆவணமாகும். மேற்குறித்த உயிலின் அடிப்படையிலும், கிடைக்கும் ஏனைய சான்றாதாரங்களின் துணைகொண்டும் வன்னிபங்களின் காலத்து திருகோணமலைப் பிரதேசத்தின் வழமைகளை ஆராயமுயல்கிறது இக்கட்டுரை.

இந்த ஆவணத்தின் முக்கியத்துவத்தினை அறிந்துகொள்வதற்கு கீழ்வரும் தலைப்புகளிலான சுருக்கமான தேடல்கள் உதவிபுரியும் அதேவேளை அவை வன்னிபச் சிற்றரசுளின் காலத்தில் இருந்த சமூக நிலைகளை விளங்கிக் கொள்வதற்கு துணை புரிவதாகவும் இருக்குமெனலாம். இந்த அடிப்படையில்

01. வரலாற்றுக்கால தமிழ்ச் சிற்றரசுகள்
02. வன்னி அரசர் அல்லது வன்னிபம்
03. திருகோணமலை வன்னிபங்களும் அதன் தேசவழமைகளும்
04. கொட்டியாரப்பற்று வன்னிமை
05. இருமரபுந்துய்ய எதிர்வீரசிங்க நல்ல பூபால வன்னிபத்தின் உயில்.

என்பனவற்றினை தனித்தனியே ஆராய்தல் பொருத்தமானதாக இருக்கும்.

வன்னியரசுகளின் வருகைக்கு முன்பாக ஈழத்தில் பல தமிழ் குறுநில அரசுகளின் சுயாட்சி நிலவிவந்தன என்பதற்கு இலங்கையின் வரலாற்று உதயகாலத்திற்குரிய 'பிராமிச் சாசனங்கள்' ஆதாரமாக இருக்கின்றன. அவ்வாறு நிலவிவந்த தமிழ் குறுநில அரசுகள் இலங்கையின் பல பாகங்களிலும் நீண்டகாலம் நிலைபெற்றிருந்தது இச்சரித்திரச் சான்றாதாரங்கள் உறுதியளிக்கின்றன.

ஈழத்துப் பிராமிக் கல்வெட்டுக்களில் வேள் (வேள), ஆய் (அய), உதி, சிவ, அபய கமனி ஆகிய தமிழச் சிற்றரசர்களைக் குறிக்கும் பெயர்கள் காணப்படுகின்றன. வேள், ஆய் என்ற தமிழ் சிற்றரசர்களைக் குறிக்கும் பல கல்வெட்டுக்கள் அனுராதபுரம், களனி, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, பூநகரி, பெரியபுளியங்குளம் ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டன. இவை கி.மு 3 ஆம் நூற்றாண்டுக்கு உரியவையாகும். இவற்றில் திருகோணமலை மாவட்டத்தின் சேருவில, சோம ஆகிய இடங்கள் சிவ , அபய என்னும் சிற்றரசர்களாலும், குச்சவெளி நாச்சியார் மலை உள்ளடங்கிய பிரதேசம் உதி என்கின்ற சிற்றரசனாலும் நிர்வகிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

இவற்றுடன் பல பிராமியச் சாசனங்களில் காணப்படும் பெருமக, பருமக என்னும் வடிவங்கள் தலைவன், தலைமகன், முதல்வன் எனப்பொருள்பட அமைந்தமை என்பதனையும் கருத்தில் கொள்ளவேண்டும். எனவே இலங்கையில் நாகதீபம் அல்லது மணிபல்லவம் என்று வரலாற்றுக் காலத்தில் அழைக்கப்பட்ட வடபகுதி முதல் தமிழ்ச் சத்திரியக் கல்வெட்டுக்கள் மூலம் அடையாளங்காணப்படும் கதிர்காமம், சந்தனகாமம் ஆகிய இடங்களுள்ள தென்பகுதிவரை தமிழ்ச் சிற்றரசுகளின் சுயாட்சிப் பிரதேசங்கள் பல காணப்பட்டதை 'பிராமிச் சாசனங்கள்' ஆதாரப்படுத்துகின்றன எனலாம்.

பிராமிச் சாசனங்களுக்கு அடுத்ததாக தமிழ்ச் சிற்றரசுகள் தொடர்பிலான தகவல்களைத் தரும் முக்கிய மூலமாக இருக்கிறது மகாவம்சம். இது இலங்கையின் வரலாற்றுத் தகவல்களை காலவரிசைப்படி, சிங்கள பௌத்த மதத்தினை முன்னிலைப்படுத்தி, பௌத்த பிக்குகளினால் பாளி மொழியில் எழுதப்பட்ட நூலாகும். மகாவம்ச காவியத்தலைவனான துட்டகாமினி அபயன் இலங்கையை ஒன்றிணைத்து தான் ஆளவேண்டும் என்ற எண்ணத்தோடு படையெடுத்து வந்தபோது 32 தமிழ் குறுநில மன்னர்களுக்கு எதிராக அவன் நடத்திய போர்களை அது விபரமாகச் சொல்கிறது.

துட்டகாமினி கிழக்கிலங்கை மஹியங்கனை முதல் வடக்கில் மகாவலி ஆற்றோரம் வரை நிகழ்த்திய போர்கள் பற்றிய விபரிப்புகள் சிங்கள பௌத்த காவியமான மகாவம்சத்தில் காணப்படுகிறது. இங்கு குறிப்பிடப்படும் பல தமிழ் குறுநில அரசர்கள் பண்டைய நாட்கள் தொட்டு சுயாட்சி அதிகாரம் பெற்றவர்களாக ஆட்சி செய்திருக்கிறார்கள் என்ற செய்தி உறுதிப்படுத்தப்படுகிறது. எனினும் இன்றைய வரலாற்று ஆய்வுகளில் துட்டகாமினி தமிழ் அரசர்களை வென்றான் என்பது மட்டும் பெரிதுபடுத்தப்பட்டு அவ்வரசர்களின் சுயாட்சி அலகுகள் பற்றிய செய்திகள் மழுங்கடிக்கப்பட்டு விட்டது.

மகாவம்சத்தின் 25 ஆவது அதிகாரம் துட்டகாமினி பெற்ற வெற்றிகளைக் கீழகண்டவாறு விபரிக்கிறது. இந்த விபரிப்பில் வெற்றி கொள்ளப்பட்ட பிரதேசத்தின் பெயர், தமிழச் சிற்றரசனின் பெயர், அவர்களை வெற்றிகொண்ட விதம் என்பன சொல்லப்படுகிறது.

அவ்வாறான சில சுயாட்சி அலகுகளும் அதன் சிற்றரசர்களது பெயர் விபரங்களும் கீழே...

மஹியங்கணை - சாத்தன்
அம்பதீர்த்தம்(விந்தனைக்கருகிலுள்ளது) தித்தம்பன்
கேமாராமம் - ஏழு தமிழச் சிற்றரசர்கள்
அந்தரா சோபா - மகா கொத்தன்
தோணகாவரம் – கவறன்
ஹாலகோலம் – ஈஸ்வரன்
நாழிசோப்பம் – நாளிகன்
தீகாபய கல்லகம் – தீகாபயன்
கச்ச தித்தம் - கபிசன்
கோட்டநகர் – கோட்டன்
ஹாலவஹா – நகன்
வஹிட்ட - வஹிட்டன்
காமணி - காமணி

வைத்திய கலாநிதி த.ஜீவராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கண்களுடன் பேசும் நடிகர்

உயரமான அருந்ததி நடிகை சக நடிகர்களுடன் பழகும்போது மிகவும் ஜாக்கிரதையாக பழகுகின்றாராம். சமீபத்தில் தெலுங்கு திரைப்படம் ஒன்றில் கலந்து கொண்ட அருந்ததி நடிகை இதுபோலவே கண்ணாடி அணிந்து தனது அருகில் உட்கார்ந்திருந்த ஒரு நடிகரின் பார்வை சில இடங்களில் மேய்வதை கண்டுபிடித்த நடிகை உடனே கண்ணாடியை கழட்டிவிட்டு பேசுங்கள் அல்லது எழுந்து செல்லுங்கள் என்று கறாராக பலர் முன்னிலையில் கூறி அவமானப்படுத்திவிட்டாராம். முன்னணி நடிகரான அந்த தெலுங்கு நடிகர் தனது நண்பர்களிடம் மிகவும் வருத்தப்பட்டதாக கூறப்படுகிறது.

## யாழ் பெண் ரூபா



யாராவது இப்ப என்னைப் பார்த்தாங்க, யாழ்ப்பாணத்துல இருந்து வந்த பொண்ணு இங்க என்ன பண்ணுதுன்னு கேட்பாங்க. அந்த அளவுக்கு அந்த மக்களோட மொழி, வலி எல்லாம் உணர்ந்தவளாக என்னை மாற்றிவிட்டார் "சிவப்பு' படத்தின் இயக்குநர் சத்யசிவா. இந்த ஷார்ட் பீரியட்ல எனக்கு இவ்ளோ பெரிய வாய்ப்பு வரும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. இந்தப் படத்தில் நடிக்க எந்த நடிகையை அழைத்திருந்தாலும் கண்டிப்பாக நடிக்க மறுத்திருக்க மாட்டார்கள். அவ்வளவு சிறந்த படம்

## சென்சரில் தப்புமா?



ராம் கோபால் வர்மா இயக்கத்தில் நவ்தீப், தேஜஸ்வி நடித்துள்ள தெலுங்குப் படம் 'ஐஸ் க்ரீம்'. இந்தப் படம் விரைவில் வெளியாக உள்ளது. இந்தப் படத்திற்காக ஒரு காட்சியில் படத்தின் நாயகியான தேஜஸ்வி நிர்வாணமாக நடித்துள்ளார் என செய்திகள் வெளியாகியுள்ளன.

அந்த நிர்வாணக் காட்சியை ஒருவரைக் கூட உள்ளே விடாமல் படமாக்கியிருக்கிறார்கள். நான்கு சுவர்களுக்குள்தான் அந்தக் காட்சி படமாக்கப்பட்டுள்ளது. நான்கு சுவர்களிலும் ரிமோட் கன்ட்ரோலில் இயங்கும் காமிராவை மாட்டியிருக்கிறார்கள். பின்னர் அந்த அறையை விட்டு அனைவரும் வெளியேறி விட்டார்களாம்.

அந்தக் காட்சி படத்தில் இடம் பெறும் முக்கியமான காட்சி. அதனால்தான் அவரும் நடிக்க சம்மதித்தார் என்கிறார்கள்.

## விஜய்க்கு அஜித் அட்வைஸ்



தமிழ் சினிமாவின் தனக்கென்று சில வழிமுறைகளை வைத்துக்கொண்டு வாழ்பவர் அஜித். இவர் யாருக்கும் தேடி போய் அட்வைஸ் செய்யமாட்டார். அஜித்தை வைத்து கீரிடம் என்ற படத்தை கொடுத்தவர் இயக்குனர் ஏ.எல்.விஜய், இவர் நடிகை அமலா பாலை சில தினங்களுக்கு முன் திருமணம் செய்து கொண்டார். அன்றைய தினம் அஜித்தினால் கலந்துக்கொள்ள முடியவில்லை, தற்போது அவர்களை சந்தித்து 'வாழ்க்கையில் மிக முக்கியம் தியாகமும், விட்டுகொடுத்தலும் தான், ஒருவருக்கொருவர் விட்டுகொடுத்து வாழ்ந்தால் என்றும் சந்தோஷம் தான்' என்று தெரிவித்துள்ளார்.

## ஐ – பொக்ஸிங் – பூலோகம்

ஐ படம் ஆகஸ்ட்டில் வெளிவருகிறதாம். மேலும், திருமணம் எனும் நிக்கா, பூலோகம் படங்கள் அடுத்த மாதம் திரைக்கு வரத் தயாராகி விட்டன. இதில் ஜெயம் ரவி நடித்துள்ள பூலோகம் படத்தில் ஜெயம்ரவி வடசென்னை பாக்சராக நடித்திருப்பது போன்று, ஐ படத்தில் விக்ரமும் பாக்சராகத்தான் நடித்துள்ளாராம்.

ஆனால் பூலோகம் படத்தில் பாக்சிங் சண்டையை மையப்படுத்தியே கதை செல்ல, . ஐ படத்திலோ மருத்துவ துறையில் நடைபெறும் ஊழல்களை படமாக்கியிருக்கிறாராம் ஷங்கர். இந்த விதத்தில்தான் இரண்டு படமும் வேறுபடுகிறதாம். அதோடு, ஜெயம்ரவி நடிக்கும் பூலோகம், 25 கோடியில் தயாராகியிருக்கிறது. ஆனால் விக்ரமின் ஐ படமோ 100 கோடியை எகிறி விட்டதாம்.



## அசின் மோதல் தீபிகா



அசினுக்கு கோலிவுட்டிலும் வாய்ப்பு கிடைப்பதில்லை. தற்போது மீண்டும் பாலிவுட்டில் கலக்க ஒரு வாய்ப்புள்ளது, அக்ஷய்குமார் நடித்த ஹவுஸ்புல் படத்தின் முதல்பாகத்தில் தீபிகா படுகோன் நடித்தார். இதன் 2ம்பாகத்தில் அசின் நடித்தார். தற்போது இப்படத்தின் 3ம் பாகம் உருவாகிறது. இப்படத்தில் இரட்டை ஹீரோக்கள் நடிக்க உள்ளனர். 3ம் பாகத்தில் இடம்பிடிக்க தீபிகாவும், அசினும் கடும்போட்டியில் ஈடுபட்டுள்ளதாக நெருங்கியவட்டாரங்கள்.தெரிவிக்கின்றது.

# சினிமுரசு

## சினிமா குறுஞ் செய்திகள்



- **மனங்கவர்ந்த ஹீரோ யார்?**

சமீபத்தில் சென்னை டைம்ஸ் என்ற பத்திரிகை ரசிகர்கள் அதிகமாக விரும்பும் தமிழ் ஹீரோ யார் என்ற கருத்துக்கணிப்பில் அஜீத், விஜய், சூர்யா போன்ற முன்னணி நடிகர்களை முந்தியுள்ளார் ஆர்யா என்பது குறிப்பிடத்தக்கது.

- **என் குடும்பத்தை பழிவாங்கியே ஆக வேண்டும்! ஷகிலா சபதம்!**

மீண்டும் பிறக்க முடிந்தால் நான் மறுபடியும் ஷகீலாவாகவே எனது குடும்பத்திலேயே பிறக்க விரும்புகிறேன், ஏனெனில் என் குடும்பத்தாரால் நான் பல பிரச்சனைகளை சந்தித்துள்ளேன், அவர்கள் எனக்கு செய்த கொடுமைக்கு அவர்களை பழிவாங்க போகிறேன் என்று கூறியுள்ளார்.

- **முடிந்தால் என்னை தடுத்து பார்க்கட்டும். அஞ்சலி அதிரடி....**

ஜெயம் ரவி படத்தில் நான் நடிப்பதை யாராலும் தடுக்க முடியாது. என்னை தடுக்கவோ எனக்கு தடை விதிக்கவோ யாருக்கும் உரிமை இல்லை என்று அஞ்சலி தைரியமான அறிக்கை விட்டுள்ளார்.

- **இந்தியாவின் மிக கவர்ச்சிகரமான பெண் யார்?**

முன்னணி பத்திரிக்கை ஒன்று இந்தியாவின் கவர்ச்சிகரமான பெண்கள் என்று ஒரு லிஸ்டை வெளியிட்டுள்ளது. இதில் முன்னணியிலிருப்பவர் தீபிகா படுகோன்.

- **கமலால் மயங்கிய பார்வதி**

உத்தமவில்லன் படத்தின் ஷூட்டிங்கின் போது கமலுடன் ஒரு காட்சியில் நடித்த போது பயந்து மயங்கி விழுந்தார் பார்வதி நாயர்.

- **அஜீத், விஜய் இருவரையும் இணைத்து படம் எடுக்க தயார் ஏ.ஆர்.முருகதாஸ்.**

எம்.ஜி.ஆர் மற்றும் சிவாஜி ஆகிய இரு மாபெரும் நடிகர்கள் இணைந்து நடித்த ஒரே திரைப்படம் "கூண்டுக்கிளி" போல விஜய், அஜீத் இருவரும் இணைத்து நடிக்க சம்மதித்தால் அவர்களை வைத்து படம் எடுக்க தயார் என்று டைரக்டர் ஏ.ஆர்.முருகதாஸ் அதிரடியாக அறிவித்துள்ளார்.

- **மலையாள நடிகருடன் டேட்டிங், ப்ரியாமணி**


நடிகர் கோவிந்த் பத்மசூர்யா தனது நீண்ட நாள் நண்பர் என்றும், அவருக்கு தனக்கும் நட்பை தவிர வேறு எந்த தவறன உறவும் இல்லை என்கிறார் ப்ரியாமணி.

## கவர்ச்சிப்புயல் நமீதா



கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு கவர்ச்சியில் கொடிகட்டி பறந்த நடிகை நமீதா தற்போது எந்தப் படத்திலும் நடிக்க வாய்ப்புகள் இன்றி இருக்கின்றாராம். ஆனால் நடிகையாக இருந்தபோது சம்பாதித்தைவிட தற்போது இருமடங்கு சம்பாதித்து வருவதாக கூறப்படுகிறது. ரியல் எஸ்டேட் நிறுவனங்கள் திறப்புவிழா, மற்றும் விளம்பரப்படம் என்றால் உடனே அனைவருக்கும் ஞாபகம் வருவது நமீதாதான் என்கின்றனர்.

### திரை விமர்சனம் அதிதி



நந்தா, அனன்யா தம்பதிகள் ஒரு பெண் குழந்தையுடன் சந்தோஷமாக வாழ்ந்து வருகின்றனர். ஒருநாள் குழந்தையை மட்டும் வீட்டில் விட்டுவிட்டு, இருவரும் காரில் செல்கின்றனர். வழியில் லிப்ட் கேட்டு ஏறிக்கொள்கிறார் நிகேஷ்ராம். ஒரு கட்டத்தில் காரை தான் சொல்லும் இடத்திற்கு செலுத்தாவிட்டால், நந்தாவின் வீட்டில் இருக்கும் தனது ஆட்கள் நந்தாவின் குழந்தையை கொன்றுவிடுவார்கள் என மிரட்டுகிறார்.

வங்கியில் நந்தாவின் பெயரில் இருக்கும் அனைத்து பணத்தையும் எடுத்து அந்த பணத்தை எரித்து ஆற்றில் வீசிவிடுகிறார். நிகேஷ்ராம் தங்களை எதற்காக கடத்தியிருக்கிறார் என்பது புரியாமலே குழம்புகின்றனர் நந்தாவும் அனன்யாவும். அனன்யாவையும் குழந்தையையும் பகடைக்காயாக வைத்து சிறுசிறு வேலைகளை செய்யச்சொல்லி நந்தாவை மிரட்டுகிறார் நிகேஷ்ராம்.

ஒரு கட்டத்தில் நந்தாவுடன் பணிபுரியும் அஸ்வதி வர்ஷாவை கொலை செய்துவிட்டால் அனன்யாவையும், குழந்தையையும் விட்டுவிடுவதாகவும், இல்லாவிட்டால் இருவரையும் கொலை செய்துவிடுவதாகவும் நிகேஷ்ராம் மிரட்ட, மனைவி மற்றும் குழந்தைக்காக அஸ்வதிவர்ஷாவை நந்தா கொலை செய்கிறாரா?

நிகேஷ்ராமின் பின்னணி என்ன? என்பதுதான் மீதிக்கதை.

படம் முழுவதும் வில்லத்தனம் செய்திருக்கும் நிகேஷ்ராம், இதெல்லாம் எதற்காக செய்கிறார் என்பது தெரியவரும்போது திடீரென ஹீரோவாகிவிடுகிறார். முதல்படம் போலவே தெரியவில்லை. அருமையான நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார் நிகேஷ்ராம்.



மனைவியையும் குழந்தையையும் கடத்திய வில்லனிடம் இருந்து எப்படி விடுபடுவது என்ற கேரக்டர் நந்தாவுக்கு. நன்றாகவே செய்துள்ளார். அனன்யாவின் வழக்கமான குறும்பு மிஸ் ஆனாலும், அன்பான மனைவியாகவும், பொறுப்பான தாயாகவும் முத்திரை பதித்திருக்கிறார். சில நிமிடங்களே வந்தாலும் தம்பி ராமையா நல்ல கலகலப்பூட்டுகிறார். கதையின் முக்கிய திருப்புமுனையாக வரும் அஸ்வதி வர்ஷாவின் நடிப்பும் ஓகே ரகம். நல்ல விறுவிறுப்பான திரைக்கதை.

நிகேஷ்ராம் எதற்காக நந்தாவையும் அனன்யாவையும் கடத்தியிருக்கிறார் என்பது ஊகிக்க முடியாத சஸ்பென்ஸ் என்று படம் முழுவதும் தனது திறமையை வெளிக்காட்டியுள்ளார் இயக்குனர் பரதன். பாடல்கள், இசை பரத்வாஜ். ஓகே ரகம்.

நல்ல அழுத்தமான திரைக்கதை மற்றும் சஸ்பென்ஸ் உள்ள படம் என்பதால் போரடிக்காமல் விறுவிறுப்பாக செல்கிறது அதிதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உளவைத் தடுக்கும் Stik




இணைய உலாவலின்போது ஒரு நாட்டின் அரசாங்கம் உட்பட தனிப்பட்ட நபர்களின் கண்காணிப்பு இருக்கும்போது அதிலிருந்து தப்புவதற்கு உதவும் சாதனம் ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. iCloak Stik எனும் இந்த USB சாதனம் விசேடமாக இணைய உலாவலுக்காக மட்டுமே உருவாக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் வரையறுக்கப்பட்ட இணைய பாவனையை பெற்றுக்கொள்வதுடன் ஏனையவர்கள் வேவு பார்ப்பதையும் நிறுத்தக்கூடியதாக இருக்கின்றது. இதனை Windows, Linux மற்றும் Apple Mac இயங்குதளங்களைக் கொண்ட கணனிகளில் பயன்படுத்த முடியும்.

## விளம்பரத்தில் ஃபேஸ்புக்




சமூகவலைத்தளங்களின் வரிசையில் அசைக்க முடியாத அரசனாக தொடர்ந்தும் முன்னணியில் திகழும் பேஸ்புக் நிறுவனம் பல்வேறு நிறுவனங்களை இலக்ககாக் கொண்டு வீடியோ விளம்பர சேவையை அறிமுகம் செய்யவுள்ளது. இதன் மூலம் பேஸ்புக் தளத்தில் பதிவேற்றப்படும் வீடியோக்களில் அதனுடன் மிகவும் ஒத்துப்போகக்கூடிய விளம்பரங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளது.

இதற்கான தொழில்நுட்பத்தினை வாங்குவதற்காக 400 மில்லியன் டொலர்கள் தொடக்கம் 500 மில்லியன் டொலர்கள் வரையான பணத்தினை முதலீடு செய்ய தீர்மானித்துள்ளது.

இதேவேளை தற்போது யூடியூப் தளமும் இவ்வாறான விளம்பர சேவையை நடத்திவருகின்றமை தெரிந்ததே.

# விளையாட்டுப் பையன்

## தமது தகவல்களை சேர்க்க தடை



பிரஜைகள் உட்பட தமது நாடு தொடர்பான தகவல்களை சொந்த நாட்டிற்கு வெளியே உள்ள சர்வர்களில் வைத்திருக்கும் இணையத்தளங்களை முடக்குவதற்கு ரஷ்யா அரசு தீர்மானித்துள்ளது.

பாதுகாப்பு காரணங்கள் குறித்து இதே முடிவை முன்னர் சீனா எடுத்திருந்தது, அதே பாணியில் தற்போது ரஷ்யாவும் இறங்கியுள்ளது.

இதன்படி பேஸ்புக், கூகுள், டுவிட்டர், Pinterest போன்ற தளங்கள் உட்பட மேலும் பல தளங்களில் காணப்படும் ரஷ்யா தொடர்பான தகவல்கள் தமது நாட்டிலுள்ள சர்வர்களிலேயே சேமிக்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கின்றது. இதனை மீறி வெளி நாடுகளிலுள்ள சர்வர்களில் தமது நாடு, பிரஜைகள் தொடர்பான தகவல்களை வைத்திருக்கும் இணையத்தளங்களை முடக்குவதற்கு எதிர்பார்த்துள்ளது.

## சமாளிக்க முடியாமல் - ஆர்குட்

கடந்த 2004 ஆம் ஆண்டு பேஸ்புக் மற்றும் ஆர்குட் ஆகிய இரண்டு சமூக இணையதளங்களும் அடுத்தடுத்த சில மாதங்கள் இடைவெளியில் தொடங்கப்பட்டது. ஆனால் உலக அளவில் இன்று முதலிடத்தை ஃபேஸ்புக் பிடித்திருக்கும் நிலையில் போட்டிகளை சமாளிக்க முடியாமல் பார்வையாளர்களின் ஆதரவை இழந்த ஆர்குட் எதிர்வரும் செப்டம்பர் மாதம் முதல் தனது சேவையை நிறுத்த போவதாக கூகுள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

## புதிய டேப்லட் - HTC



இதுவரை அறிமுகப்படுத்தப்பட்ட டேப்லட்களில் அதிகபட்ச பிரதான நினைவகமாக 2GB RAM பயன்படுத்தப்பட்டு வந்தது. ஆனால் முதன் முறையாக 5GB RAM ஐ பிரதான நினைவமாகக் கொண்ட டேப்லட்டினை HTC நிறுவனம் அறிமுகம் செய்யவுள்ளது.

HTC Volantis எனப்படும் இப்புதிய டேப்லட்டில் 8.9 அங்குல அளவுடைய தொடுதிரை, Snapdragon 810 Processor, 64GB சேமிப்பு நினைவகம் என்பவற்றுடன் 5 மெகாபிக்சல்களை உடைய கமெராவும் தரப்பட்டுள்ளது.

## புன்னகை - விலை



துபாயில் உள்ள Liberty Dental Clinic என்ற மருத்துவமனையின் உரிமையாளரான Dr Majd Naji என்ற பல்மருத்துவர் உலகிலேயே விலையுயர்ந்த பல்செட் ஒன்றை தயாரித்துள்ளார். 24 காரட் சுத்தமான தங்கம் மற்றும் 160 மின்னும் வைரங்கள் கொண்டு தயாரிக்கப்பட்ட இந்த பல்செட்டின் மதிப்பு $152,700. தங்கம் மற்றும் வைரங்கள் உடைய இந்த பல்செட்டை வாங்குவதற்கு துபாயில் உள்ள செல்வந்தர்கள் போட்டி போடுவதாக கூறும் Dr Majd Naji இந்த விலையுயர்ந்த பல்செட்டினால் கிடைக்கும் தொகையை வைத்து children's charity Dubai Autism Centre என்ற டிரஸ்ட் ஆரம்பிக்கவுள்ளதாக தெரிவித்தார். இன்னும் சில நாட்களில் இந்த பல்செட் ஏலத்திற்கு வரவுள்ளது.

## ஸ்மார்ட் போன் - கூகுள்

குறைந்த விலையிலான ஸ்மார்ட் ஃபோன்களை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக கூகுள் நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்தியா போன்ற வளரும் நாட்டு சந்தைகளை குறி வைக்கும் வகையில் கூகுளின் ஸ்மார்ட் ஃபோன்கள் இருக்கும். ஆண்டிராய்டு இயங்கு தளம் கொண்ட இந்த ஃபோன்கள் இந்தாண்டு இறுதியில் இந்தியாவில் முதலில் அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

# ஒரு கொலையின் கதை

2-19

மாயன்

**ஒரு உண்மைச் சம்பவத்தைத் தழுவிய கதை...... கதையொன்றில் புனைவுகள் இருப்பதைப் போல இக் கதையிலும் புனைவுகள் உள்ளன.**

அன்று தனக்கு வேலையிருப்பதாகச் சொன்ன அவன் மறுநாளே அந்தப் பையை எடுத்து வருவதாகக் கூறினான்" .......

............................................ (18)

"அடுத்த நாள் வந்தானா?...."

"இல்லை.... அவனுக்குக் காய்ச்சல் என்பதால் அந்தவாரம் முழுவதும் அவனைச் சந்திக்க முடியவில்லை"

"அடுத்தவாரம் அவன் கடைக்கு வந்தான்.... கையில் ஒரு பை வைத்திருந்தான்.... தனக்கு காய்ச்சல் இன்னும் சுகமாகவில்லை என்பதால் அன்று வேலைக்குப் போகவில்லை எனச் சொன்னான்..."

" நாங்கள் இருவரும் அந்தப் பையைத் திறந்தோம்.... அதற்குள் ஒரு புகைப்படக் கதம்பமும் (அல்பம்) சில குறுந்தட்டுக்களும்... சில வாழ்த்து மடல்களும் இருந்தன..."

அந்தப் புகைப்படக் கதம்பத்தைத் திறந்து இருவரும் பாத்தோம்.... அக்கதம்பம் ஒரு திருமண விழாக் கதம்பமாக இருந்தது.....

அழகான மணமக்களின் பல்வேறுவகையான அழகுப் பரிமாணங்களுடன் கூடிய கதம்பம் அது..... அந்தக் கதம்பத்தில் தனது இருபது வயதுகளை அனுபவித்துக் கொண்டிருந்த இளைஞனின் முகம் எனக்கு ஞாபகம் வந்தது..... ஆம்... அந்த இளைஞனின் படம்தான் நான் வாசித்த கிழிந்த துண்டுப் பத்திரிகையிலும் இருந்தது.. அது கொலையுண்ட அந்த இளைஞனின் படம் தான்.... அவனது திருமணக் படக்கதம்பம்தான் அங்கிருந்தது........"

அதற்கும் மேல் எதுவும் சொல்ல விருப்பமின்றி மது அமைதியானான்..

புலனாய்வாளர்களுக்குப் புரிந்தது... இதற்கும் மேல் அவனிடம் எதுவும் இல்லை என்று.....

"சரி.... இப்போது பிலிந்தவை இங்கு அழைக்க முடியுமா?" புலனாய்வாளரின் கேள்விக்கு மதுவிடம் இருந்து சிறிய தலையாட்டல் மட்டுமே பதிலாகக் கிடைத்தது. அத் தலையாட்டல் ஆம் என்ற பதிலா அல்லது இல்லை என்ற பதிலா என்பதைப் புரிந்து கொள்ள அவர்கள் சிரமப்படவில்லை... மது தனது கைத் தொலைபேசியின் பொத்தான்களுக்கு வேலை கொடுக்க ஆரம்பித்திருந்தான்.... அழைப்பில் பிலிந்த வந்த போது எவ்வித அவசரமுமின்றி மிகச் சாதாரணமாக அவனை வருமாறு மது அழைத்தான்.... மறு புறமிருந்து அரை மணி நேரத்திற்குள் வருவதாக வந்த பதிலை கைத்தொலைபேசியின் வாயைப் பொத்தியபடி புலனாய்வாளர்களுக்குத் தெரிவித்தான் மது...

"சரி வரட்டும்....."

அந்தத் தகவல் மிலிந்தவுக்குத் தெரிவிக்கப்பட்டது.....

அதன் பின்னர் அந்த அறை அமைதியாலும் வெண்சுருட்டுப் புகையாலும் நிரம்பி வழிந்தது...

படிகளில் ஒலி எழும்பிய போது... அவர்கள் ஆளுக்கு இரண்டு வெண்சுருட்டுக்களையும் பெறுமதியற்ற வார்த்தைகளையும் காலி செய்திருந்தனர்.... உள்ளே வந்த மிலிந்த அங்கிருந்த இரு புதியவர்களையும் ஆச்சரியத்துடன் நோக்கினான்...

மதுவுக்கு அந்நேரம் தர்மசங்கடமாக இருந்தது... யார் ஆரம்பிப்பது.... அந்த நிலை நீண்ட நேரம் நீடிக்கவில்லை...

"வாங்கோ.... மிலிந்த... நாங்கள் புலனாய்வாளர்கள்... எங்களது கட்டளையின் பேரில்தான் மது உங்களை வருமாறு அழைத்தார்....." என ஒரு புலனாய்வாளர் அந்நேர மௌனத்தைக் கலைத்தார். அவர் உதிர்த்த வார்த்தைகளில் கட்டளை என்ற சொல்லுக்கோர் அதீத அழுத்தத்தை அவர் கொடுத்திருந்தார். அந்த அழுத்தம் மிலிந்தவிற்கு எதையோ உணர்த்தியது.....

"மிலிந்த நாங்கள் திருகோணமலையில் நடைபெற்ற கொலையொன்று தொடர்பான விசாரணைகளுக்காக உங்களுடைய நண்பரைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்திருக்கின்றோம். அக்கொலை தொடர்பாக உங்களுக்குத் தெரிந்தவற்றை ஒளிவு மறைவின்றிச் சொல்வீர்கள் என எதிர்பார்க்கின்றோம். ஏனெனில் அவர் ஏற்கனவே உங்களுடனுள்ள தொடர்புகள் பற்றித் தெரிவித்திருப்பதால் நீங்கள் உண்மைகளைக் கூறினால் கைது செய்யப்படுவதிலிருந்து தப்பிக் கொள்வீர்கள்... சரிதானே...." புலனாய்வாளர் தனது சிறிய பிரசங்கத்தை நிறைவு செய்தார்.

மிலிந்த பேசத் தொடங்கினான்.....

" நான் மின்னியலாளராகக் கடமையாற்றுகின்றேன்...வீடுகளுக்குச் சென்று மின் பொருத்துக்களை மேற்கொள்வது எனது வேலை.... டொடியும் நானும் பெரும்பாலும் ஒவ்வொரு நாளும் சந்தித்துக் கொள்வோம். ஆனால் கடந்த ஏப்ரல் மாதத்தில் சில நாட்கள் தொடர்ந்து அவரைக் காண முடியவில்லை. அவர் தூர இடமொன்றுக்குச் சென்றிருப்பதாக எனக்கொரு செய்தியை விட்டுச் சென்றிருந்தபடியால் நானும் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை.

சில நாட்களின் பின்னர் அவரை இந்தத் தொடர்பாடல் நிலையத்தில் சந்தித்தேன். அன்று அவர் திருகோணமலைக்குச் சென்று வந்ததாகக் கூறினார்... நான் இரண்டு கேள்விகள் கேட்டேன்... யாருடன்..... ஏன்... என்பவையே அவை.

சுற்றிவளைக்காமல் டொடி நேரடியாகவே பதில் சொன்னார்... நான் அலிக வுடன் சென்றேன்... ஒருவருடைய கழுத்தை வெட்டிவிட்டு வந்தோம்... என்றார் அவர்.

அந்தச் செய்தியை நான் ஏற்கனவே பத்திரிகையில் படித்திருந்தேன்... அதனை இவர்கள்தான் செய்தார்கள் எனச் சொன்னது எனக்கு அதிர்ச்சியாக இருந்தது.... அந்தச் செய்தியைத் தேடிப்பிடித்து கிழித்து வைத்திருந்தேன். மது வைத்தியசாலையில் இருந்து வந்தவுடன் இந்த விடயத்தை அவருக்குத் தெரிவித்தேன்... அவரும் அதிர்ச்சியடைந்தார்... அதனைத் தொடர்ந்து மது டொடியை தமது அறையில் இருந்து வெளியேறுமாறு கடுமையாப் பணித்தார்... அன்றைய தினமே மாலை டொடியும் அந்த அறையை விட்டு வெளியேறினார். அப்போது அவர் எனக்கு ஒரு பையைத் தந்துவிட்டு அதனைப் பத்திரமாகப் பாதுகாக்குமாறு தெரிவித்தார். நான் அப்பையினுள் இருப்பதை ஆர்வமேலீட்டால் எடுத்துப் பார்த்தேன். அவை படக்கதம்பமொன்றும் சில குறுந்தட்டுக்களும் ஆறு அல்லது ஏழு வாழ்த்து மடல்களாகவும் இருந்தன... அவ்வாழ்த்து மடல்கள் ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்ததால் என்னால் அதனை வாசிக்க முடியவில்லை... ஆனால் ஐ லவ் யூ என்ற வார்த்தைகளை அம் மடலில் பெரும்பாலும் காண முடிந்தது...

நான் அந்தப் படக் கதம்பத்தை திறந்தபோது அதிலிருந்து அழகான மணவாளன் மற்றும் மணவாட்டியினது படங்கள் பல பரிமாணங்களில் எடுக்கப்பட்டு பொருத்தப்பட்டிருந்தது.

அப்போது அந்த மணவாளனது முகத்தில் தனது சுட்டு விரலை அழுத்திய டொடி இவனது கழுத்தைத்தான் அலிக அறுத்தார் என எனக்குச் சொன்னார். அதற்குப் பின்னர் எனக்கு லேசான நடுக்கம் ஏற்பட்டது... நான் அந்தப் பையை ஏற்க மறுத்தேன்.. ஆனால் சில நாட்களில் தான் அவற்றைத் திருப்பி வாங்கிக் கொள்வதாக டொடி வற்புறுத்தியதால் அவற்றை......... (தொடரும்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வியல் சுகமும் ஆனந்தமும் 08

மக்களுக்கு என்ன வேண்டும்? அதில் என்ன ஐயம்? மக்களுக்கு வேண்டுவது சுகமே அல்லவா?

நாம் வாழ்க்கைக் கடலில் மூழ்கி அரும்பாடு பட்டு தேடும் சிப்பியே 'சுகம்' தான்!

எமது ஞானேந்திரியங்கள் (மெய், வாய், கண், மூக்கு, செவி) வாயிலாக நாம் உணரவும், சுவைக்கவும், பார்க்கவும், நுகரவும், கேட்கவும் செய்கின்றோம். மனமும் புத்தியும் இவற்றின் தூண்டுதல்களால் பாதிக்கப்பட்டு செயல் வடிவத்தில் இவற்றுடன் தொடர்பு கொள்கின்றன. கர்மேந்திரியங்கள் அதற்கு துணைபுரிகின்றன.

அவற்றின் பலனாக முழுமையான சந்தோசமும் மன நிறைவும் ஏற்படும் போது.... 'ஆஹா.... என்ன சுகம்!' என்று கூறி திருப்தியடைகின்றோம்.

பாசம் மிகு பெற்றோர்கள் சுகம்..... அன்பான மனைவி சுகம்.... பிள்ளைச் செல்வங்கள் சுகம்......! பஞ்சணை சுகம்..... அறுசுவை உண்டி சுகம்..... மாலைக்காட்சி சுகம்..... மலர்களின் வாசனை சுகம்...... இனிய கீதம் சுகம்!

சுகத்தின் மறுபக்கத்தை எடுத்துக்கொண்டால் உலகின் அனைத்து மோதல்களுக்கும் காரணமாயிருப்பதும் சுகத்தை முன்னிட்ட போட்டிகள் தான்! சாம்ராஜ்யங்கள் ஏன் மோதுகின்றன....? தமது எல்லையை விஸ்தரிக்கவேண்டும். போட்டி இராஜ்ஜியங்களை ஒடுக்க வேண்டும். எரிபொருள் இருக்கலாம் என கருதப்படும் தீவுகளை தம் வசப்படுத்த வேண்டும்.

பரதனுக்கு இராஜ்ய சுகத்தை பெற்றுக் கொடுக்க வேண்டுமென்பதற்காக இராமர் பதினான்கு ஆண்டுகள் வனவாசம் அனுப்பப்பட்டார்.


கௌரவர்கள் இராஜ்ய சுகபோகத்தில் கொண்ட மோகத்தால் பஞ்சபாண்டவர்களை பன்னிரு வருடங்கள் வனவாசமும் ஒரு வருட அஞ்ஞாத வாசமும் அனுப்பினர்.

இன்னமும் சொல்லப்போனால் சுகத்தை முன்னிட்ட காட்டிக் கொடுப்புக்களால் உலகில் பல விடுதலைப் போராட்டங்கள் அழிந்து போயின!

உண்மையில் இவையல்ல சுகத்தை அடையும் வழிகள்..... எமது மனம், புத்தியின் தகுதியினால்தான் நாம் இலகுவில் சுகத்தை அடைய முடியும். நாம் இரக்கமுள்ளவர்களாகவும் அன்பு கருணை உள்ளவர்களாகவும் இருந்தால் எம்முடன் பழகுபவர்கள் எமக்கு சுகம் அளிப்பர். சந்தர்ப்ப சூழ்நிலைகள் எமக்கு விரோதமாக இருப்பினும் கூட நம் அகக் கருவிகள் வலிமையாகவும் உறுதியாகவும் இருந்தால் அவை எமது அமைதியையும், நிம்மதியையும், வலிமையையும் பாதிக்க முடியாது!

அடுத்து 'ஆனந்தம்' என்பது யாது என்று பார்ப்போம்..... சுகத்தையும் ஆனந்தத்தையும் ஒன்றாக சேர்த்து தடுமாறக் கூடாது. சுகம் என்பது வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்தது. ஆனந்தம் என்பது மிக மிக உயர்ந்ததொரு நிலை!

ஆனந்தத்துக்காக சாம்ராஜ்யங்கள் மோதுகின்றன என்று கூற முடியாது. எனது மனைவி, பிள்ளைகள் எனக்கு ஆனந்தத்தை அளிப்பவர்கள் என கூற முடியாது. 'சுகம்' என்பது ஞானேந்திரியங்கள் கர்மேந்திரியங்களுடன் தொடர்புபட்டிருப்பது போன்று 'ஆனந்தம்' ஆத்மாவோடும் இறையுணர்வுடனும் சம்பந்தப்பட்டிருக்கிறது.



(வி.என்.சந்திரகாந்தி)

அனைத்துமே ஆனந்த மயம் என்று கூற கேள்விப்பட்டிருப்பீர்கள். அனைத்துமே இறைமயம் என்பதுதான் அதன் பொருள்! ரிஷிகள் மனித உருவமானது 'ஆத்மா' எனப்படும் கடவுள்தன்மை கொண்ட ஜீவ சைதன்யத்தையும் அதைச்சுற்றியுள்ள ஐந்து உறைகளையும் பற்றி குறிப்பிட்டுள்ளார்கள்.

அவை அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமய கோசம் என அமையும்.

ஆனந்தமய கோசமே ஜீவசைதன்யத்துக்கு மிக அருகே உள்ளது. ஆழ்ந்த தூக்கத்தில் நிலை பெற்றிருக்கும் இரண்டற்ற ஆனந்த நிலையே அது. ஏறக்குறைய குறுக்கீடற்ற நிம்மதியையும் பரமானந்தத்தையும் அனுபவிக்கும் ஒரு நிலையே அதுவாகும்!

பல தசாப்தங்கள் முன்னர்.... நான் கிளிநொச்சி நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்திற்கு இடமாற்றத்தில் செல்ல நேர்ந்தது. அங்கிருந்த அலுவலர்கள், தமது காரியாலயத்தில் களஞ்சிய பொறுப்பாளராக பணிபுரிந்த ஒருவர் யாழ் கொழும்புத்துறையில் சுவாமியாராக இருப்பதாக புகழ்ந்தார்கள். பொறியியலாளரும் ஒரு வார 'லீவில்' சென்று விட்டிருந்தபடியால் நான் எனது ஊரான அச்சுவேலி சென்று சுவாமியை சந்திக்கும் அவாவில் மறுநாளே கொழும்புத்துறை சென்றேன். சுவாமிகள் வசித்த குடிசைக்கு நான் சென்றடைந்ததும் சிலர் என்னை எதிர் கொண்டு நீங்கள் அச்சுவேலியிலிருந்தா வருகிறீர்கள் என கேட்டனர். நான் 'ஓம்' என்று கூறியதும்..... நீங்கள் வருவதை சுவாமி முன்கூட்டியே கூறி உங்களுக்கென ஒரு கதிரையையும் தனக்கருகே போட்டுள்ளார்......வாருங்கள் என அழைத்துச் சென்றனர்..... எனக்கு ஆச்சரியமாக இருந்தது!

நான் சுவாமிக்கு அருகே சென்றதும் அவர் கேட்ட கேள்வி என்னை திடுக்கிடவே வைத்தது....

'பொறியியலாளரை சந்திக்காமல் ஏன் என்னை சந்திக்க வந்தனீ....?

நான் உடனேயே அந்த வெண்முடி, வெண்தாடி கொண்ட சுவாமியின் காலில் விழுந்துவிட்டேன். அவர்தான் யோகர் சுவாமிகள்!

எப்படியான ஒரு பேரானந்த நிலையில் அவர் வாழ்ந்திருப்பார் என்று பாருங்கள்! இதுவே சுகத்துக்கும் ஆனந்தத்துக்கும் இடையேயான வித்தியாசம்!

# தேசிய SMS செய்திகள்

- **எண்ணிக்கையில் மாற்றம்**

மொனராகலை உறுப்பினர்களின் எண்ணிக்கையினை அதிகரித்தமைக்கும் பதுளைக்கான உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைவடைந்தமைக்கும் எல்லை நிர்ணய சபை மேற்கொண்ட தீர்மானமே காரணம் தவிர இதில் எந்தவொரு அரசியல் செல்வாக்கும் கிடையாதென அமைச்சரவை பேச்சாளர் தகவல் ஊடகத்துறையமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல நேற்று தெரிவித்தார்.

- **புத்தரின் உருவத்தால் வெளியேற்றப்பட்ட பெண் ஒரு கோடி நஷ்டஈடு**

சட்டவிரோதமாக தன்னைக் கைதுசெய்து, வெளியேற்றி மனித உரிமைகளை மீறியதால் இலங்கை அரசு ஒருகோடி ரூபா நஸ்டஈடு செலுத்த வேண்டும் என முறைப்பாட்டாளர் உயர்நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

- **இலங்கைக்கு வழங்கிய சலுகையை திரும்பப் பெற வேண்டும்.**

நடைபெற இருக்கும் பாராளுமன்ற கூட்டத்தொடரில் கச்சத்தீவைத் திரும்பப்பெறும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இலங்கை அரசோடு பேசி கச்சத்தீவை உடனடியாக மீட்க வேண்டிய பொறுப்பு மத்திய அரசுக்கு இருப்பதை சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன் என்கிறார் அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி தலைவர் ஆர்.சரத்குமார்.

- **முகமாலை பகுதியில் மனித எச்சங்கள் மீட்பு**

விடுதலைப்புலிகளின் இராணுவ சீருடைகளும், தொப்பியும், இலக்க தகடுகளும், 6 கைக்குண்டுகளும், 10 ரவைகூடுகளும் மேலும் பல மீட்கப்பட்டுள்ளன.

- **மரங்களுக்கு கீழான கல்விச்செயற்பாடுகள் முடிவுக்கு வருமா!**

எங்கள் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், கிளிநொச்சியின் கல்வித்துறையில் கடந்த சில ஆண்டுகளாக செலுத்திய அதிக அக்கறை காரணமாக இந்த மாவட்டத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் பெருமளவு பாடசாலைகள் வகுப்பறை கட்டடங்களை பெற்றுள்ளன.

- **முஸ்லிம் வர்த்தக நிலையங்கள் மாத்திரம் ஏன் பதிவு செய்யப்படுகின்றன**

யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் செறிந்து வாழ்கின்ற பிரதேசங்களில் முஸ்லிம் வர்த்தக நிலையங்கள் குறித்த தகவல் திரட்டொன்று தம்மை பொலிஸ் புலனாய்வாளர்கள் என அடையாளப்படுத்திய இரு அதிகாரிகளினால் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

- **முஸ்லீம் ஒருவரின் வர்த்தக நிலையத்தில் தீ**

மினுவாங்கொடை நகர மையத்தில் முஸ்லிம் வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமான கடையொன்று வியாழக்கிழமை பிற்பகல் தீப்பற்றிக் கொண்டதாக மினுவாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

- **முஸ்லீம்களுக்கு எதிராக செயற்படுகின்றாரா?**

பிரதியமைச்சர் சரத் வீரசேகர, பொதுபலசேனா எனும் தீவிரவாத அமைப்பின் முகவராக செயற்படுகின்றார் என தெரிவித்த அம்பாறை மாவட்ட பா.உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தேசிய அமைப்பாளருமான பைசால் காஸிம் இன்று முஸ்லிம்களுக்கு எதிராக செயற்படுகின்றார் எனவும் குற்றம் சுமத்தினார்.

- **கம்பளையில் கஞ்சா விநியோகித்தவர் கைது**

கம்பளைப் பகுதிக்கு கேரளா கஞ்சா விநியோகித்து வந்த ஒருவரை கண்டி பொலிஸார் கைது செய்துள்ளனர். கொழும்பிலிருந்து கண்டிக்கு எடுத்துவரும்போது கண்டி பொலிஸார் மேற்கொண்ட சோதனையின்போது சந்தேக நபரைக் கஞ்சாவுடன் கைது செய்துள்ளனர்.

- **முஸ்லிம்களை பாதுகாக்குமாறு இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை**

நாட்டின் முஸ்லிம்களை பாதுகாக்குமாறு ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் இலங்கை அரசாங்கத்திடம் கோரியுள்ளார்.

- **இந்திய, இலங்கையின் அடிப்படைவாத முரண்பாடுகள் குறித்து அச்சம்**

இலங்கையில் அண்மையில் இடம்பெற்ற மத மற்றும் இன வன்முறைகள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியமானது என இந்திய பாதுகாப்பு அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். நிலைமைகளை உடனடியாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமானது என வலியுறுத்தியுள்ளனர்.

- **வவுனியா சாந்தசோலையில் திருடர்களின் அட்டகாசம்**

வவுனியா, சாந்தசோலை பகுதியில் கடந்த புதன்கிழமை (02.07) வீட்டை உடைத்து பெறுமதியான பொருட்களை நகைகள் உள்ளிட்ட பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# குறுக்கெழுத்து புதிர் 016

முடிவுத் திகதி : 11.07.2014

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | 18 | ■ | 2 | 12 | 19 |
| 3 | | | | | ■ | | ■ | |
| | | | | 4 | | | | ன் |
| | ■ | ■ | ■ | 5 | | 13 | | |
| ■ | 6 | | | | ■ | | ■ | ■ |
| 7 | | | | | ■ | 8 | 14 | |
| 9 வா | | | | 15 | | | | ■ |
| 10 | | | | | ■ | 11 | | 16 |
| | ■ | 17 | | | ■ | ■ | | சு |

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 150, ரூபா 100, ரூபா 50 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

## இடமிருந்து வலமாக

1. பல வர்ணச் சிறகுடைய சிறு பறவை
2. கிளியில் சொண்டு
3. இனப்படுகொலை நடந்த ஆபிரிக்க நாடொன்று
4. இதனால் நாளாந்தம் மனிதர்கள் சாகின்றனர்
5. நாயகன் படத்தில் கமலின் நண்பர்
6. மீனவர் குலத்தைக் குறிக்கும் சங்ககாலச் சொல் - வலமிருந்து இடமாக
7. விழுதுகளை வீழ்த்தும்
8. இலங்கையின் நகரமொன்று
9. விமானத்தின் தமிழ்ப் பெயர்
15. இயற்கை மின்சாரம் பெறப் பயன்படும் பொறி
10. அறுக்கப்பயன்படும்
11. முத்துக்களை சுளையாகக் கொண்ட பழம் - குழம்பியுள்ளது
17. குழந்தைப் பசு

## மேலிருந்து கீழாக

1. ஆண்டைக் குறிக்கும் சொல்
2. 'தல' நடிகர்
7. பூவொன்று
13. வாய்கட்டிப் பூசை செய்பவர்
14. யாழ்ப்பாணக் கிராமம் ஒன்று - குழம்பியுள்ளது
15. சுவாசிப்பது
16. குற்றம் - ஒத்தசொல்
18. நாடுகளை வெற்றிகொள்ள அரசர்கள் மேற்கொள்வது.
19. லவனின் சகோதரன்

## குறுக்கெழுத்து புதிர் 015 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 18 உ | 1 பா | ல் | ■ | 2 த | லை | 19 மு | 16 றை | 24 ம |
| ப் | 3 க | ரி | 22 இ | 4 டு | ண் | த | 17 க | லை |
| 5 ப | ம் | 21 ப | ர | ம் | டு | லு | ■ | மு |
| ள | ப | ண | ட் | ■ | ம் | த | ■ | ர |
| ம் | ன் | 6 ம் | டை | 7 செ | ல் | 8 வி | 23 தை | சு |
| 9 க | வி | தை | க் | ■ | ■ | டி | ல் | ■ |
| ரு | 20 க | 10 நெ | கி | ழி | 11 ப | ய | ம் | 25 கு |
| 12 வி | ஜ | மை | ண | 13 இ | ய | ன் | ■ | ந் |
| றை | 14 னி | பு | 15 வி | ம் | மி | ■ | ■ | தி |

*விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :*
*மலைமுரசு. இல - 159ஏ,*
*கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி

01. பின்வரும் கருத்திற்குப் பொருத்தமான தனிச் சொல்லை எழுதுக.
   1. அதிகளவு மரங்களைக் கொண்ட இடம் ...................
   2. விபத்துக்களில் சிக்கியவர்களுக்கு உடனடியாக வழங்கப்படும் சிகிச்சை .........................

02. ஒரு தண்ணீர்த் தாங்கியில் 30லீற்றர் நீர் உள்ளது. இத்தாங்கியிலிருந்து 05 நிமிடத்தில் ஒரு லீற்றர் நீர் வெளியேறும் எனில், தாங்கியிலிருந்து நீர் முழுவதும் வெளியேற எவ்வளவு நேரம் தேவைப்படும்?

03. கீழ்வரும் பாடலை வாசித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

பாலைப் போல நிலவு வானில்
பவனி வரப் போகுது
கோலக்கடல் அலைக்கைதட்டி
குதூகலிக்கப் போகுது
நீலவானும் கண்சிமிட்டி நின்று பார்க்கப் போகுது
மாலை வேளை மலர்ந்து கங்குல்
மங்கை தோன்றப் போகிறாள்

1. கவிஞர் நிலவை எதற்கு உவமித்துக் கூறுகிறார்?

2. கோலக்கடல் அலக்கைதட்டிக் குதூகலிப்பது ஏன்?

3. மங்கை என்று கவிஞர் எதனைக் குறிப்பிடுகின்றார்?

4. வினைச்சொல் ஒன்றைக் குறிப்பிடுக.

5. பெயர்ச் சொல் ஒன்றை எழுதுக.


6. அடைமொழிச் சொல் ஒன்றை எழுதுக.

7. இப்பாடல் நாளொன்றின் எப்பொழுதில் நடைபெறும் நிகழ்ச்சியைப் பற்றிக் கூறுகிறது?

04. சரியாக எழுத்துக் கூட்டப்பட்டுள்ள சொல்லைத் தெரிந்து கோடிடுக.

1. உலவுத்தொழில், உழவுத்தொழில், உளவுத்தொழில்
2. சூழ்ந்து, சூல்ந்து, சூள்ந்து
3. வாலைப்பழம், வாழைப்பளம், வாழைப்பழம்
4. உட்சாகம், உற்சாகம், உற்ச்சாகம்
5. பின்னாக்கு, பிண்ணாக்கு, பின்ணாக்கு

05. அருகில் உள்ள உருவின் சுற்றளவு யாது?




06. சுபாவின் நிறையின் இரு மடங்கு நிறையுடையவர் அனுலா, அனுலாவின் அரை மடங்கு நிறை உடையவர் லவன். லவனை விட இரு மடங்கு நிறையுடையவர் பீமா. அனுலாவின் நிறை 30கி.கி எனின், பீமாவின் நிறை யாது?
   1. 15கி.கி   2. 20கி.கி   3. 30கி.கி

07. சமையலறையில் இரவில் கரப்பான் பூச்சிகளின் நடமாட்டத்தை தடுக்கும் எளிய வழி எது?
   1. கையால் பிடித்து அழித்தல்   2. மின்குமிழை ஒளிர விடுதல்
   3. பூச்சி மருந்து விசிறல்   4. பொறியுணவை வைத்தல்

08. கொழும்பு பண்டாரநாயக்கா விமான நிலையத்திலிருந்து அதிகாலை 4.30மணிக்கு புறப்பட்டுச் சென்ற ஆகாய விமானம் 2 மணித்தியாலம் 35 நிமிடப் பயணத்தின் பின் தாய்லாந்தை வந்தடைந்தது. இலங்கை நேரப்படி விமானம் தாய்லாந்தை சென்றடைந்த நேரம் என்ன?
   1. மு.ப 6.50   2. மு.ப 6.55   3. மு.ப 07.05

09. இலங்கையில் மட்டும் வாழும் இலங்கைக்குரிய பிராணி எது?
   1. ஆட்காட்டி குருவி   2. சருகுமான்   3. பெலிக்கன்   4. தீக்கோழி

10. கிராமப் புற மக்கள் பலாச்சுளைகளை பாதுகாத்து வைக்கும் விதம்?
   1. உலர்த்துதல்   2. உப்பிடுதல்
   3. சீனிப்பாகில் அமிழ்த்துதல்   4. குளிர்சாதனப்படுத்தல்

11. ஆண்டிற்கு ஒரு தடவை இலைகளை உதிர்க்கும் மரம் எது?
   1. நிழல்வாகை   2. இபில் இபில்   3. ஆலமரம்



**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**

# தீர்க்கமான முடிவு

ஒரு முன்கோபக்காரப் பையன் இருந்தான். முணுக்கென்றால் அவனுக்குக் கோபம் வரும். கோபம் வந்தால் தலைகால் தெரியாமல் வாய்க்கு வந்த படி வயது வரம்பில்லாமல் எல்லோரையும் பேசி விடுவான். பின்னர் அவர்களிடம் வருத்தப் படுவான்.

நாளடைவில் அவனை சுற்று வட்டாரத்தில் பலருக்கு இதனாலேயே பிடிக்காமல் போனது. அவனைத் தவிர்க்க ஆரம்பித்தார்கள். பையனுக்குத் தன்னைத் திருத்திக் கொள்ள வேண்டும் என்று தோன்றினாலும் எப்படி என்றுதான் தெரியவில்லை. அவனுடைய அப்பா பொறுத்துப் பொறுத்து பார்த்து விட்டு ஒரு நாள் அவனிடம் ஒரு வாளி நிறைய ஆணிகளையும் ஒரு சுத்தியலையும் கொடுத்தார்.

ஒவ்வொரு முறை ஆத்திரப் படும் போதும் சம்பந்தப் பட்டவர்களைத் திட்டுவதைத் தவிர்த்து விட்டு வீட்டுக்குப் பின்னால் உள்ள மர வேலியில் ஒரு ஆணியை ஆத்திரம் தீரும் வரை அறைந்து ஏற்றி விடும் படி அறிவுரைத்தார்.

முதல் நாள் வேலியில் சுமார் 50 ஆணிகளை அறைந்து ஏற்றினான். நாட்கள் செல்லச் செல்ல அவனைக் கோபமூட்டுபவர்கள் முன் வன்மையாகப் பேசுவதைக் கட்டுப் படுத்தக் கற்றுக் கொண்டான். கோபம் வந்தால்தான் உடனே ஆணி அடிக்கப் போக வேண்டுமே!

நாளடைவில் வாளியையும் சுத்தியலையும் எடுத்துக் கொண்டு வேலிப் பக்கம் போகுமுன் கோபவெறி குறைந்து போய், வேலியில் ஆணி அறைவது குறையத் தொடங்கியது. சில நாட்களில் வேலியில் ஆணி அடிக்க வேண்டிய தேவையே அவனுக்கு இருக்கவில்லை.



அப்பாவிடம் போய் விபரத்தைச் சொன்னான். அவர் உள்ளுக்குள் மகிழ்ச்சியடைந்தாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் அவனிடம் ஒரு ஆணி பிடுங்கும் கருவியைக் கொடுத்து வேலியில் அவன் அடித்த ஆணிகளை ஒவ்வொன்றாகப் பிடுங்கச் சொன்னார். அனைத்தையும் பிடுங்க அவனுக்கு முழுதாக ஒரு நாள் பிடித்தது.

எல்லா ஆணியை யும் பிடுங்கிய பிறகு அப்பாவும் மகனும் வேலியை பார்க்கப் போனார்கள். அப்பா வேலியில் ஆணிகளைப் பிடுங்கிய இடத்தில் இருந்த வடுக்களை மகனுக்குக் காட்டி "கோபம் வந்தால் அறிவிழந்து சொல்லும் சுடுசொல்லும் இந்த ஆணியைப் போலத்தான். ஆணியைப் பிடுங்குவது போல் நீ பேசியதற்கு மன்னிப்புக் கேட்டாலும், அந்த சொல் தைத்த இடத்தில் உள்ள வடு இந்த ஆணி ஏற்படுத்திய வடுவைப் போலவே மறைவது மிகக் கடினம்" என்று அவனுக்கு எடுத்துக் கூறினார்.

**- நாவினால் சுட்ட வடு என்றென்றும் ஆறாது. -**

### சிந்திக்க .. ..

அறிவுரையால் ஆளானவர்களை விட
அலட்சியத்தால்,
அழிந்தவர்களே அதிகம்!!




### லீவு விட்டாச்சி




புத்தகம் சுமக்கற வேலையில்லை
தினம் புளுங்கிச் சாகுற சுவருமில்லை
அம்மா கத்தி எழுப்பற கஷ்டமில்லை
காலையில் எழும்பற துன்பமும்இல்ல
லீவு விட்டாச்சி..... லீவு விட்டாச்சி....

கூட்டாஞ்சோறு ஆக்கி மகிழலாம்'
புழுதி பறக்க இனி ஓடிஆடலாம்
கிள்ளி தாண்டுமே அடிச்சு பாக்கலாம்
கிரிக்கெட் ஆடி ஜன்னல் கதவு
உடைக்கலாம்
லீவு விட்டாச்சி...... லீவு விட்டாச்சி......

*- டனசீஷ் -*

இவ்வுருவில் எத்தனை சதுரங்கள் காணப்படுகின்றன?



# Grammar

I'm doing something = I'm in the middle of doing something; I've started doing it and I haven't finished yet.

Eg: Please don't make so much noise. I'm working. (not I work)

Let's go out now. It isn't raining any more. (not it doesn't rain)

We use the present continuous when we talk about things happening in a period around now.

Ex: Is Mala working this week?

1. You .................... hard today?
2. I ............. for Shegar. Do you know W=where he is?
3. You .............. a lot of noise.
4. Have you got an umbrella? It ............. to rain.

You cannot be at the railway station when your father arrives there. Your friend is going to meet him for you,

**Write a note to your friend.**

When your father will arrive / What he looks like/ What he will be wearing (25 - 35)

# நற் பழக்கங்கள்

ஒரு செடியை நீங்கள் வளைக்க முடியாதபோது ஓங்கி வளர்ந்த மரத்தை எப்படி வளைப்பீர்கள்? இளம் வயதில்தான் குழந்தைகளுக்கு அறிவுரைகள் வழங்கலாம். இளம் பருவத்தில் கோபப்படாதீர்கள். அவர்களைப் பயப்படுத்த வேண்டாம். அவர்களுக்கு சொல்லிக் கொடுத்துக்கொண்டே அல்லது கற்பித்துக் கொண்டேயிருங்கள். அவசரப்படாதீர்கள். வேகமாகச் செய்திகளை மேலும் மேலும் சொல்லிக்கொண்டேயிருக்காதீர்கள்.

கீழ்ப்படிதல் என்பது ஓர் அடிப்படைப் பண்பு. இது அவர்களிடையே ஒரு வழக்கமாக மாற வேண்டும். இதற்கு மாறாக உங்கள் குழந்தையை பெரியோரைக் கண்டால் வணக்கம் செய் என்று உத்தரவு போடவும் கூடாது. குழந்தையே இப் பண்பினை வழக்கமாக மாற்றிக்கொள்ள வேண்டும். குழந்தை எப்போதும் இல்லையென்று சொல்லாது. அவர்கள் மீது ஆற்றலைப் பிரயோகிப்பது நமது நோக்கை அடையப் பயன்படாது.

குழந்தை உண்மையை மட்டும் பேச வேண்டும். உண்மை எப்போதும் வெற்றிபெறும். குழந்தைகளை இந்த விடயத்தில் நல்ல தெளிவான அறிவு வரும்படி செய்ய வேண்டும்.

குழந்தைகளுக்கு படிக்கும் முன் சொல்லப்படும் கதைகளில் வீரம் மிக்க தைரியமிக்க கதாநாயகர்கள் பற்றிச் சொல்லவும். இதனால் குழந்தைகள் வீரமும் தைரியமும் ஜெயிக்கும் என்றும், ஆனால் கோழைத்தனம் தோற்றுவிடும் என்றும் புரிந்துகொள்வார்கள்.

தொடரும்.. ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

2. $Y= X^2+4X +8$ என்னும் சார்பின் சமன்பாட்டை மாற்றியமைத்து வளையியின் சமச்சீர் அச்சின் சமன்பாடு, திரும்பல் புள்ளியின் ஆள்கூறு ஆகியவற்றைக் காண்க.

3. பொருள் ஒன்றை விற்கும் போது, அதன் குறித்த விலையில் 8% கழிவு கொடுக்கப்பட்டுள்ளது. அப் பொருளின் குறித்த விலை ரூபா 2500 எனின், அதன் விற்பனை விலையைக் காண்க.

04. நேர்விளிம்பு, கவராயம் அளவுகோல் ஆகியவற்றை பயன்படுத்தி PQ = 6.2cm, கோணம் QPR = 75பாகை, கோணம் PRQ = 45பாகை ஆன முக்கோணம் PQR இனை அமைக்குக.

1. PR இன் நீளத்தை அளந்தெழுதுக.
2. QS = RS ஆகுமாறு S ஆனது QR இற்கு P இருக்கும் பக்கத்திற்கு எதிர்புறமாக இருக்குமாறும் கோணம் RQS = 45பாகை ஆகவும் உள்ள புள்ளி S இனைக் குறிக்க.
3. நாற்பக்கல் PQSR ஐ பூரணப்படுத்துக.
4. நாற்பக்கல் PQSR இன் விசேட பெயர் என்ன?

05. புகையிரதம் ஒன்று $14.4Kmh^{-1}$ எனும் வேகத்தில் 100m நீளமான புகையிரத மேடையைக் கடக்க 40 செக்கன்கள் எடுத்துக் கொண்டது.

1. வேகத்தை $ms^{-1}$ எனும் அலகில் காட்டுக.
2. புகையிரதத்தின் நீளத்தைக் காண்க.

06. ஜெனி ரூ95000 ஐ எளிய வட்டிப்படி 15வீதம் ஆண்டு வட்டி வழங்கும் வங்கியொன்றில் சேமிப்பில் இடுகிறார்.

1. 2 வருடத்தின் பின்னர் ஜெனியின் கணக்கில் வட்டியாக சேர்ந்திருக்கும் பணத் தொகை யாது?
2. அவர் 6 மாதத்திற்கு ஒரு முறை வட்டியை அவர் கணக்கிலிருந்து எடுப்பார் எனின், எவ்வளவு தொகையை எடுத்திருப்பார்?
3. ஜெனி இதே வீதத்தில் 2 ஆண்டுக்கு கூட்டு வட்டியில் வைப்புச் செய்தால் எவ்வளவு பணம் கூடுதலாக சேர்க்கலாம்?
4. ரூP ஐ 15வீத எளிய வட்டி படி 2 வருடம் சேமிப்பில் இட்டால் கிடைக்கும் மொத்தத் தொகை 13P/10 எனக் காட்டுக.
5. மேலே உள்ள சமன்பாட்டில் பிரதியிடுவதன் மூலம் ரூ65000 ஐ வைப்பிலிட்டால் கிடைக்கும் தொகையைக் காண்க.

07. கூட்டல் விருத்தி ஒன்றிலும் பெருக்கல் விருத்தி ஒன்றிலும் 13 உறுப்புகள் வீதம் உள்ளன. கூட்டல் விருத்தியின் முதல் உறுப்பு 10உம் பெருக்கல் விருத்தியின் முதல் உறுப்பு 1/8 உம் ஆகும். கூட்டல் விருத்தியின் பொது வித்தியாசம் d, பொருக்கல் விருத்தியின் பொது விகிதம் r எனின்,

1. கூட்டல் விருத்தியின் நடுவில் உள்ள உறுப்பை d யிலும், பெருக்கல் விருத்தியின் நடுவிலுள்ள உறுப்பை r இலும் தருக.
2. பொது வித்தியாசமானது பொது விகிதத்திலும் 1 இனால் கூடியும், இரு விருத்திகளினதும் நடு உறுப்புக்கள் சமனாகவும் இருந்தால் r இல் ஒரு சமன்பாட்டை எழுதுக.
3. r = 2 என்பது இச் சமன்பாட்டை திருப்தி செய்கிறது எனக் காட்டி இப் பெறுமானத்தை உபயோகித்து ஒவ்வொரு விருத்தியிலும் 5ஆம் உறுப்பைக் காண்க.

Personal Classes Year 06, 07, 08, 09, 10 & G.C.E (O/L)
**திருமலையின் பிரபல ஆசிரியர் T. Kumanan 0772975953**
**23. Sivan st Trinco.**
G.C.E (O/L) பிரதி சனி தோறும் பரீட்சைக்குச் சகல மாணவர்களும் பங்குபெற்றலாம்.

## பாடம் : விஞ்ஞானம்

1. பாரம்பரிய இயல்புகளை அடுத்த சந்ததிக்குத் தலைமுறையுரிமை பெறச் செய்வதற்கு ஒரு வகையான கலத்தில் இருக்க வேண்டிய அத்தியவசிய புன்னங்கம்
   1. கல மென்சவ்வு 2. கொல்கிய உபகரணம் 3. கரு
   4. இழைமணி

2. ஒடுக்கற் பிரிவு பின்வரும் எந்நிலைமையில் ஏற்படும்?
   1. நுகம் முளையமாக மாறும் போது
   2. முளையம் முதிர்மூலவுருவாக மாறும் போது
   3. எல்லா உடற் கலங்களும் வளரும் போது
   4. சூல்களினதும் விந்துகளினதும் உற்பத்தியின் போது

3. உப்பளத்தில் உப்பு உற்பத்திச் செயன்முறையில் கல்சியம் காபனேற்று, கல்சியம் சல்பேற்று, சோடியங் குளோரைட்டு வீழ்படிவாதல் முறையே நடைபெறுகின்றன. இவ்வுப்புகளின் கரைதிறன் பற்றிய சரியான தொடர்பு யாது?
   1. $CaCO_3 < CaSO_4 < NaCl$ 2. $Nacl < CaCO_3 < CaSO_4$
   3. $CaSO_4 < NaCl < CaCO_3$ 4. $CaCO_3 < NaCl < CaSO_4$

4. ஓசோன் படை வறிதாக்கத்திற்கு (சிதைவடைதலுக்கு) உயர்ந்தபட்சம் பின்வரும் எக்கூறு பங்களிப்புச் செய்கின்றது?
   1. அமோனியா ($NH_3$) 2. காபனீரொட்சைட்டு ($CO_2$)
   3. குளோரபோம் ($CHCl_3$) 4. மெதேன் ($Ch_4$)

5. உயர் வெப்பநிலைகளுக்கும் அமுக்கங்களுக்கும் உட்படுவதனாலும் நில நடுக்கம் காரணமாகவும் பாறைகள் மாற்றங்களுக்கு ஆளாகின்றன. இதன் விளைவாக எப்பாறை வகை உருவாகின்றது?
   1. தீப்பாறை 2. அடையற்பாறை 3. உருமாறிய பாறை 4. கருங்கல்

6. தாவரக்கலத்தில் காணப்படும் ஆனால் விலங்குக் கலத்தில் இல்லாத ஒரு கட்டமைப்பு
   1. இழைமணி 2. கலச்சுவர் 3. குழியமுதலுரு 4. முதலுரு மென்சவ்வு

01. உருவில் உள்ளவாறு 1மீ நீளமுள்ள ஓர் உலோகப் பீலி கிடை நிலத்துடன் சாய்த்து வைக்கப்பட்டுள்ளது. அதன் முனை A நிலத்திலிருந்து h உயரத்தில் இருக்கின்றது. திணிவு m ஐ உடைய ஓர் ஒப்பமான கண்ணாடி உருண்டை தானம் A இல் வைக்கப்பட்டு விடுவிக்கப்படுகின்றது. அது பீலி வழியே வழுக்கிச் சென்று B வரைக்கும் வந்து பின்னர் கிடை நிலத்தின் மீது 5மீ தூரம் சென்று புள்ளி C யில் ஓய்வடைகின்றது. (ஈர்ப்பிலாக ஆர்முடுகல் g ஆகம்)




1. A யில் உருண்டையில் அழுத்தச் சக்திக்கான ஓர் கோவையைத் தரப்பட்டுள்ள குறியீடுகளின் சார்பில் எழுதுக.
2. Bயில் உருண்டையின் வேகம் V ஆகும் Bயில் இயக்கப்பாட்டுச் சக்திக்கான ஒரு கோவையைத் தரப்பட்டுள்ள குறியீடுகளின் சார்பில் எழுதுக.
3. V யைக் காண்பதற்கு மேலே (1) இலும், (2) இலும் குறிப்பிட்ட கோவைகள் இடம்பெறும் ஒரு தொடர்பை எழுதுக.
4. $h=0.2m$, $g=10\,ms^{-1}$ எனின், V யின் பெறுமானத்தைக் காண்க.
5. Cயில் கண்ணாடி உருண்டை ஓய்விற்கு வருவதற்கான காரணத்தைக் குறிப்பிடுக.

## பாடம் : வரலாறு

01. 1. எனது போராட்டம் எனும் நூலை எழுதுதல்
   2. பாப்பரசருடன் லாத்தரன் உடன்படிக்கையில் ஈடுபடல்
   3. சர்வதேச சங்கத்தை தோற்றுவிப்பதில் முன்னோடியாகத் திகழ்தல்

   அ. .மேற்படி விடயங்களுடன் தொடர்புடைய தலைவர்களைக் குறிப்பிடுக.

   ஆ. இரண்டாம் உலக மகாயுத்த அணிகளைக் குறிப்பிட்டு அதில் பங்கெடுத்த நாடுகள் இரண்டு வீதம் தருக?

   இ. முதலாம் உலக மகாயுத்தத்திற்கு ஜேர்மனி காரணமான விதத்தை இரண்டு விடயங்கள் ஊடாக விளக்குக?

   ஈ. கெடுபிடி போர்க்காலத்தில் ஐக்கிய நாடுகள் சபை மூன்றாம் உலகப் போர் ஏற்படுவதை தடுத்து நின்ற சந்தர்ப்பங்கள் மூன்றைக் குறிப்பிட்டு விளக்குக?

02. கலிங்க மாகனின் படையெடுப்பின் பின் இராசதானி தென்மேற்கு நோக்கி இடம் பெயர்ந்ததுடன் மக்களின் பொருளாதார,சமூக நடவடிக்கையும் மாற்றமடைந்தன

   அ. 1. இந்தியாவின் அதிவீர ராம பட்டினத்தை ஆக்கிரமித்தல்
   2. பாண்டி மன்னனுடன் நட்புக் கொண்டு தந்த தாதுவை மீட்டு வந்த மன்னன்
   3. குருணாகலில் அந்துக்கல்புரவை தலை நகராக்குதல் மேற்படி நிகழ்வுகளுடன் தொடர்புடைய ஆட்சியாளர்களைத் தருக.

   ஆ. கம்பளை இராசதானியாக தெரிவு செய்யப்பட்டமையில் பங்களித்த காரணிகள் இரண்டைத் தருக?

   இ. 2ம் பராக்கிரம பாகுவின் சமய,அரசியல் பணிகளை சுருக்கமாக விளக்குக.
   ஈ. தென்மேற்கு நோக்கி இடம் பெயர்ந்த காலத்தில் இடம் பெற்ற பொருளாதார மாற்றங்களை விவரிக்குக.

03. 1. அ. இலங்கையில் சட்டவாக்கக் கழகத்திற்கு தெரிவான முதல் கல்வி கற்ற இலங்கையர்
   ஆ. 1818 ஆம் கிளர்ச்சியின் போது பிரித்தானியாருக்கு சார்பாக நடந்து கொண்ட பிரதானி
   இ. 1948 ஆம் ஆண்டு சுகந்திர இலங்கையின் முதல் பிரதமர்

   1. மேற்படி விடயங்களை தொடர்புடையவர்களை அ, ஆ, இ, ஈ என்ற ஒழுங்கில் தருக.

   2. இலங்கையின் கோப்பிசெய்கை விருந்திக்கு பங்களித்த காரணிகள் இரண்டை தருக?

   3. 1948 ஆம் ஆண்டு கிளர்ச்சிக்கு கோல்புறூக் கமரன் சீர்திருந்தம் காரணமான விதத்தை இரு காரணிகள் ஊடாக விளக்குக.

   4. பெருந்தோட்டத் துறையினால் ஏற்பட்ட பொருளாதார மாற்றங்களை சுருக்கமாக விளக்குக.

04. பின்வருவனவற்றுள் சேர்.பொன்.இராமநாதனின் சேவை தொடர்பான கூற்றுஎது?
   1. வண்ணார்பண்ணையில் ஆங்கிலப்பாடசாலை ஒன்று ஆரம்பித்தமை
   2. பைபிளைத் தமிழில் மொழி பெயர்த்தமை.
   3. சைவபரிபாலன சபையினை ஆரம்பித்தமை
   4. பரமேஸ்வராக் கல்லூரியைக் கட்டுவித்தமை



ஆசிரியர் : அகிலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பியனுப்பப்படும் ...

புகலிடம் தேடிப்பயணித்த 153 பேரைக் கொண்ட படகு அவுஸ்திரேலியக் கடற்பரப்பில் தடுக்கப்பட்டுள்ளது. இப்படகில் 37 குழந்தைகள் இருப்பதாகவும் அவர்களில் 03மாதக் குழந்தையொன்று சுகவீனமுற்று இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களை நடுக்கடலில் கையேற்கும் நடவடிக்கைகள் கடற்சீற்றம் காரணமாக சவாலுடையதாக இருப்பதாக தெரிவித்துள்ள குறிப்பிட்ட இரண்டாம் தர கடற்படை அதிகாரி அந்நடவடிக்கை நிறைவுற்றதும் அவர்கள் இலங்கைக்குக் கொண்டுவரப்படவுள்ளனர் என தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கொண்டு வரப்படும் மக்கள் திருகோணமலைக் கடற்படைத்தளத்திற்குக் கொண்டுவரப்படவுள்ளனர் என்று அச்சமும் காணப்படுகின்றது எனினும் இத் தகவலை உறுதிப்படுத்த முடியவில்லை.

இதேவேளை அவுஸ்திரேலியா புகலிடக் கோரிக்கையாளரைக் கையாளும் முறை தொடர்பாக ஐக்கி நாடுகள் சபை தமது கவலையை வெளியிட்டுள்ளது.

## வீட்டுக்கூரையில் ...

தம்மிக்க விக்ரமஆராய்ச்சி எனவும் தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு மங்களராம விகாரையில் தங்கியிருந்த அவர் குறித்த தாதியுத்தியோகத்தர் கடமைக்குச் சென்றிருந்த சமயத்தில் அவரது வீட்டுக் கூரையிலிருந்ததை அவதானித்த அயலவர் இளைஞர்கள் சிலரின் துணையுடன் இவரை மடக்கிப்பிடித்திருந்தனர்.

அதேவேளை கடந்த திங்கட்கிழமை கோவிந்தன் வீதியில் வீடொன்றின் கூரை மீது இருந்த மூவரை அயலவர்கள் மடக்கிப் பிடிக்க முயற்சித்த போதும் அம் முயற்சி கைகூடவில்லை எனத் தெரிகின்றது.

## ஒரு மூட்டை நெல்லை ...

கொஞ்சமாவது ஏற்படுத்தி கொள்ளமுடியும். விதைப்பதற்கு விதை நெல்களை கூட இக் கிராமத்தில் நிரந்தர வீடு இல்லாத காரணத்தால் பாதுகாக்க முடியாமல் ஒரு மூட்டை நெல்லை கூட 8கி.மீ தூரத்தில் இருக்கும் புல்மோட்டை கிராமத்தில் வைத்து பாதுக்காக வேண்டி உள்ளது.

இக் கிராமத்தில் 150 குடும்பத்துக்கு மேல் வசித்து வந்தனர் . தற்சமயம் தற்காலிக வீட்டில் 100 குடும்பங்கள் அளவில் வசித்து வருகின்றனர். பிரதான தொழிலாக விவசாயமான நெல், உளுந்து பயிரிடப்படுகின்றது. நண்டு, இறால் பிடிப்பதுமான தொழிலையும் செய்து வருகின்றனர்.

அரசாங்கத்தினரால் கிராமத்தில் உள்ள வீதிகள் அனைத்துக்கும் மின்சாரம் இணைக்கபட்டுள்ளது. வீதிகளுக்கோ அல்லது தற்காலிக குடியிருப்புகளுக்கோ மின்சார விளக்குகள் ஏதும் கிடையாது. வீதிகளுக்கு மின்சார விளக்குகள் இருந்தாலே யானைகள் தொல்லை ஓர் அளவுக்கு சமாளிக்க முடியும்.

இக் கிராமத்தில் 30 வருடத்துக்கு முன் உடைக்கப்பட்ட பாடசாலை மீண்டும் கட்டப்பட்டுள்ளது. 5 வகுப்பறைகளை கொண்டதாக உள்ளது. தளபாடங்கள் அற்ற நிலையில் காணப்படுவதாகவும் இப் பாடசாலைக்கு இரண்டு ஆசிரியர்கள் நியமனம் பெற்று வந்து செல்கிறார்கள்.

பாடம் சொல்லி கொடுப்பதற்கு மாணவர்கள் இன்னும் சேர்க்கப்படவில்லை. ஆரம்ப பாடசாலை தனியாக இயங்குகிறது. இதில் 5 பிள்ளைகள் படிக்கிறார்கள். இவ் ஊரில் கட்டடம் என்று சொன்னால் இவ் இரண்டு பாடசாலைகளுமே. அவர்களின் வாழ்வாதாரங்களுக்கான எந்தவித உதவிகளும் கிடைக்கவில்லை என்பதனையும் இவ் கிராம மக்கள் பத்மநாபா நீ.சு.டு.கு குழுவினரிடம் தெரிவித்தார்கள்.

அவர்களின் ஒட்டு மொத்த வேண்டுக்கோளும் நிரந்தரமான வீட்டு வசதியையும், மின்சார வசதியையும் பெற்று கொள்வதாகும். 200 வருட பழைமை வாய்ந்த கிராமமான தெனமரவாடி மக்களாகிய எங்களை யாரும் கண்டுகொள்வதில்லை என்பதையும் மன வேதனையுடன் தெரிவித்தனர். இம் மக்களின் மன வேதனையை அறிந்து இவ் மக்களின் பிரச்சனைகளை குச்சவெளி பிரதேசசபை, மின்சாரசபை மற்றும் குச்சவெளி பிரதேச செயலகத்தின் கவனதிற்கு கொண்டு செல்வதாக பத்மநாபா E.P.R.L.F. கட்சியின் திருகோணமலை அமைப்பாளர் சத்தியன் அவ் மக்களிடம் தெரிவித்தார்..

## தீர்த்தத் திடலில்.....

பகுதியானது அனர்த்தத்தால் பாதிக்கப்படக்கூடிய பகுதியாக கரையோர மூலவள முகாமைத் திணைக்களத்தால் ஏற்கனவே குறிக்கப்பட்டுள்ள இடமாக இருந்தாலும் கூட அதனைக் கருத்திற் கொள்ளாமல் எவ்வாறு இத்திட்டத்திற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பது ஆச்சரியமாக இருப்பதாக திருகோணமலை நகரசபை உறுப்பினர் நந்தன் மாஸ்டர் மலைமுரசிற்குத் தெரிவித்தார்.

அத்துடன் திருகோணமலையின் பிரசித்தி பெற்ற கோயில்களான காளிகோவில், ஆலடிவினாயகர் கோவில், சமாதுபிள்ளையார் கோவில், சிவன் கோயில் போன்றவற்றின் தீர்த்தத் தலமாக காணப்படும் பிரதேசத்திலேயே இவ் வீடமைப்புத் திட்டம் உருவாக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மக்களின் பாதுகாப்பையும், கோவில்களின் தேவையையும் கருத்திற்கொண்டு இத்திட்டத்தை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையையும் அவர் முன்வைத்தார்.

## சொகுசு வாகன மோசடி...

பில்லியன் வரி ஏய்ப்பச்செய்யப்பட்டுள்ளது.

ஜப்பானில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள இவ்வாகனங்கள் பிரித்தானியாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டு அங்கிருந்து இறக்குமதி செய்யப்படுவதன் ஊடாக அவை பிரித்தானியாவில் பயன்படுத்தப்பட்டவை என்ற மாயையை ஏற்படுத்தியே இம் மோசடி தொடர்ந்துள்ளது. இதனால் சுமார் 80 வீத வரிச்சலுகையை இறக்குமதியாளர்கள் அனுபவித்துள்ளனர். தற்போது கையகப்படுத்தப்பட்டுள்ள வாகனங்கள் வெறும் 100 கிலோ மீற்றருக்கும் குறைவான தூரத்தையே ஓடிமுடித்துள்ளன. அத்துடன் இவ்வாறு கையகப்படுத்தப்பட்ட வாகனங்கள் அரச அலுவலருக்குக் கிடைத்த வாகன வரிச்சலுகைப் பத்திரங்களைப் பயன்படுத்தியே இறக்குமதி செய்யப்பட்டிருப்பதும் தெரியவந்துள்ளது.

## திறந்து கிடக்கும் தொடருந்து...

வேளைகளில் பாதசாரிகள்ளயோ அல்லது சிறுவாகனங்களின் போக்குவரத்தையோ முற்றாக தடுக்கும் வகையில் இல்லை. மேலும் கண்காணிப்பு,காவல் கடமைக்கான அலுவலர்கள் கூட இங்கே இல்லை.

இதனால் பல விபத்துகளும், மரணங்களும் கூட சம்பவித்து உள்ளது, கால்நடைகள் கூட பல இறந்து உள்ளன. விசேடமாக இவ்வீதி வழியில் மயானம் ஒன்று இருப்பதானால் ஆபத்து கருதி வேறு நீண்ட பணனம் கொண்ட சுற்று வழியைக் பொது மக்கள் பயன வருகின்றனர். ஆகவே உடன் இவ்வீதிக்கான பாதுகாப்பான தடுப்பு வேலியும், காவலரும் ஒழுங்குபடுத்திட பொது மக்கள் வேண்டுகின்றனர்.

## ஞானசாரதேரரும் புலிகளைச் சந்தித்தாரா?

பொதுபலசேனாவின் ஞானசார தேரர் புலிகளைச் சந்தித்தாக அமைச்சர் ராஜித சேனாநாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

அமைச்சர் அவ்வாறு குற்றம் சாட்டும் போது " தேரர் புலிகளின. முகவர்களைச் சந்தித்த புகைப்படங்கள் என்னிடம் உள்ளன. யுத்தகாலத்தில் எங்கேயிருந்தார் இந்தத் தேரர்? அவர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இருக்கவில்லையா? அவர் புலிகளின் முகவர்களைச் சந்திக்க ஏற்பாடும் பணவசதியும் செய்து கொடுத்தது ரவி கருணாணாயக்க... தேரர் யாருடன் முல்லைத்தீவுக்குச் சென்று வந்தார் என்பதை நான் கேட்கின்றேன். அங்கு சென்று திரும்பியவுடன் அவர் வந்து என்னைச் சந்திக்கவில்லையா என்று அவரிடம் கேளுங்கள்" என்று பல கேள்விகளை எழுப்பியுள்ளார்.



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மூலோபாய நகர...

மூலோபாய நகர அபிவிருத்தித்திட்டமானது நகரக்கட்டுமானங்களின் அபிவிருத்தி, முதலீட்டுத் திட்டங்களை விருத்தி செய்தல் மற்றும் இயளளவை விருத்திசெய்தல் ஆகிய நோக்கங்களுடன் உருவாக்கப்பட்ட திட்டமாகும்.

மூலோபாய முதலீடுகளின் ஊடாக நகரத்தை விருத்தி செய்யும் நோக்குடன் உருவாக்கப்பட்ட இத்திட்டத்தால் கொழும்பில் கிராமப்புறங்களை இல்லாதொழித்து நகரங்களை உருவாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதும் மக்கள் தாம் வாழ்ந்த பிரதேசங்களை விடுத்து அரசினால் ஒதுக்கப்பட்ட பிரதேசங்களுக்கு நகர்த்தப்பட்டது நடந்தேறியமையும் குறிப்பிடத்தக்கது.

திருகோணமலையில் இத்திட்டத்தைச் செயற்படுத்தும் முதற்கட்ட நடவடிக்கையாக மூலோபாய நகர அபிவிருத்தித் திட்ட அலுவலகம் ஒன்றை உருவாக்க பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. இவ்வலுவலகத்திற்கான பிரதித் திட்டப் பணிப்பாளர், உதவித் திட்டப் பணிப்பாளர்கள், பொறிறியலாளர்கள், காணி அலுவலர்கள், சூழல் அலுவலர்கள், தொழில்நுட்பவியலாளர்கள், படவரைஞர்கள் போன்றோருக்கான வெற்றிடங்களை நிரவும் வேலைவாய்ப்புக்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

## கிழக்கின் தவிசாளரை...

கோருமாயின் முஸ்லிம் சமூகத்தின் நலன் கருதி அது கவனத்தில் கொள்ளப்படும்.

இன்று முஸ்லிம்களுக்கு அடையாளமாக உள்ள ஒரே மாகாணசபை கிழக்கு மாகாணசபையாகும் இம்மாகாணசபையில் மட்டுமே முஸ்லிம் முதலமைச்சர் இருக்கிறார். முஸ்லிம் காங்கிரசின் தயவுடன் தான் இம்மாகாணசபை அரசாங்கத்தின் சபையாக செயற்படுகிறது. முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவு கொடுக்கா விட்டால் இம்மாகாண சபையின் நிலை வேறு விதமாக அமைந்திருக்கும்.எனினும், இம்மாகாணசபை ஆட்சியின் முதுகெழும்பாக உள்ள முஸ்லிம் காங்கிரசுக்கு முஸ்லிம் சமூகத்தின் நலன் சார்ந்த ஒரு பிரேரணையை இச்சபையில் சமர்ப்பிக்க முடியவில்லை. முஸ்லிம் காங்கிரசின் தயவுடன் தவிசாளராக இருக்கின்றவர் அதற்கு இடங்கொடுக்க வில்லை என்றால் இதனை விட வெட்கமும், வேதனையும் வேறு என்னவாக இருக்க முடியும்.

முஸ்லிம் காங்கிரஸ்காரர்கள் தன்மானமுள்ளவர்கள் என்றால் குறைந்த பட்சம் கிழக்கு மாகாண சபையில் முஸ்லிம் காங்கிரஸ் நடுநிலையாகச் செயற்படும் என்ற ஒரு அறிவித்தலையாவது விட்டிருக்க வேண்டும். அது நடக்கவில்லை. எனினும் தவிசாளருக்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பிப்பதாக கூறியுள்ளார்கள்.

இது விடயத்தில் ஏனைய கட்சிகளின் ஆதரவு முஸ்லிம் காங்கிரசுக்கு அவசியம் தேவை. இந்த விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவு கோரப்படுமாயின் முஸ்லிம் சமுகத்தின் நலன்கருதி அது கவனத்தில் கொள்ளப்படும். ஏனெனில் சுதந்திரம் முதல் இன்று வரை முஸ்லிம்கள் விடயத்தில் கூடுதல் அக்கறையோடு செயற்படுகின்ற கட்சி ஐக்கிய தேசியக்கட்சியாகும்.எனினும், இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை முஸ்லிம் காங்கிரஸ் கொண்டு வரும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. ஏனெனில் அரசுக்கும் அவர்களுக்குமிடையிலான கொடுக்கல் வாங்கல்கள் அதற்கு இடங்கொடுக்காது. இந்த கொடுக்கல் வாங்கல் விடயத்தை அரசு முஸ்லிம் காங்கிரசுக்கு இதுவரை ஞாபகமூட்டியிருக்கும். இதனால் முஸ்லிம் காங்கிரஸ் பெட்டிப்பாம்பாக அடங்கிப் போய் விடும். எனவே, வழமைபோன்று அரசுக்கு முட்டுக்கொடுக்கின்ற பணியை இக்கட்சி கச்சிதமாகச் செய்யும்.

எனது இந்த எதிர்வுகூறலின் உண்மை நிலையை முஸ்லிம் சமுகம் விரைவில் அறிந்து கொள்ளும். முஸ்லிம் காங்கிரஸ் சமூகத்தை எப்படி ஏமாற்றுகிறது என்ற உண்மைநிலை இதன் மூலம் தெரியவரும்.
இவ்வாறு அவர் கூறினார்

**உண்மையை உலகுக்குச் சொல்லக் கூடிய பத்திரிகையாளர்கள் தேவை - 075 4252042**





# முஸ்லிம்களின் கடமையான குளிப்பு

கடமையான குளிப்பை நிறைவேற்ற முன் இரு கைகளையும் மூன்று முறை கழுவ வேண்டும். அதன் பின், மர்மஸ்தானத்தை கழுவ வேண்டும். பின்பு வுழூச் செய்ய வேண்டும். அதன் பின் தலையில் மூன்று முறை தண்ணீர் ஊற்றி (உடலை சுத்தப்படுத்தி)க் கொள்ள வேண்டும். குளிக்கும்போது வலது பக்கத்திலிருந்து தண்ணீர் ஊற்ற வேண்டும். ஆண், பெண் இவ்வாறு கடமையான குளிப்பை நிறைவேற்ற வேண்டும். நபி (ஸல்) அவர்கள் இப்படித்தான் குளிப்பை நிறைவேற்றியிருக்கிறார்கள்.

நபி (ஸல்) அவர்கள் கடமையான குளிப்பை நிறைவேற்றும்போது தம் இரு கைகளையும் கழுவி விட்டு தொழுகைக்குச் செய்வது போன்று வுழூ செய்வார்கள். (அறிவிப்பவர்: ஆயிஷா (ரழி),மைமூனா (ரழி), ஆதாரம்: புகாரி-241:265, முஸ்லிம்-317, நஸாயீ-247)

நபி (ஸல்) அவர்கள் குளிப்பதற்காக நான் தண்ணீர் எடுத்து வைத்தேன். தமது முன் கைகளின் மீது தண்ணீர் ஊற்றி, இரண்டு அல்லது மூன்று முறை கழுவினார்கள். பின்பு வலக்கரத்தால் சிறிதளவு தண்ணீரை இடக்கரத்தால் ஊற்றித் தமது மர்மஸ்தலத்தைக் கழுவினார்கள். பின்பு தமது கையைத் தரையில் தேய்த்தார்கள். பின்பு வாய்க் கொப்பளித்து மூக்கையும் சுத்தம் செய்து, முகத்தை கழுவினார்கள். இரு கைகளையும் கழுவினார்கள். பின்னர் தலையை மூன்று முறை கழுவி விட்டு தம் மேனியில் தண்ணீரை ஊற்றிக் கொண்டார்கள். பின்பு (குளித்த இடத்திலிருந்து) சற்று விலகி நின்று தம் கால்களைக் கழுவிக் கொண்டார்கள். (அறிவிப்பவர்: மைமூனா (ரழி) (ஆதாரம்: புகாரி-258, முஸ்லிம்-317, நஸாயீ-253, இப்னுமாஜா-573)



நபி (ஸல்) அவர்கள் குளித்த பின் வுழூச் செய்ய மாட்டார்கள் என ஆயிஷா (ரழி) கூறினார்கள். (ஆதாரம்: திர்மிதி-108, அபூதாவூத்-250, இப்னுமாஜா-579)

அஸ்மா பின்த் ஷகல் (ரழி) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் வந்து மாதவிடாய்க் குளிப்பு பற்றிக் கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் "உங்களில் ஒருவர் (மாதவிடாய் குளிப்பின் போது).தண்ணீரையும் இலந்தை இலைகளையும் எடுத்து நன்கு சுத்தம் செய்து கொள்ளட்டும். பிறகு தலைக்குத் தண்ணீர் ஊற்றி நன்றாகத் தேய்ந்து தலையின் சருமம் நனையும் வரை கழுவட்டும்.

தொடரும் .. ..






## புடொல் கட்லட்

**தேவையான பொருட்கள்**

பொட்டுக்கடலை மாவு - 1 கப், புடலங்காய் - 1, பட்டை - 1 துண்டு, கிராம்பு – 1, பச்சை மிளகாய் - 3, உப்பு, எண்ணெய் - தேவைக்கேற்ப

**செய்முறை**

பச்சை மிளகாய், பட்டை கிராம்பு ஆகியவற்றை மிக்ஸியில் போட்டு அரைத்துக் கொள்ளவும். இத்துடன் பொடியாக நறுக்கிய புடலங்காயைச் சேர்த்து அரைத்து உப்பு, பொட்டுக் கடலை மாவு இவற்றை ஒரு பாத்திரத்தில் போட்டு, சிறிது தண்ணீர் தெளித்து பிசையவும். பிறகு தாச்சியில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் மாவை வடைகளாகத் தட்டிப் போட்டு நன்கு சிவந்ததும் எடுத்தால் கட்லெட் ரெடி.

## நண்டு கறி



**தேவையான பொருட்கள்**

நண்டு - 1 கிலோ, சோம்பு - 2 தே.கரண்டி, பூண்டு - 5 பல், புளி - தேவையான அளவு, வெங்காயம் - 3, நாட்டுத் தக்காளி – 4, மிளகு - 1 தே.கரண்டி, சீரகம் - 2 தே.கரண்டி, மிளகாய்த்தூள் - 2 தே.கரண்டி, மல்லித் தூள் - 3 தே.கரண்டி, மஞ்சள் தூள் - 1-4 தே.கரண்டி, உப்பு - தேவையான அளவு, எண்ணெய் - தேவையான அளவு

**செய்முறை**

வெங்காயத்தையும், தக்காளியையும் பொடியாக நறுக்கிக் கொள்ள வேண்டும். பிறகு சீரகம், சோம்பு, பூண்டு மற்றும் மிளகு சேர்த்து அரைத்துக் கொள்ள வேண்டும். தாச்சியில் எண்ணெய் விட்டு வெங்காயம், தக்காளி வதக்கி பிறகு அரைத்த மிளகு, சீரகம், சோம்பு, பூண்டு சேர்த்து வதக்கி, மஞ்சள் தூள், மிளகாய் தூள், மல்லித்தூள் போட்டு நன்றாக வதக்க வேண்டும். பிறகு புளியை கரைத்து ஊற்றி, தண்ணீர், உப்பு சேர்த்து நன்றாக கொதித்த பிறகு நண்டை போட்டு மூடிவிட வேண்டும். நண்டு நன்றாக வெந்த பிறகு கொத்தமல்லி, கறிவேப்பிலை போட்டு இறக்கி மூடி வைக்க வேண்டும்.



## கறுப்பை நீக்க சில டிப்ஸ்

இந்த உலகில் அழகாக இருக்க வேண்டும் என்று நினைக்காதவர்கள் எவரும் இருக்க முடியாது. அவ்வாறு அழகாக இருக்க வேண்டும் என்பதற்காக அழகு நிலையங்களுக்கு சென்று அழகுப்படுத்திக் கொள்கின்றனர்.


கருப்பாக இருப்பதற்கு முதல் காரணம் உடலில் இருக்கும் நிறமி செல்களான மெலனின் அளவு அதிகமாக இருப்பது. அவ்வாறு அதிக நிறமிசெல்கள் உடலில் இருந்தால் அந்த இடமானது கருப்பாக இருக்கும். சிலர் திடீரென்று கருப்பாக மாறுவார்கள், அதற்கு அவர்களது உடலில் உள்ள நிறமிச் செல்கள் அதிக அளவு மெலனினை சுரக்கும். அதுமட்டுமல்லாமல் இத்தகைய செல்களின் சுரப்புத் தன்மையை குறைவுப்படுத்த பல கெமிக்கல் கலந்த அழகு சாதனப் பொருட்கள் இருந்தாலும், வீட்டில் இருந்தே சில இயற்கையான பொருட்களை வைத்து செய்தால், சருமமானது அழகோடு இருப்பதுடன், மெலனின் அளவையும் கட்டுப்படுத்தலாம்.

- ப3-4 பாதாம் பேஸ்ட், 1/2 டேபிள் ஸ்பூன் பால் மற்றும் 1 டேபிள் ஸ்பூன் தேன் சேர்த்து நன்கு கலந்து கொள்ளவும். பின் அந்த பேஸ்டை முகத்திற்கு தடவி, 30 நிமிடம் ஊற வைத்து பிறகு கழுவவும். அதனை தொடர்ந்து செய்தால் முகத்தில் இருக்கும் கருப்பானது மறையும்.

தொடரும் .. ..

## தையல் கலை

கடந்தவாரத்தின் தொடர்ச்சியாக மேலும் சில ப்ளவுஸ்களின் வடிவமைப்புக்கள்.



# கொட்டியாபுரத்து சிங்கம்

**கொட்டியாபுரம்**
வரலாற்றுக் குறுநாவல்
கி.பி 1600 – 1700 ம் ஆண்டுகளில்
கொட்டியாபுரத்தில் கோலோச்சிய வன்னிமையின் கதை

கடந்த வார தொடர்ச்சி .. ..

அங்கே களைப்பு மேலீட்டினால் தன்னோடு வந்த வீரர்கள் உறக்கம் கொண்டிருந்த போதும் காராளசிங்கனால் உடனேயே உறக்கம் கொள்ள முடியவில்லை.

**சம்பூர் சதீஸின்**

அவன் நாளை நடைபெறப்போகும் நிகழ்வுகளை கற்பனை செய்து கொண்டேயிருந்தான். தான் எவ்வாறு மன்னனுடன் உரையாட வேண்டும் என்றும் மனனம் பண்ணினான். சிறிது பிசகு நேரிட்டாலும் பெருந்தவறு ஏற்பட்டுவிடும் என்று அவன் மனம் பதட்டப்பட்டுக் கொண்டேயிருந்தது. சிறிது நேரத் தூக்கத்தின் பின் பொழுது புலர்வதற்கு முன்னரே நீராடி அரண்மனை செல்வதற்குரிய ஆயத்தங்களை மேற்கொண்டான். மாமனார் கொடுத்தனுப்பிய மடலையும் சரிபார்த்துக்கொண்டான்.

அரண்மனைக் காவலர் வந்து அழைத்ததும், தன்னுடன் வந்த வீரர்களை அங்கேயே இருக்கச் சொல்லிவிட்டு அரசவை நோக்கி அவர்களுடன் நடக்கத் தொடங்கினான். அரசவைக்குள் நுழைந்ததும் அரண்மனை வாயிற்காவலன் தான் வரும் செய்தியை உரக்கக் கூறியதும் அனைவரும் தன்னையே உற்றுக் கவனித்ததைக் கண்டான். மன்னனின் நேரிய பார்வை தன்னை ஒரு கணம் நிலைதடுமாறச் செய்ததை நினைத்து, இவன் பறங்கியருக்கு சிம்ம சொப்பனந்தான் என்றெண்ணியவாறு தன்னை சுதாகரித்துக் கொண்டவன் சிம்மாசனத்திலிருந்த மன்னனை வணங்கிவிட்டு நின்றான். அங்கே சிறிது நேரம் நிசப்தம் நிலவியது.



மன்னன் சைகைகாட்டியதும் செய்து வாசிப்போன் மடல் ஒன்றைப் பார்த்து தமிழில் வாசிக்கத் தொடங்கினான். "இலங்கை மக்களின் காவலர் பறங்கியரை புறமுதுகிட்டோடச் செய்து வருகின்ற கண்டி இராசதானியின் மாமன்னன் செனரத் மகாராஜா அவர்களுக்கு எதிராக கொட்டியாரப்பற்று வன்னிபம் கிளர்ச்சி ஏற்படுத்துவதற்கான சூழ்ச்சியில் இன்னும் சிலருடன் இணைந்து பங்கு கொண்டிருந்ததாக அவர் மீது குற்றச்சாட்டு சுமத்தப்படுகிறது" என்று கூறிவிட்டு நிறுத்தினான். அதைத் தொடர்ந்து செனரத் மன்னனும் கொட்டியார வன்னிபத்துப் பிரதிநிதியே உமது கருத்தைத் தெரிவிக்கலாம் என கூறினார். இங்கு தமிழிலேயே கருத்து தெரிவித்ததால் சிங்கள மொழி தெரிந்திருந்தும் காராளசிங்கன் தமிழர் தேசத்து வழக்கு என்பதால் தமிழிலேயே விசாரணைகள் நடைபெறுவதாக நினைத்துக் கொண்டு தமிழிலே தனது கருத்தை தெரிவிக்கத் தொடங்கினான்.

எங்களுடைய ஈழத்தின் தன்மானத்தைக் காப்பாற்றிக் கொண்டிருக்கின்ற பெருமை மிகுந்த கண்டி இராசதானியின் ராஜாவே! உமது ஆட்சிக்குட்பட்ட கொட்டியாரப்பற்றின் வன்னிபம் அவர்கள் என்றுமே தங்களுடைய ஆணையை ஏற்றுக்கொண்டே பரிபாலனம் செய்து வருகின்றார்கள். அவர் தமது சீரற்ற உடல் நிலையை கருத்திற் கொண்டு அவருடைய மருமகனான காராளசிங்கன் ஆகிய என்னை தனது சார்பாக தங்கள் முன்னிலையில் சமூகம் செய்து தன்னை அழைத்ததற்கான காரணங்களை அறிந்து வருமாறு அனுப்பியுள்ளார் என்று தெரிவித்ததோடு வன்னிமையால் கொடுத்தனுப்பப்பட்ட மடலையும் மன்னனுக்குக் கையளித்தான்.

மடலை படித்த மன்னன் முகத்தில் திருப்தியை கண்ட காராளசிங்கன் தனது பணி இனிதே நிறைவேறுகின்றது என உள்ளூர நினைத்து உவகை கொண்டான். மடலைப் படித்து விட்டு நிமிர்ந்த செனரத் மன்னன், காராளசிங்கனே உமது வருகையும் பதிலுரையும் எம்மைத் திருப்தி கொள்ளச் செய்தன. நீர் விருந்தினர் மாளிகையில் தங்கியிருக்கலாம். நாம் மீண்டும் சந்திப்போம் என்று கூறிவழியனுப்பினார். சிறிது நேரத்தின் பின் அரசவை கலையச் செய்து மந்திரியோடு உரையாடிய வண்ணம் அரசவையை விட்டு வெளியேறினான்.



இருள் சூழத் தொடங்கிய போது அரண்மனையில் இருந்து அழைப்பு வராததனால் காராளசிங்கன் மனம் குழப்பமடையத் தொடங்கியது. மீண்டும் மீண்டும் அரசவை நிகழ்வுகளை நினைவுபடுத்திக் கொண்டேயிருந்தான். நீண்ட நேரமாக வாயிற்புறமாகவே பார்த்துக் கொண்டிருந்தவனுக்கு காவலர் இருவர் தன்னை நோக்கி வருவதைக் கண்ட பின்னரே பரிசாகப் பொதியை எடுத்துக் கொண்டு அவர்களுடன் அரண்மனைக்குள்ளே புகுந்தான். அங்கே கண்டியரசனைக் கண்டதும் தலை தாழ்த்தி வணங்கினான். பின்னர் இருவரும் கொட்டியாபுரப்பற்று, திருகோணமலை, தம்பலகாமப்பற்று, பறங்கியர்கள் கட்டும் கோட்டைகள், உலாந்தாக்காரரின் நடவடிக்கைகள்,, வன்னிபத்தின் சுகங்கள் முதலியவைகளை பலமணி நேரமாக அளாவினர்.

கொட்டியாரத்திலுள்ள கொட்டியாரத்துறை மற்றும் இலங்கைத் துறை முதலியவற்றின் முக்கியத்துவம் காரணமாக கண்டி மன்னனுக்கு இயல்பாகவே கொட்டியாரப் பற்றின் மேல் ஒரு தனிப்பார்வையுண்டு.

... பாகம் 06 தொடரும் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## விபுலானந்தர் நினைவு – கிரிக்கட்

சுவாமி விபுலானந்தர் அவர்களின் நினைவு தினத்தை சிறப்பிக்கும் முகமாக மட்டக்களப்பு கல்லடி கிழக்குப் பல்கலைக் கழக சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம் ஏற்பாடு செய்திருந்த மாணவர்கள் மற்றும் அலுவலர்கள் பங்கு பற்றும் கிரிக்கட் சுற்றுப் போட்டி மிகப்பிரமாண்டமான முறையில் சிவானந்தா தேசிய பாடசாலை மைதானத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இந் நிகழ்விற்கு கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி.கிட்ணன் கோவிந்தராஜா பிரதம விருந்தினராக கலந்து கொண்டதுடன், அதிதிகள் சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவக பணிப்பாளர் கலாநிதி க.பிறேமகுமார், சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவக சிரேஷ்ட உதவிப் பதிவாளர் ஏ.ஜே.கிறிஷ்டி உட்பட விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இங்கு SVIAS CHALLENGERS, SVIAS ELEVATION, SVIAS HARMONY, SVIAS CREATION , SVIAS RHYTHMS ஆகிய அணிகளுக்கிடையே கிரிக்கட் சுற்றுப் போட்டிகள் நடைபெற்றது. இதன்போது முதலாம் இடத்தை SVIAS CHALLENGERS அணியினரும், இரண்டாம் இடத்தை SVIAS RHYTHMS அணியினரும் பெற்றுக் கொண்டனர். இவர்களுக்கு அதிதிகளால் வெற்றிக் கேடயம் என்பன வழங்கி கௌரவிக்கப்பட்டது.











## தேசிய சம்பியன்

40வது தேசிய மென்பந்து கிரிக்கட் சுற்றுப் போட்டியில் கிழக்கு மாகாண அட்டாளைச்சேனை பிரதேச செயலக அணியினர் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளதை அடுத்து, அம்பாறை மாவட்டத்தில் விளையாட்டுத் துறைக்கான போதிய வளங்களும் வசதிகளுமற்ற நிலையில் தங்களின் கூட்டு முயற்சியினால் கிழக்கு மாகாணத்துக்கு பெருமை சேர்த்துத் தந்த இந்த விளையாட்டு வீரர்களுக்கு வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதில் கிழக்கு மாகாண சபை உறுப்பினரான ஏ.எல.எம்.நஸீர் தெரிவித்துள்ளார்.

கடந்த 29.06 கொழும்பு விளையாட்டு அபிவிருத்தி திணைக்கள மைதானத்தில் நடைபெற்ற தேசிய மட்ட கிரிக்கட் சுற்றுப்போட்டியில் பங்கு பற்றி முழு கிழக்கு மாகாணத்திற்கும் பெருமையையும், கௌரவத்தையும் முதன் முதலாக பெற்றுத் தந்துள்ளனர்.



## பாலர் பாடசாலை இல்ல போட்டி

புதிய வளத்தாப்பிட்டி கிறேஸ் பாலர் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டு போட்டி கடந்த ஞாயிறு அன்று நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண சபை உறுப்பினர் மு.இராஜேஸ்வரன் அவர்கள் கலந்து சிறப்பித்தார்.





வெகு சிறப்பாக நடைபெற்ற பாலர் விளையாட்டு நிகழ்வுகள் போட்டி களை காண வந்தவர் களை வெகுவாக கவர்ந்தது.

இங்கு உரையாற்றிய மாகாண சபை உறுப்பினர் இப் பாலர் பாடசாலைக்கம், இப்பிரதேசத்தில் உள்ள சிவன் ஆலயம் ஒன்றுக்கும் இவ்வருடம் எனது பண்முகப்படுத்தப்பட நிதியில் இருந்து நிதியுதவி செய்யவுள்ளேன் என உறுதியளித்தார்.





## கிரிக்கட் சுற்றுப் பயணம்

தென் ஆபிரிக்கா கிரிக்கெட் அணி இலங்கையில் சுற்றுப்பயணம் செய்துள்ளது. ஒரு நாள் தொடருக்கு முன் இலங்கை கிரிக்கெட் சபைத் தலைவர்அணியுடன் பயிற்சி ஆட்டத்தில் மொரட்டுவவில் விளையாடி வருகிறது.

நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி களத்தடுப்பை தேர்வு செய்தது. தென்ஆபிரிக்காவின் ஆம்லா டிகொக் தொடக்க வீரர்களாக களமறங்கினார்கள். தென்ஆபிரிக்க அணி கப்டன் டிவில்லியர்ஸ் 41 ஓட்டங்கள் எடுத்த நிலையில் வெளியேறினார். மறுமுனையில் சிறப்பாக விளையாடிய அம்லா சதமடித்தார்.

இந்நிலையில் இலங்கை அணிக்கு அஞ்சலோ மெத்தியூஸ் தலைமை தாங்குகிறார். இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி 3 ஒருநாள் போட்டிகளிலும் 2 டெஸ்ட் போட்டிகளிலும் விளையாடவுள்ளது.

இந்நிலையில் இரு அணிகளுக்குமிடையிலான ஒருநாள் போட்டி எதிர்வரும் 6 ஆம்திகதி கொழும்பு ஆர்.பிரேமதாஸ சர்வதேச விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேசச் செய்திகள்

## மேலும் 200 வீரர்கள்



ஈராக்குக்கு மேலும் 200 இராணுவ வீரர்களை அனுப்ப அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா ஒப்பதல் அளித்துள்ளார். ஈராக்கில் ஷியா அரசுக்கு எதிராக சுன்னிபிரிவை சேர்ந்த 'ஐ.எஸ்.ஐ.எஸ்.' போராளிகள் உள்நாட்டு போரில் ஈடுபட்டுள்ளனர். ஈராக் இராணுவம் பலத்துடன் உள்ள போதும் போராளிகளை கட்டுப்படுத்த முடியவில்லை.

காரணம் அவர்களிடம் அதிநவீன போர்க்கருவிகள் உள்ளன. அவற்றை சுன்னிபிரிவை சேர்ந்த அண்டை நாடுகள் வழங்கி உள்ளன.

## டொப் லெஸ் மோடல்



டென்மார்க் நாட்டில் உள்ள ஒரு தொலைக்காட்சி நிறுவனம் தான் புதிதாக ஆரம்பிக்கவுள்ள ஒரு தொடரை விளம்பரப்படுத்துவதற்காக டாப்லெஸ் பெண் ஒருவருக்கு உடை போன்ற பெயிண்ட் அடித்து சாலையில் நடக்கவைத்து வீடியோ எடுத்து வெளியிட்டுள்ளது. இந்த வீடியோ யூடியூப் இணையதளத்தில் சாதனை புரிந்துள்ளது.

## பிரேசிலில் இடிந்ததால் பரபரப்பு



உலகக்கோப்பை பரபரப்பாக நடந்து கொண்டிருக்கும் பிரேசில் நாட்டில் உள்ள ஒரு முக்கிய நகரில் உள்ள பாலம் திடீரென இடிந்து விழுந்ததால் ஏற்பட்ட விபத்தில் 2 பேர் பலியாகினர்.

மேலும் 19 பேர் படுகாயம் அடைந்து உயிருக்கும் போராடிய நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பாலத்தின் கீழும் நேற்று பிசியாக வாகனங்கள் சென்று கொண்டிருக்கும்போது மாலை 3 மணியள்வில் திடீரென இடிந்து விழுந்த்து. இடிந்த பாலத்தின் இடிபாடுகளுக்கு இடையே ஒரு பள்ளி பேருந்து உள்பட பல வாகனங்கள் சிக்கிக்கொண்டன. அந்த இடமே பெரும் பரபரப்பு அடைந்தது.

## ஷூ கேமரா – கண்டுபிடிப்பு

ஜப்பானின் Kyoto என்ற நகரில் இரண்டு இளைஞர்கள் நேற்று ஒரு பள்ளி மாணவியின் அருகில் நின்று ஷூ கேமரா மூலம் மாணவியின் அந்தரங்க பகுதியை புகைப்படம் எடுப்பதை தற்செயலாக பார்த்த ஒரு போலீஸ் அதிகாரி அந்த நபரை கைது செய்தார். அந்த நபருக்கு அருகில் இருந்த அவருடைய நண்பரும் இதேபோல் தனது ஷூகேமராவில் அந்தரங்க பகுதிகளை படமெடுத்துள்ளதாக தெரியவந்ததால் இருவரும் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் நடத்திய விசாரணையின் பேரில் ஆன்லைனில் கேமரா ஷூ விற்கும் இரண்டு நபர்களையும் போலீஸார் அதிரடியாக கைது செய்துள்ளனர்.

## அச்சுறுத்தும் வட கொரியா




சீனா, தென்கொரியா நாடுகளுக்கு தொடர்ந்தும் வடகொரியா அச்சுறுத்தல் கொடுத்து வருகிறது. வடகொரியா, தனது ஆயுத பலத்தை நிஷரூபிக்கும் விதமாக அடிக்கடி ஏவுகணை பரிசோதனை நடத்தி வருகிறது. இதைத்தொடர்ந்து கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை உள்ளிட்ட நீண்ட தூர ஏவுகணைகளை தயாரிக்கக்கூடாதென வடகொரியாவை ஐ.நா எச்சரித்திருந்தது. ஆனால் இதையும் மீறி அந்த நாடு ஏவுகணை பரிசோதனைகளை நடத்தி வருகிறது.

## 72மணி நேரத்தின் பின் உயிருடன்



சென்னை போரூர் அருகில் அடுக்குமாடி கட்டிடம் இடிந்து விழுந்த மூன்றாவது நாள் காலையில் தேசிய பேரிடர் மீட்பு படையின் மோப்ப நாய் ரஸ்டாம் இடிபாடுகளுக்கிடையே மோப்பம் பிடித்து வந்தது. உடனடியாக துரிதமாக செயல்பட்ட மீட்புப்படையினர் எட்டு மணி நேரம் போராடி மஞ்சள் நிற டீசர்ட் அணிந்த ஒடிசாவை சேர்ந்த 29 வயதான விகாஸ் குமார் என்பவரை உயிருடன் மீட்டனர். மீட்கப்பட்ட பின் அவர் கேட்ட முதல் கேள்வி என்ன தெரியுமா? தனது செருப்பு எங்கே என்று அவர் மீட்பு படையினரைப் பார்த்து கேட்டுள்ளார். அவருக்கு பொறுமையாக பதிலளித்த மீட்பு படை தலைவரான எம். கே. வர்மா, புதிய செருப்பை தானே அவருக்கு வாங்கி தருவதாக தெரிவித்துள்ளார்.

## ஒரு கை இழந்தவருக்கு அபராதம்



ஜெர்மனியில் ஒருகையை இழந்த ஒருவர் சைக்கிள் ஓட்டியதால் போலீஸார் அபராதம் கட்டச்சொல்லி கட்டாயப்படுத்தியுள்ளனர். இதை வி'யத்தை ஜெர்மனி ஊடகங்கள் பெரிய பிரச்சனையாக்கியதால் வேறு வழியின்றி அரசு மன்னிப்பு கேட்டதோடு, அவருடைய அபராதத் தொகையை திருப்பிகொடுக்கவும் செய்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு மூட்டை நெல்லைப் பாதுகாக்க 8 கிலோ மீற்றர் பயணிக்கும் தென்னமரவாடி மக்கள்

## மின்வசதி செய்ய முயற்சி - சத்தியன்



திருகோணமலையின் எல்லைக் கிராமமும் மிகப் பழமை வாய்ந்த கிராமமுமான தென்னமரவாடி மக்கள் தமது உணவுப் பொருட்களை யானையிடம் இருந்து காப்பாற்றுவதற்காக சுமார் எட்டு கிலோமீற்றர் தூரத்தைக் கடந்து செல்வதாக தெரிவித்துள்ளனர்.

புல்மோட்டைப் பிரதேசத்திலேயே அவற்றைப் பாதுகாக்க வேண்டியிருப்பதாகத் தெரிவித்த அவர்கள் தமக்கான அடிப்படை வசதிகள் எவையும் தற்போதுவரை செயற்படுத்தப்படாமல் இருப்பதாகவும் தெரிவித்தனர்.

2011ம் ஆண்டு சில நிறுவனங்களினால் அமைத்துக் கொடுக்கப்பட்ட தற்காலிக வீடுகளிலேயே தற்போதும் இவர்கள் வசிப்பதாக அங்குச் சென்று திரும்பிய ஈ.பி.ஆர்..எல்.எவ் பத்தமநாபா அணியின் திருகோணமலை மாவட்ட அணியின் சத்தியன் தெரிவித்தார்.

கடந்த 28.06.2014 அன்று அங்கு சென்ற சத்தியன் தலமையிலான குழுவினர் அக் கிராம மக்களிடம் சந்திப்பை நடத்தியுள்ளார்கள்.

அக் கிராமத்தில் வசிப்பவரான தில்லைநாயகம் என்பவர் கூறுகையில் எமக்கு தேவைபடுவதெல்லாம் குடியிருப்பதற்கு முறையான வீடு வசதி, மின்சாரம். இவ் அடிப்படை வசதிகளை செய்து கொடுத்தாலே எங்கள் வாழ்வாதாரங்களை 13

# கிழக்கின் தவிசாளரை மாற்றும் முயற்சி தொடர்பில் கவனத்திற் கொள்வோம்



## இம்ரான் மஹ்ரூப் - ஐ.தே.க

கிழக்கு மாகாண சபைத் தவிசாளருக்கு எதிராக முஸ்லிம் காங்கிரஸ் கொண்டு வரவுள்ளதாக கூறப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணை விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவு கோரப்படுமிடத்து அது குறித்து கவனத்தில் கொள்ளப்படும் என கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை ( தோப்பூரில் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களுடனான சந்திப்பின் போது இவ்வாறு அவர் கூறினார். அளுத்கம, பேருவளை சம்பவங்கள் தொடர்பாக கிழக்கு கடந்த மாகாணசபை அமர்வின் போது முஸ்லிம் காங்கிரஸ் கொண்டு வந்த பிரேரணையை சபையில் சமர்ப்பிக்க தவிசாளர் மறுப்புத் தெரிவித்தார். இது தொடர்பில் அவருக்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரவுள்ளதாக முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்தது.

கிழக்கு மாகாண சபையைப் பொறுத்தவரை முஸ்லிம் காங்கிரசுக்கு 7 ஆசனங்கள் மட்டுமே உள்ளன. எனவே இப் பிரேரணையை வெற்றிபெறச் செய்ய வேறு கட்சிகளின் ஆதவு முஸ்லிம் காங்கிரசுக்கு தேவை. இது விடயத்தில் அது ஐக்கிய தேசியக்கட்சியின் ஆதரவைக் 13

# திறந்து கிடக்கும் தொடருந்துக் கடவை

(கலாரதன்)



திருக்கோணமலை கணேஸ் லேன் மற்றும் பாலையூற்று லூர்து மாதா தேவாலயம் மற்றும் பாடசாலையை இணைக்கும் வீதியிலுள்ள தொடருந்துக் கடவை பாதுகாப்பற்ற முறையில் காணப்படுவதால் விபத்துக்கள் நடக்கும் வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன.

குறிப்பாக பாடசாலை மாணவர்கள்,பொதுமக்கள் பலர் அன்றாடம் பாவிக்கும் வீதி இதுவாகும். இப் புகையிரதப் பாதை மற்றும் வீதிக்கு குறுக்கே சிறு தடுப்பு மட்டுமே உள்ளது. ஆனாலும் அது முழுமையாக புகையிரதம் வரும் 13

# தனவந்தரின் உதவியுடன் கற்கச் சென்ற பெண்ணைத் தேடும் காவல்துறை

மட்டக்களப்பு-செங்கலடி மத்திய கல்லூரியின் உயர்தர வகுப்பு மாணவி ஒருவரை கடந்த பத்து நாட்களாக காணவில்லையென ஏறாவூர் காவல் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

வந்தாறுமூலை - உப்போடை வீதியைச் சேர்ந்த 19 வயதுடைய கோபாலப்பிள்ளை ஐஸ்வர்யா என்ற மாணவி கடந்த மாதம், அதிகாலை கடிதமொன்றை எழுதி வைத்துவிட்டு வீட்டிலிருந்து சென்றுள்ளார்.

"தனவந்தர் ஒருவரது உதவியுடன் தான் உயர் கல்வியைத் தொடரப் போகிறேன். ஐந்து வருடங்களின் பின்னரே வீடு திரும்புவேன்" என அக்கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏறாவூர் காவல்துறை இச்சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (தேவா)

# நாளொன்றுக்கு நால்வர் தற்கொலை முயற்சி

திருகோணமலை மாவட்டத்தில் நாளொன்றுக்கு மூவர் அல்லது நால்வர் தற்கொலை முயற்சியில் ஈடுபடுவதாக பொது வைத்தியசாலையின் உளநலப்பிரிவினர் தெரிவித்துள்ளனர். அண்மையில் கிழக்கு மாகாணச் சமூக சேவைகள் திணைக்களத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே இத்தகவல் வெளியானது.

பதின்மூன்று வயதினரே பெரும்பாலும் தற்கொலைக்கு முயன்றுவருவதாகத் தெரிவித்துள்ள அவர்கள் திருகோணமலை, கிண்ணியா, மூதூர் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே பெரும்பாலானவர்களாக இருக்கின்றார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலான தற்கொலைகளுக்கு குடும்ப முரண்பாடுகளே காரணம் எனத் தெரிவித்துள்ள அவர்கள் சிறுவர்களின் மனநிலை விருத்திக்கு முக்கியத்துவம் கொடுக்கும் பட்சத்திலேயே இவை தவிர்க்கப்படும் என்றும் தெரிவித்துள்ளனர். (சமி)

# புல்மோட்டையில் உயர்தரப் பரீட்சை

திருகோமணலை மாவட்டம் புல்மோட்டைப் பிரதேசத்தில் முதன் முதலாக உயர்தரப் பரீட்சை நிலையத்தை அமைக்க பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுமதியளித்துள்ளார்.

இவ்வனுமதிக்கமைய இவ்வருடம் நடைபெறவுள்ள பரீட்சைகளுக்கான நிலையத்தை புல்மோட்டை மத்திய மகா வித்தியாலயத்தில் உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முன்னர் இப்பிரதேசத்தில் உள்ள மாணவர்கள் நகரையண்டிய பிரதேசங்களுக்கு நாளாந்தம் பயணித்துப் பரீட்சைகளுக்கு சமூகமளித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (சமி)

# மாவட்டங்களில் ஊடகப் பாடசாலை - 2014

## தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் முயற்சி

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஊடகப் பிரிவினால் பாடசாலை மாணவர்களுக்கான ஊடகப் பாடசலை 2014 என்ற திட்டம் மாவட்ட அடிப்படையில் முன்னெடுக்கப்படவுள்ளது.

பாடசாலை மாணவர்களிடையே ஊடகத்துறையில் ஆர்வத்தையும் அறிவையும் அதிகரிப்பதற்கான செயன்முறையாக இத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதன்படி மாவட்டமொன்றில் குறைந்தது இருபது பாடசாலையிலுள்ள மாணவர்களைத் திரட்டி அவர்களுக்கு ஊடகத்துறையில் தேர்ச்சி பெற்றவர்களின் பங்களிப்புடன் பயிற்சிகளை வழங்க திட்டமிட்டுள்ளதாகத் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினர் தெரிவித்துள்ளனர். (மதி)

# உரிய அதிபர்களின்றிக் கிழக்கில் 12 தேசிய பாடசாலைகள்

கிழக்கு மாகாணத்தில் உள்ள பன்னிரெண்டு தேசிய பாடசாலைகளுக்கு உரிய தரத்தைக் கொண்ட அதிபர்கள் தற்போதுவரை நியமிக்கப்படவில்லை என தெரியவந்துள்ளது.

தேசிய பாடசாலைக்குத் தேவையான தகுதிகளான கல்வி நிர்வாக சேவை அல்லது அதிபர் சேவையின் தரம் 1 ஆகியவற்றைக் கொண்டவர்கள் தேசிய பாடசாலைகளின் அதிபர்களாக வருவதற்கு ஆர்வம் அற்றிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அதிபர் தரம் 1ற்குப் பதவியுயர்வைப் பெறக் காத்திருப்பவர்கள் நீண்டநாட்களாகக் காத்திருப்பதும் ஒரு காரணம் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (நவா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org